ம்பாய்த் தமிழ்ச் சங்கம்

நாடக-இசை விழா மலர் அக்டோபர் 1971

B2 : 120

மலரின் இதழ்களிலே...

ஆசிரியர் :
"வேணு"

★

உதவி :
ஏ. சுப்பராமன்
கே. கிருஷ்ணசாமி
ஒ. கே. சுப்பராயலு
ஆர். ராகவன்
ஆர். சபரி
ஆர். சங்கரன்

★

கலை :
பால் பெருமாள்

★

அச்சிட்டோர் :
சேவக் அச்சகம்
பம்பாய்-19

★

வெளியீடு :
பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

கட்டுரை

33 சங்ககால நாடகம் — ம. ரா. போ. குருசாமி
43 நாடக ஆசிரியனும் அரங்கமும் — குடியேற்றம் ஈ. நாகராஜ்
49 இசைச் சிந்தனைகள் — எஸ். பாலசந்தர்
67 மனோகர மேடை — காந்தன்
73 இந்திய நாடக மேடை — நவீன் காண்ட்வாலா
93 தமிழ்க் கவிதையும் புதுமையும் — நா. பார்த்தசாரதி
103 தெலுங்கில் அரங்கு — எம். ஜி. சாரி
117 மனமேடை ஓவியங்கள் — ஆர். பி. ஐயர்
129 'கிளைமாக்ஸ் ஸீன்' — பூர்ணம் விஸ்வநாதன்
145 வீணையின் யோகம் — டி. வி. ராமானுஜம்
149 தமிழில் நாடகங்கள் — நாரண துரைக்கண்ணன்
155 நாடக உருவம் — "வேணு"

கவிதை

41 அருட்கொடை — தமிழழகன்
71 தரிசனம் — நா. சீ. வரதராஜன்
113 வற்றாத கடல்போலும் வாழி ஊழி — முருகேசனார்
123 ஒன்றிடுவாயோ ஒதுங்கிடுவாயோ — வெ. கலைக்கூத்தன்
139 உனக்குப் பிடித்தது — "கலைவாணன்"

சிறுகதை

57 புரட்சிக்காரி — ராஜம் கிருஷ்ணன்
81 களம் — 'பாவை' பார்வதி

கதைச் சுருக்கம்

97 சூரபத்மன்
99 சிசுபாலன்
101 சாணக்கிய சபதம்

பிற

21 திருமுக மடல்
23 பணியும் பயனும்
137 நிகழ்ச்சி நிரல்
179 Index to Advertisers

WHY ARE THESE SWEETS A BETTER BUY?

they're made with

MAIZE PRODUCTS'

GLUCOSE !

MAIZE PRODUCTS' high grade Liquid Glucose and Dextrose Powder go into the best sweets, toffee and chocolates ..give longer shelf life, mean extra energy !

WHY IS THIS SHIRT A BETTER BUY?

it's treated with

MAIZE PRODUCTS'

FABRILOSE!

MAIZE PRODUCTS' Fabrilose is thin boiling starch. It is used in making fine and superfine cloth. Ideal for sizing and finishing, it imparts strength, body, smoothness and gloss !

MAIZE PRODUCTS
A Division of Sayaji Mills Limited
Kathwada, Ahmedabad 2

Sole Selling Agents :
C. DOCTOR & COMPANY PRIVATE LIMITED
Bombay · Ahmedabad · Calcutta

SHBI-BP-19

திருமுக மடல்

சந்தனம் சூழ் பொருப்பெனும் பொதிகையில் பிறந்து, பொன்னுடல் இன்புற பொன்னியில் நீர் விளையாடி, வண்ணப் பூந்துகிலுடுத்தி. கற்பனைத் தேனிதழ் திருத்தி, காவியமெனும் மணிக் கொங்கை குலுங்க, சொற்படு நயமும் இசை தோய்ந்திட தொகுப்பதின் சுவையும் அறிந்த விற்பனத் தமிழ்ப் புலவோரது நாவெனும் இருக்கை ஏறி, கொலுவிருக்கும் எம் சிந்தையள்ளும் செந்தமிழ்ச் செல்வியே !

சிந்தையும் செயலும் தூய்மையோடு எண்ணமெனும் வண்ணச் சோலையிலே பறித்த மலரிது. இதை உன் நறுமலர் கூந்தலில் இல்லாவிட்டாலும், அடிக் கமலத்தில் சூடி, எங்கள் பணிக்கு நிறைவு காட்டுவாய், அம்மா !

சோலையிலே இந்த மலர் விரிந்து மணம் பரப்ப உழைத்த உன் தொண்டர்கள்—ஓவியக் கலைஞர்கள், சிந்தனை மேதைகள், அச்சகத்துச் சிற்பிகள், விளம்பரம் அளித்த வணிக உலகப் புரவலர்கள், உடலாலும் உள்ளத்தாலும் தன் ஒத்துழைப்பை நல்கிய சங்கத் துணைவர்கள்—யாவரும் இச் சிறு மலரை, என்று பிறந்தவள் என்றறியாத இயல்பினளான உன் இணையடியில் வைத்து வழிபடுகிறோம்.

TROMBAY SERVES AGRICULTURE & INDUSTRY

Manufacturers of :

SUPHALA 20:20:2, 18:18:9 AND 15:15:15
Complex Fertilizer and Urea 45% Nitrogen

AND

AMMONIUM BI CARBONATE (IS-2697-1964)
FOOD Grade & IP Grade
METHANOL (BSS 506-1966)
SULPHURIC ACID — 98% (IS-266-1967)
BATTERY GRADE-SP. GRAVITY 1.84 & 1.25
NITRIC ACID — 60% AND 98.5%
ARGON

CONTACT :

Marketing Manager,
THE FERTILIZER CORPORATION OF INDIA LTD.,
Trombay Unit, Chembur. Bombay-74 AS.



காடு, நாடு என்று வேறுபாடு காணமுடியாத வரலாற்றுக்கு அப்பாற்பட்ட அந்தக் கற்காலத்திற்குப் பின்னர்......

உள்ளத்தின் ஊமைத் தனத்தை மாற்றும் ஒலிக்குறிப்பு, மொழி வடிவம் பெற்று மனவாழ்வை விளக்க முற்பட்டதே இலக்கியம் பிறந்த கதை.

இம் மனப்பசி இன்றைய மனிதனின் உடன் பிறப்பு.

“பதி எழு அறியா பழங்குடி மக்கள்” என்பது சங்ககாலப் பெருமை. **“திரைகடலோடியும் திரவியம் தேடு”** என்பது கூட, ‘ஆனால் மீட்டும் உன் நாட்**டிற்கு வந்து சேர்**’ என்ற குறிப்பு தொக்கி நிற்கத்தான் பேசுகிறது. இன்றோ, கல்வி வளர்ச்சி, விஞ்ஞான முன்னேற்றம், வாழ்க்கைத் தேவை என்ற மூன்றும் “யாதும் ஊரே; யாவரும் கேளிர்” எனும் பூங்குன்றனின் புறநானூற்று வரிக்குப் புது விளக்கம் தருகின்றன.



இந்த விளக்கத்தின் வாழ்முறை மேற்கோளே அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேற்பட்ட அளவிலே பம்பாயில் குடியேறிய தமிழர் சமுதாயம்.



பணியும் பயனும்

அவர்கள் "வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்; இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்" என்ற அசாதாரணமான வேகத்துடன் அமரகவி கூறிய இச்சாதாரண உண்மையைத் தெரிந்து வைத்திருந்த காரணத்தால், "தேடிச் சோறு நிதம் கண்டு" மட்டும் அல்லாமல், "இனிமைத் தமிழ்மொழி எமது; அது இன்பம் தரும்படி வாய்த்தநல் அமுது" எனும் பாவேந்தரின், நாவும் மனமும் மணக்கும் நல்லுணர்வைப் பேணக் கண்டனர் இம்மொழியமைப்பில், கால் நூற்றுண்டு காலத்துக்கு முன்பே.

இன்று அது பம்பாய்த் தமிழ்ச் சங்கம் என்ற பெருமை மிக்க பெயரோடு ஆலும் அருகும் போல் தழைத்தும் பரவியும் நிற்கிறது.

இங்கு.....

கிழமை தோறும் நடைபெறும் இலக்கியக் கூட்டங்கள் பம்பாய்த் தமிழ் இனத்தின் தமிழிலக்கிய உணர்வையும், சுவைத் திறத்தையும் வளர்த்து, "தெருவெங்கும் தமிழ்முழக்கம் செய்தல் வேண்டும்" என்ற கவிக்குயிலின் கனவை நனவாக்குகின்றது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்பதற்கிணங்க தமிழ் மூலத்திலும், தமிழ் ஆக்கமாகவும் அமைந்துள்ள பல ஆயிரம் புத்தகங்களைத் தாங்கிக் கொண்டு பெருமளவில் பயன்தரும் எழிலொடு இயங்கும் நூலகம் ஓர் அறிவாலயம்.

மொழித்திறனும், மொழிகின்ற தெளிவு மேன்மையும் பெற்ற பல பெரும் தமிழறிஞர்களை அழைத்து,ஆண்டுதோறும் எடுக்கும் இலக்கிய விழாக்கள் ஆராய்ச்சி அறிவை வளர்த்து, ஆழ நுணுகி கற்பதைத் தூண்டி, சிந்தனைத் தடத்தைச் சீர்படுத்தி அமையும் செஞ்சொற்களின் மங்கல முழக்கங்கள்.

அவ்வப்போது வருகை தருகின்ற பெரியோர்களை முகமலர்ந்து கரம் வணங்க சிறப்பித்துப் பாராட்டும் வரவேற்புகள் பம்பாய்த் தமிழ்ச் சமுதாயம் சான்றோர்களுக்கு அளிக்கும் தலைவணக்கங்கள்.

ஆண்டுதோறும் தமிழகத்தின் புகழ்பெற்ற கலைஞர்களைக் கொண்டும், அவ்வப்போது சங்கத்தோடு அன்புறவு கொண்டுள்ள கலைதெரி நயம் படைத்த தோழர்களையும் தோழியர்களையும் கொண்டு நடைபெறும் நாடகங்கள் மேடையில் மின்னும் அற்புதமான ஒளிவிளக்குகள்.

தமிழகத்தின் நடனஉலகின் மணிகளாக விளங்கும் கலையரசிகளையும், பம்பாய்ப் பரதநாட்டிய உலகின் கலைமாமணிகளையும்மேடையின் பொன்னியல்பூங்கொடிகளாக ஆடக்காணும் நிகழ்ச்சிகள் நெஞ்சம் நீங்கா சலங்கையொலிகள்.

யாழும், குழலும், முழவும், தீங்கனித் தேன்குரலும் நாத தாரையாகப் புகழ் பெற்ற சங்கீத விற்பன்னர்களின் கற்பனைத்திறத்தில் வடிந்திடும் இசைநிகழ்ச்சிகள் காணமுதம் படைக்கும் விந்தைக் காட்சிகள்.

தமிழிலக்கியத்தினை வளப்படுத்திய சான்றோர்களின் நினைவினைப் பேணும் பெருநாட்கள், தமிழர் சமுதாயம் கொண்டாடும் திருநாட்கள், தேசீய தினங்கள் இவற்றினையொட்டி அமையும் சிறப்புப் பொருத்தமிக்க நிகழ்ச்சிகள் சங்கம் பெருமையும் மகிழ்ச்சியும் மிகுந்த நினைவுகளுக்கு செலுத்தும் வீரவணக்கங்கள்.

ஏற்றமிக்க எண்ணங்களையும், எழில் மிக்க கருத்துக்களையும் ஏட்டிலே தேக்கி, அவை நாட்டிலும் வீட்டிலும் நாளென்றென்றும் அழியாத சிந்தனைக் கருவூலங்களாக விளங்கும் வகையில் மலர்ந்திடும் நூல்களும் மற்ற வெளியீடுகளும் ஆக்கமான தமிழ்ப் பணிகள்.

வளரும் பயிரினை முளையிலே காக்கும் வகையோடு தளராத ஊக்கத்தினை வகையோடு நல்கும் வழியோடு அமைக்கப்படும் இசைஇலக்கியப் போட்டிகளும், அவற்றில் வெற்றி பெற்ற இளைஞர்களுக்கு ஏற்றமிக்க முறையில் நல்கும் பரிசுப் பதக்கங்களும் இளந் தலைமுறையினருக்கு இத்தலைமுறையினர் காட்டும் நல்லாதரவு

இன்னும், பள்ளி இறுதி அயல் ஆண்டிலும், இறுதி ஆண்டிலும் தமிழில் உயர்சிறப்புடன் தேர்வு பெறும் மாணவ குலத்திற்குச் சங்கம் அளிக்கும் கல்விப் பணமும் பதக்கமும் காலத்தால் அமையும் உதவிகள்.

பிறந்த மண்ணின் மொழியறிவில் புலமைநிறைவுகாணும் வண்ணமுடனும், புகுந்த மண்ணின் மொழிச்சுவையில் பழகுகின்ற தெளிவு காணும் வகையும் அமைய வேண்டி நடைபெறும் தமிழ்ப் புலவர் தேர்வு, மராத்தி மொழி வகுப்புக்கள் சங்கம் புரியும் தங்கமான செயல்கள்.

தமிழகத்தினின்று வெளியாகும் நல்லபல நாள், கிழமை, திங்கள், பருவ ஏடுகளை வரவழைத்து வாசகர்கள் பயனுக்கு வழங்கிடும் படிப்பகம் அறிவிலே விரிவு மலர வழிசெய்யும் அமைப்பு முறை.

சங்க அன்பர்கள் அவ்வப்போது எழில் கொழிக்கும் இயற்கை இன்பம் காண, நகரத்தின் இயந்திர வாழ்க்கையினின்று ஒரு சிறிது நேரம் விடுதலை பெற்றுச் செல்லும் உல்லாசப் பயணங்கள் இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்த நாட்கள். இன-நிற வேறுபாடின்றி எவர்க்கும் இடமளிக்கும் சங்கக் கட்டிடம் உயிரும் உறவும், உணர்வும் மிகுந்த ஓர் உரமான இயக்கம்.

'உலகம்' என்ற பொதுமறையோடு தான் தமிழ் பேசுகின்றது. எனவே, இது உள்ளவரையில் தமிழும் வாழும்.

—(ஆ-ர்.)



STURDY BASE FOR INDUSTRIAL PACE ... WITH

SANKAR CEMENT

IS:269 ISI

FOR LASTING GRANITIC STRENGTH

Guaranteed by ISI hallmark

IS:269 ISI

INDIA CEMENTS LTD., Dhun Building, Madras-2

Over 25 years' standing — ever expanding!

7, Chittaranjan Avenue, Calcutta-13

'Kasturi Buildings' 171-172, Jamshedji Tata Road, Bombay-20

K 9, South Extension Part 1, New Delhi-49

For FREE TECHNICAL ADVICE, CONTACT: CEMENT SERVICE BUREAU, 'THE GROVE', MADRAS-18

FDSIC-1535 R

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

நிர்வாகக்குழு...

1971

தலைவர்	:	திரு. கே. கிருஷ்ணசுவாமி
உபதலைவர்கள்	:	திரு. கே. வேங்கடாச்சாரி
		திரு. ஆதிலக்ஷ்மணன்
செயலாளர்கள்	:	திரு. கே. சுந்தரேசன்
		திரு. எஸ். ராமதாஸ்
பொருளாளர்	:	திரு. ஆர். சங்கரன்
உறுப்பினர்கள்	:	டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்
		திரு. வே. நாகராஜன் ("வேணு")
		திரு. எஸ். வி. ராமானுஜம்
		திரு. எஸ். வி. ரமணி
		திரு. வெ. கலைக்கூத்தன்
		திரு. கே. எம். இராமசாமி
		திரு ஏ. ராஜாராம்
		திருமதி பத்மா கிருஷ்ணசுவாமி
		திருமதி ராஜம் ராமானுஜம்
தணிக்கையாளர்	:	திரு. ஆர். கிருஷ்ணய்யர்

கட்டடக் குழு :

தலைவர்	:	டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்
செயலாளர்	:	திரு. எஸ். கந்தசாமி
உறுப்பினர்	:	திரு. சி. வி. சுப்பிரமணியம்

திரு. கே. கிருஷ்ணசாமி
சங்கத் தலைவர்



டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்
கட்டிடக் குழுத் தலைவர்

திரு. கே. வேங்கடாச்சாரி
சங்க உப-தலைவர்

திரு. ஆதிலக்ஷ்மணன்
சங்க உப-தலைவர்

With the Best Compliments

of

THE TAJ
TEA & COFFEE DEPOT

Station Road,

Hubli.

Distributors for

Cadbury Fry (Pvt.) Ltd.

Kissan Products Ltd.

With

Compliments

from

W. H. BRADY & CO. LTD.

BRADY HOUSE,

12/14, VEER NARIMAN ROAD,

FORT, BOMBAY-1.

நாடக விழா

கல்கி

ஃபைன் ஆர்ட்ஸ்

குழுவினர்

சங்க

அன்பர்களின்

நாடகம்

''யுகதர்மம்''

சங்க தினம்

திரு. கே. கே. ஷாவுக்கு
பாராட்டு

கலைமகள் தினம்

இலக்கிய விழாவில்
வித்துவான் மு. இராமசாமி

போட்டிப் பரிசு வழங்குதல்

பேராசிரியர்
ம. ரா. போ. குருசாமி.

கோசிக முனிவனுடன் இராமனை அனுப்பிட நேர்ந்தபோது, தயரதன் உள்ளத்துச் செறிந்த துன்ப உணர்வினைக் கம்பர் விளக்குகிறபோது,

' கண்ணிழந்தான் பெற்றிழந்தான்
என உழந்தான் கால வேலான் '

என்று பாடுகிறார். பிறவிக் குருடனுக்கு ஒளியின் திருவிளையாடலிலே தோன்றிக் குலவும் வண்ணக் கோலங்களின் வனப்பெல்லாம் மனத்துக்கு எட்டாதவை; எனவே, அவன் 'துயரம்' என்பது பிறர் நோக்கிலேயன்றி அவன் நோக்கிலே அது உறைக்காத ஒன்று. ஆயின், இடையே கண் ஒளிபெற்று - வண்ணத்தின் வனப்பிலே உள்ளத்தைப் பறிகொடுத்த நிலையில் - மீண்டும் காட்சியுணர்வை இழந்துவிடுகிறான் என்றால், பெறுகின்ற பெருந்துயரை எடுத்துரைக்கச் சொல் இல்லை.

நாடகக் கலையின் தொன்மை வரலாற்றைப் பொறுத்தவரையில் தமிழனின் நிலைமை - குருடனின் இரண்டாம் நிலையைப் போன்றது; பிறவிக் குருடாகவும் நம் தமிழ் நாடக வரலாறு இல்லை; உலக அரங்கின் வரலாற்றிலே நம் தமிழ் நாடக அரங்கின் வரலாறு மிகு பழந்தொன்மைச் சிறப்பினைப் பெற்றிருக்கிறது. ஆனால், அச்சிறப்பின் இருப்பினை உணர்கின்றோமே தவிர அதன் உண்மையான சிறப்புக்களையெல்லாம் நிரல்பட வகுத்துரைத்து, ' இது காண் தொன்மைத் தமிழ் நாடக ஏற்றம்' என்று பீடுகாட்ட இடம் இல்லை.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது தொல்காப்பியம். அந்த இலக்கண நூல் பல நூற்றாண்டுக்கணக்கான இலக்கிய வளத்தின் விளைவாகத்தான் தோன்றியிருக்க முடியும். அந்த வளமெல்லாம் வரலாற்றுச் சுவடுகூட இல்லாமல் மறைந்தொழியவிட்டோம். சுவடு பதிந்திருந்ததைக் கண்ட தொல்காப்பியர் பல குறிப்புக்களைச் சுட்டிச் செல்கிறார். ' நாடகம் ' என்ற

Standardise on

PERKINS 6.354V

VEHICLE DIESEL ENGINE

the most reliable and inexpensive power unit

Why is one engine preferred? For clear exhaust, fast travelling with maximum load, smoothness, manoeuvrability and ease of operation.

Perkins is the ideally suited truck diesel engine because it ensures these regular features with other plus features. For example:—

Direct injection combustion system with distributor type fuel injection pump. Automatic advance and retard of the injection system and hydraulic governing ensure exceptionally low fuel consumption under all operating conditions.

Timing drive through helical gears.

Low weight per unit power and compactness mean extra payload.

All components that require routine service are easily accessible.

12 volt electrical equipment ensures positive and instant starting under normal conditions.

AND SIMPSONS ENSURE GENUINE REPLACEMENT PARTS ARE ALWAYS AVAILABLE READILY

Simpson & Co. Ltd

202/203, Mount Road, Madras-2.
Branches at: Ootacamund, Bangalore, Tiruchirapalli, Secunderabad.



S. 352

கண்ணோட்டத்தில் தொல்காப்பியத்தை நினைக்கின்றபோது

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்......'

என்ற நூற்பாப் பகுதி எவர்க்கும் நினைவில் எழும்.

'நாடக வழக்கு' என்பது 'நாடக மரபு' என்று கொள்ளலாம். 'நாடகம்' என்பது நாம் இன்று நினைக்கிற 'Drama' என்பது தானா என்றால், 'இல்லை' என்று சொல்லி விடுவது அத்துணை எளிதன்று. இன்றைய நாடகப்பாணி, வடிவம் முதலியவற்றை நோக்க, தொல்காப்பியர் குறித்தது Drama இல்லை எனலாம். ஆனால், நாம் நினைக்கின்ற நாடகத்தின் விளைவெல்லாம் - மாற்றமெல்லாம் - வளர்ச்சியெல்லாம் - தோன்றுவதற்கு நிலைக்களனாக இருந்த ஒன்றைத்தான் தொல்காப்பியர் 'நாடக வழக்கு' என்று சொல்லியுள்ளார். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து 'இன்றைய நாடகம்தான் அது என்றும் சொல்லலாம். பெருந்தவறு ஆகாது.

தொல்காப்பியத்திற்கு முன்பு-அதற்கே முதனூலாக இருந்தது அகத்தியம் என்ற இலக்கண நூல். அந்த நூல் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் இயல்களைப் பாரித்துரைத்த இலக்கண நூல் என்று இலக்கிய இலக்கணச் சான்றுகள் வாயிலாக உணர்கின்றோம். ஆயின் கிடைக்காத நூலினைப் பற்றிக் கணித்தறிய முனைவது வரலாற்று மாணவர்க்குப் பயன்படாது. தொன்மை வரலாற்றுச் சுவடு இருந்தமையைச் சுட்டும் ஒரு சான்று என்ற அளவில் அகத்தியச் செய்தியைக்கொள்ளலாம்; அவ்வளவே.

ஆனால், தொல்காப்பியமும் அதன் உரைகளும் தெரிவிக்கின்ற செய்திகளை அத்துணை எளிதாகப் புறக்கணித்து ஒதுக்கி விட முடியாது. மேற்குறித்த சூத்திரத்தில் வரும் 'நாடக வழக்கு' என்பது பற்றி நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கங்கள் வருமாறு:

"......நாடக வழக்கு என மேற்கூறினார் எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையாற்கூறும் நாடக இலக்கணம் போல யாதானும் ஒரே வழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லோர்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட்செய்தல் ஒப்புமை நோக்கி"

- தொல். பொருள் - 3 - நச்சி

"புனைந்துரை வகையாற் கூறுப என்றலின், புலவர் இல்லனவும் கூறுபவாலோ எனின் உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்கு உள்ளனவற்றை ஒழிந்தோர் அறத்தொழுகல் அறமெனக்கருதி அந்நல்லோர்க்கு உள்ளனவற்றைச் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார்..."

தொல். பொருள் - 53 - நச்சி

இப்பகுதிகளிலிருந்து நாம் அறியும் செய்திகள் செய்யுள் (இலக்கிய) மரபிலே இல்லாதன வாரா; உலகியலில் உள்ள ஒரு வினைப்பற்றியதாய் - கற்பனை கலந்ததாய் ஓரிடத்து ஒரு சாராரிடம் நிகழ்ந்தவற்றைப் பொதுவாக்கி உரைப்பதாய் அமைவதே இலக்கியம். கற்பனை என்றால் இல்லாததைச் சொல்வது அன்று...."

அப்படிச் சொல்லும்போது உரைநடையாகச் சொல்லலாம்; பாட்டாகப் பாடலாம்; விடுகதையாக உரைக்கலாம்; நாடகமாகவும் வகுக்கலாம்; காலமும் இடமும் வகுப்பது புலவர் பணி; உலகியலில் காண்பது, கருத்துப்பதிய அறிவுக்கண்கொண்டு காண்பது கலைஞனின் கருப்பொருள்; கண்டதை உணர்வு வழியிலே உருக்கொடுப்பது கலையாகிறது...... உரைநடையாய் காவியமாய், நாடகமாய் ... பிறவாய்.

நாடகத்தை வேத்தியல் என்றும் பொதுவியல் என்றும் இருவகையாகப் பகுத்திருந்தனர். நம் பண்டைத் தமிழர் நாடகத்தைக் "கூத்து" என்ற சொல்லாற்

IOB PROVIDES FREE LIFE INSURANCE COVER

IOB extends free insurance cover to savings account holders.

* There is no medical examination.
* You get the usual rate of interest.
* The premium will be paid by the Bank.

All you are required to do is to open an insurance savings account and maintain a minimum balance.

OUR BRANCHES IN BOMBAY :

1. Andheri
2. Bandra
3. Breach Candy
4. Chembur
5. Fort
6. Ghatkopar
7. Juhu Vile Parle
8. Kalbadevi Road
9. Mahim
10. Mandvi
11. Matunga
12. Matunga Bazaar
13. Opera House
14. Santa Cruz
15. Thana
16. Worli

INDIAN OVERSEAS BANK

Central Office :

151 Mount Road,

MADRAS-2.

குறிப்பது ஒரு வழக்கு. அந்நோக்கிலே 'சாந்திக் கூத்து' 'வெறிக் கூத்து' எனப் பகுப்பதும் உண்டு. 'சாந்திக் கூத்து' நான்கு வகைப்படும். அவை சொர்க்கம், மெய்க் கூத்து, அவிநயம், நாடகம் என்பர்

எனவே சாந்திக்கூத்தில் ஒன்று நாடகம் - இது ஒரு கணிப்பு. இவ்வகையில் நாடகம் என்பது யாதெனின் கதை தழுவி வரும் 'கூத்து' என்பர். இங்கே 'கூத்து' என்பது நாட்டியமாகும். கதையினை அடிப்படையாக வைத்து நடத்தும் நடன நிகழ்ச்சியே 'நாடகம்' என்று இதிலிருந்து அறிகின்றோம். ஆனால், நாடகம் என்பதற்கு இஃது ஒரு பொருளேயன்றி இதுமட்டும் அதன் பொருளாகாது. "உள்ளத்து நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புலப்படுத்துவதற்கு அவிநயம், இசை, மொழிப் பொருள் என்னும் மூன்றும் பயன்படுவன. இம்மூன்றையும் தழுவி நின்றமையால் நாடகஞ் சிறந்தது" என்று விபுலானந்த அடிகள் தம் 'மதங்க சூளாமணி'யுள் விளக்கியுள்ளார். (1) மேலும் அவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்ப் பாகுபாட்டினைப் பின்வருமாறு விளக்கியுள்ளார். "மொழிக்கு இயற்கையாக அமைந்த பொருள் கருவியாக உள்ளத்து நிகழ்ந்த மனக்குறிப்பினை புலப்படுத்துவது இயற்றமிழின் தன்மை; மொழிப் பொருளோடு இசையும் சேர்ந்து நிற்க மனக் குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத் தமிழின் தன்மை; மொழிப்பொருள், இசை என்னும் இரண்டினோடு அவிநயமும் தத்துவமும் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக் குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது நாடகத்தமிழின் தன்மை" (2) வெறும் செய்தியை அழகாகச் சொல்வது இயல்; பண்ணோடியைத்துச் சொல்வது இசை; இரண்டொடு மெய்ப்பாடு ('பாவம்') புலப்பட வருவது நாடகம். மூன்றுமே உள்ளத்து உணர்வைப் பிறர் அறியப் பயன்படும் கலைகளே.

(1) மதங்க சூளாமணி-பக்-2

(2) மேற்படி ,,

(3) பரிபாடல் திரட்டு - 4

இந்த விளக்கத்தோடு 'கதை தழுவி வரும் கூத்து' என்ற விளக்கத்தையும் இயைத்துக் காண்போமாயின் நாடகம் என்று இன்று நாம் நினைக்கின்ற நாடகத்தின் பழைய வரலாறு தெளிவாகப் புலப்படும்.

சங்கத் தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல். அதில், "தெரிமாண் மும்மைத்தமிழ்" (3) என்ற தொடர் வருகின்றது.

மும்மைத் தமிழ் என்பது மூன்று கூறுடைய தமிழ் என்று பொருள் படும். சங்க இலக்கியத்தின் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை என்பது யாவரும் ஏற்றுக் கொண்ட கருத்து.

கி. மு. மூன்றும் நூற்றாண்டின் இலக்கணமாகிய தொல்காப்பியமும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் சங்க இலக்கியமும் புலப்படுத்துகிற நாடகம் பற்றிய சில குறிப்புக்கள் கண்டோம்.

சங்க இலக்கியத்து அகப்பாடல்கள் யாவும் நாடகப் பாத்திரங்களின் தனிக் கூற்றுக்களாக அமைந்த பாங்குடையவை (Dramatic monologues) என்பது யாவரும் அறிந்த ஒன்று. (கலித்தொகை மட்டும் தனிக் கூற்றுக்கள் மட்டுமன்றி உரையாடல்களாக உள்ள பாடல்களும் பெற்றுள்ளது) இடம் காலம் ஆகிய பின்னணிகளில் நாடகப் பாத்திரம் ஒன்று பேசுவதாக அமைவதே சங்க இலக்கிய அகப்பொருட் பாடல்களின் அமைப்பாகும். எடுத்துக் காட்டாக—

"மனைகெழு வயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே
அல்லன் என்றும்என் தடமென் தோளே"
(ஐங்-11)

என்ற ஐங்குறு நூற்றுப் பாடலைக் காணலாம். 'வயலை' என்ற கொடியை வீடுகளில் வளர்ப்பார்கள்; இங்கே அந்த வயலைக் கொடி 'வேழம்' என்ற செடியைச் சுற்றிப் பின்னி வளர்ந்திருப்பதைக் காணுகிறோம்.

indian art is
known the world over

SO IS

The Shipping Corporation
Of India Ltd.

A GOVERNMENT OF INDIA UNDERTAKING

FOR ITS

WORLD WIDE
SHIPPING SERVICES

S C I

STEELCRETE HOUSE, DINSHAW WACHA ROAD, BOMBAY 20

Branches at Calcutta & Mombasa.
Agents at all principal ports of the world.

With Best Compliments

from

A. G. BADAL & SONS

CIVIL ENGINEERING CONTRACTORS
DOING WORKS FOR
INDIA OIL CORPORATION

Gaffar Badal Manzil
RAICHUR.

வேழச் செடியைச் சுற்றி வயலைக் கொடி படர்ந்திருக்கும் ஊர்க்காரன் தலைவன். அவனை நல்லவன் என்று சொல்கிறாள் தலைவி. ஆனால், அந்தச் சொல் உள்ளத்தி லிருந்து பிறப்பதாகத் தெரியவில்லை. ஏனெ னில், தலைவனை நல்லவன் என்று சொல்லும் தலைவியின் தோள் மெலிந்து பசந்து காணப் படுகிறது. நிறம் இழந்து மெலிந்த அந்தத் தோள்கள் தலைவன் மற்ற மகளிரை நாடிச் செல்லும் கொடியவன் என்பதைப் பறை சாற்றுகின்றன.

இந்தப் பாடல் 'தலைவி' என்ற பாத் திரத்தின் பேச்சாக வருகின்றது. "தலைவன் தான் தவறு செய்கின்றான் என்றால், உன் மெலிவால் அவனைப் பொல்லாதவனென்று உலகறியச் செய்யவேண்டுமா? உன் துய ரத்தை ஒரு கட்டுப்பாட்டில் நிறுத்தி, மனத் தைக் கல்லாக்கிக் கொள்" என்று தோழி சொல்லியிருக்கிறாள். அது கேட்ட தலைவி, "நான் என்ன அவரைப் பொல்லாதவர் என்றா சொல்கிறேன்! நல்லவர் என்று தான் நான் இன்னமும் சொல்கிறேன். இந்தத் தோள்தான் அப்படி இல்லை என்று சொல்கிறது. நான் என்ன செய்யட்டும்?" என்று விடை சொல்கிறாள். இந்த உரை யாடலிலே தலைவி என்ற அகப்பொருள் நாடகத்தின் பாத்திரம் பேசுகிறது; உணர்ச்சி பொங்கி வழிந்து விட்டால் அது நாடகமாகாது. உணர்ச்சியின் செறிவை அணைக்கட்டுத் தேக்கம் போல நிறுத்தி வைத்துச் சுழலி (Turbine) வாயிலாகக் கட்டுப்படுத்தி வேகமுறப் பாய்ச்சுவது போல. வெளியிடுவதுதான் நாடக உரை யாடலாகும். அந்தப் பாங்கு தலைவியின் இந்தக் கூற்றிலே அமைந்திருப்பதைக் காணலாம்

உணர்வைச் செறிவுறத் தலைவி கட்டுப் படுத்துவதை ஓரியற்கைக் காட்சி வாயிலா கப் புலவர் காட்டுகிறார். அந்தக் காட்சியை யும் தலைவியின் கூற்றிலேயே அமைத்திருக் கிறார் "நம் வீட்டிலே வயலைக் கொடி பற்றிப் படர்ந்திருப்பதைப் பார்த்தாயா? வீட்டிலே படரவிட்டால் அந்தக் கொடி வேழச் செடியை யல்லவா இறுகப்பற்றிச் சுற்றிப் படர்ந்திருக்கிறது!" அது போலத்தான் தலைவனும் நடந்து கொள்கிறானும். வீட்டிலே இருக்கிற நேரத்திலே கூட மனத்து நினைப் பெல்லாம் பரத்தையரைப் பற்றித் தான் என்பது இந்தக் காட்சியின் குறிப்பு. தன் உணர்வின் செறிவு முழுவதையும்,

"மனை கெழு வயலை வேழம் சுற்றும்
துறை கேழ் ஊரன்"

என்ற வருணனையிலே அடக்கி வைக்கிறாள். இப்படிக் கையாளப்படுகின்ற உத்தியை உள்ளுறை உவமம் என்று சொல்வர். உள்ளுறை உவமத்தில் வரும் இயற்கைக் காட்சி நாடகத்துக்கு வேண்டிய பின்னணி யாக அமைவதோடு உணர்ச்சியைச் செறி வுடையதாக ஆக்குவதற்கும் பயன் படுகிறது. ஆடவனின் மனத்து நினைப்பு உலகத்திலே இருப்பதுதான்; அவனைப்பற்றி மனத்திலே குறையிருந்தாலும் புறத்திலே காட்டிக் கொள்ளாததும் உலகத்திலே உள்ளது தான். இவ்வாறு உலகத்தில் உள்ள ஒன்றை உணர்ச்சிச் செறிவுடன் மெய்ப்பாடு தோன் றப் பின்னணி அமைத்துக் காட்டுவதுதான் நாடகம். நாடகத்தில் அதனை இயற்றுகிற கலைஞன் பேசுவதில்லை; பாத்திரமே பேச வேண்டும். மேலும், நாடகத்து நிகழ்ச்சிகள் உரையாடலால் புலப்படவேண்டும்; பாத் திரத்தின் பண்பும் அதனால் தான் புலப்பட வேண்டும். காப்பிய ஆசிரியனாக இருப்பது போலக் கவிக்கூற்று அமைக்க நாடக ஆசிரியனுக்கு வாய்ப்பு இல்லை.

இத்துணை இயல்புகளுக்கும் இடம் தரு கிறது நாம் பார்த்த ஐங்குறு நூற்றுப்பாடல். முழு நாடகமாக இல்லை. உண்மைதான். நாடகத்தின் ஒரு பாத்திரம் ஒரு சமயத்தில் பேசிய ஒரு உரையாடல்தான். அதில் நாடக இயல் முற்றிலும் அமைந்துள்ளது.

இது சங்க கால நாடகத்தின் தன்மை எப்படி இருந்திருக்கும் என்பதை இன்று

நாம் உய்த்துணர்வதற்கு ஒரு வாயில். இந்தப் பாட்டைப்பற்றி நச்சினார்க்கினியர் விளக்கும் போது ''இதனுள் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றும் கூறலின் நாடக வழக்கும் தலைவனைத் தலைவி கொடுமை கூறல் உலகியலாதலின் உலகியல் வழக்கும் உடன் கூறிற்று [4] என வரைந்துள்ளார்.

(4) தொல்=பொருள்–53–நச்-

ஒரு பாத்திரத்தின் கூற்றிலேயே இத்துணை மெய்ப்பாடு சிறந்த நாடகப் பாங்கு காணப்படுமாயின், முழு நாடக நூல்கள் எப்படி இருந்திருக்கும் என்று நினைத்து ஏங்குவதொன்றே நாம் செய்யக் கூடியது.

சங்க காலத்திலும் அதற்கு முன்னும் இருந்த நாடகத் தமிழின் நிலைமையைப் பொறுத்தவரையில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழன் 'பெற்று இழந்தான் என உழந்த' தயரதன் தான். ★



With Best Compliments

from

A

Well Wisher

அருட்கொடை

தூளாய் உருளும் பனிப்பரலே,
துலங்க உன்னுள் நெடும்பனையும்
வாளா இருத்திக் காட்டவல்ல
வனப்பை நீயும் கற்றதெங்கே?

செம்மா துளையாம் கனிச்சிமிழே
சேர உன்னுள் மணிப்பரலும்
அம்மா வியப்போ (டு)அடுக்கிவைக்கும்
அழகை நீயும் கற்றதெங்கே?

மயிலின் தோகை மரகதமே
மயங்க உன்னுள் பலநிறமும்
பயிலும் வண்ணம் பாய்விரிக்கும்
பாங்கை நீயும் கற்றதெங்கே?

தங்க ஓடைத் தகதகப்பே
தவழ உன்னுள் சலசலப்பும்
பொங்க ஓடிப் புரண்டுசெலும்
பொலிவை நீயும் கற்றதெங்கே?

ஏழைக் கவியே, உன்னிடம் ஓர்
எளிய சொல்லே உள்ளொளியால்
வாழக் கவிதை வரம் பெறல் போல்
வளமாய் இவையும் பெற்றனகாண்!

சந்தக்கவிமணி: தமிழழகன்

With Best Compliments

from

KHATAU JUNKER LIMITED

Village Megathane
Datta Pada Road
Borivli (East)
Bombay-66 NB.

With Best Compliments

from

HIND RECTIFIERS LTD.

Lake Road, Bhandup,
BOMBAY-78.

Manufacturers of :

Selenium and Silicon Semiconductors, Rectifier Apparatus such as Commercial Battery Charger, Railway Battery Charger, Aircraft Starters, Electroplating Sets, Power Plants for Electro Chemical industry, Stabilised D.C. Power Supply Units etc.

நாடக ஆசிரியரும் அரங்கமும்

குடியேற்றம்
நாகராஜ்

முத்தமிழ் கலாவித்வரத்ன டி. கே. எஸ். சகோதரர்களின் மாபெரும் வெற்றி நாடகமான "ஔவையாரைப்" பாராட்டி நமது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் ஒருமுறை அடியிற்கண்டவாறு பாடினாராம்,

''கண்ணைச் செவியைக் கருத்
தைக் கவர்ந்து நம்க்(கு)
எண்ணரிய போதனைகள்
ஈவதற்கு நண்ணுமிந்த
நாடகசாலையொத்த நல்ல
கலாசாலை யொன்று
நீடுலகில் உண்டோ
நிகழ்த்து?"

என்பதே அப்பாடல். என்னரும் நண்பரும், என் நாடகங்கள் பலவற்றை எங்களின் 'அமுது அமெச்சூர்ஸ்" குழுவில் அரங்கேற்றி வருபவருமான மேற்படி அமெச்சூர்ஸ் செயலர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேற்கண்ட கவிமணி அவர்களின் பாடலை அடிக்கடி எனக்கு நினைவுபடுத்திக்கொண்டே இருப்பது வழக்கம். அதோடு அவர் விடுவதில்லை.

''அமெச்சூர்ஸ்" என்றாலே 'நாடகத்தைத் தொழிலாகக் கொள்ளாதவர்கள் குழு' என்றுதான் பொருள்படும். அவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள்; நாடகத் துறையில் அவர்கள் ஈடுபடும் போது - புனிதமான நாடக மேடையில் - புனிதமான அக்கலையைக் கொலைசெய்து வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே அதனைப் பயன் பயன்படுத்த முனைந்து பார்க்கின்ற மக்களைப் பாழ்படுத்தாமல் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியமாகிறது. வசூலையே குறிக்கோளாகக் கொள்ளாமல் -நல்லோர் ஏத்தும் உயரிய பண்புகளை - ஒப்பற்ற கொள்கைகளை வைத்து நாடகமாக்க முனைவதுதான் நம்மைப் போன்ற ''அமெச்சூர்ஸ்"குழுக்களுக்கு அழகு!... அதற்கொப்ப உன் நாடகம் உருவாக வேண்டுமென்றே இப்பாடலை உனக்கு அடிக்கடி நினைவுப்படுத்துகிறேன்'' என்றும் கூறுவார் அவர்.

''மனிதனுடைய கண்ணையும், செவியையும், கருத்தையும் ஒருங்கே தன்பால் கவர்ந்து எண்ணரிய போதனைகள் பலவற்றை அவனுக்கு நல்கும் நாடகசாலையைப் போன்ற நல்லதொரு கலாசாலை இந்நிலவுலகில் வேறொன்று உளதோ?..." என்று பெரும் விந்தையுடன் வினவுகின்றார் கவிமணியவர்கள். நாடகசாலைகள் என விளிக்கப்படுபவையனைத்தும் 'நானிலமீதிலங்கும் நற்கலாசாலைகள்'' என்பதன்றோ அதன் பொருள்?

அவரின் கருத்துப்படி நாடகசாலைகள் அனைத்தும் நற்கலாசாலைகளாகக் காட்சியளிக்க வேண்டுமானால், நாடக அரங்குகள் ஒவ்வொன்றும் நல்ல பல கருத்துக்களை, நல்லோர் போற்றும் உயர்ந்த

FOR YOUR REQUIREMENTS OF

HORSE SHOE BRAND CHEMICALS

CAUSTIC SODA (Rayon Grade) Solid & Flakes

LIQUID CHLORINE

TRICHLOROETHYLENE

PERCHLOROETHYLENE

UPGRADED ILMENITE ORE

SODA ASH

SODA BICARB

CALCIUM CHLORIDE

AMMONIUM BICARBONATE

CHEMICALS THAT MAKE INDUSTRIES HUM

Please Contact :

DHRANGADHRA CHEMICAL WORKS LTD.

NIRMAL, 3RD FLOOR,
241 BACKBAY RECLAMATION,
NARIMAN POINT,
BOMBAY-1.

Telephone : 293294-293295-293330

Telegram : SODACHEM

கொள்கைகளை, ஒப்பற்ற தத்துவங்களை, உலகெங்கும் பரப்பவேண்டுமானால் நாடகங்களை உருவாக்கி அதனை அவ்வரங்குகளிலே உலவவிடும் ஒரு நாடக ஆசிரியனின் பங்கு அதிலே எத்தகையதாக இருக்க வேண்டும்? அவனது பணியின் குறிக்கோள் எத்தன்மையதாய் இலங்க வேண்டும்? நாட்டு மக்களினிதயத்திலே நல்லன வளர்ந்து அல்லன களையவே அன்று தொட்டு இன்று வரை பயன்படுத்தப்பட்டு வந்திருக்கும் அதியற்புத ஆயுதமாம் நாடகக் கலையை தற்கால நாடக ஆசிரியன் எவ்வாறு கையாளவேண்டும்? 'ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தைத் தவிர்த்து-தமிழில் வேறு நாடக நூல்களே இல்லை' என்கிற அளவில் நலிந்து-மெலிந்து-நாதியற்றுக் கிடந்த நாடகத் தமிழை தம் அறிவுச் சுடரால், ஆழ்ந்த புலமையால், அயரா உழைப்பால் தூக்கி நிறுத்தி, ஊட்டி வளர்த்து, நல்ல பல நாடகங்களை உருவாக்கிக் கொடுத்து "நாடகக் கலையை வளர்ப்பதில் நாம் எவருக்கும் குறைந்தவர்கள் அல்ல" என்றியம்பி இன்று நாம் இறும்பூதெய்தும் அளவிற்கு அக்கலையை நம்மிடையே விட்டுச் சென்றிருக்கும் மறைந்த மேதைகளாம் மாபெரும் நாடக ஆசிரியர்களுக்குத் தற்கால நாடக ஆசிரியன் காட்டும் நன்றியுணர்ச்சி எத்தகையதாக இருக்க வேண்டும்...? இவைகள் சற்று கடினமான கேள்விகளாகவே படலாம். ஆனால், ஒரு நாடக ஆசிரியனுக்கு இக் கேள்விகளுக்கான விடைகள் தெரிந்தே ஆகவேண்டும்!

எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட கருத்துக்களன்று இவை. நாடக உலகில் விண்முட்டும் புகழ் கொண்டு பண்பட்டு விளங்கும் பெரியோர்கள் பலரிடையே யான் பெற்ற அறிவுரைகளும் அமெச்சூர்ஸ் நாடக அரங்கில் கடந்த பத்தாண்டு காலமாக நான் பெற்றுள்ள மறக்கவியலாத சிலபல அனுபவ உண்மைகளுமே இக் கட்டுரையின் அடிப்படை என்பதை மட்டும் வெகு தாழ்மையுடன் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

"உலகம் ஒரு நாடகமேடை; நாமெல்லாம் அதன் நடிகர்கள்"! என்பது வேண்டுமானால் சிலருக்கு வெறும் தத்துவ உரைகளாகத் தோன்றலாம். ஆனால் "நாடக மேடைகள் ஒவ்வொன்றும் ஓர் உலகம். அம்மேடையிலே உலவுகின்றவர்களெல்லாம் இவ்வுலகையே மாற்றியமைக்கும் திறங்கொண்ட விசித்திர சிற்பிகள்." என்கிற உண்மையை மட்டும் எவருமிங்கே மறுத்திட இயலாது அல்லவா?..." நாடக அரங்குகள் ஒவ்வொன்றும் ஓர் உலகம்." ஆம்! உலகியலைப் படம் பிடித்துக் காட்டும் ஒப்பற்ற நிலைக்கண்ணாடி; உயரிய கலைக்கண்ணாடியன்றோ அவை!

உலகியலைப் படம் பிடித்துக்காட்டி-நல்லதைப் போற்றி எவருள்ளமும் நோகா வகையில் அல்லதைக் கண்டித்து அன்பு வழியில்-இன்பவழியில் – கருணைவழியில் இக்காசினி மக்களையழைத்துச் செல்ல வேண்டிய மாபெரும் பொறுப்பு நாடக அரங்குகளினுடைய பொறுப்பாகும். அப்பொறுப்பினை அவைகள் செவ்வனே நிறைவேற்ற அடிப்படை காரணமாக இலங்குவது யார்? அவனின் பெயரென்ன? ஆம்...... அவன்தான் நாடகாசிரியன்!

உலகில் உயிரினங்களைப் படைத்து அவை ஒவ்வொன்றுமிங்கே உலவவும்-உலகின்ப துன்பங்களில் உழலவும் வகை செய்து, இறுதியிலவைகள் வந்து ஒடுங்கவும் தன் திருவடி நிழலில் இடந்தந்து நிற்பது அந்த இறைவனின் திருப்பணி.

ஏறக்குறைய அதனையொத்த பணியைத் தான் இங்கே நாடக ஆசிரியனும் செய்கிறான். "கருப்பொருளைக் கதையென வடித்து, கதைக்கொப்ப நாடக பாத்திரங்களைப் படைத்து, அப்பாத்திரங்களுக்கேற்ப அவர்தம் குணவியல்புகளை வகுத்து, நாடகமேடையிலே அவர்களை உலவவிட்டு, உரையாடவிட்டு உலகிற்கு, தான் சொல்ல நினைத்ததைச் சொல்லிமுடித்து-இறுதியில் அப்பாத்திரங்களையெல்லாம் இழுத்துநிறுத்தி, தன் பணி முடிவுற்றதென்று அவைகளுக்கோர் இறுதி முடிவு கொடுப்பது" நாடக ஆசிரியன் நற்பணி.

இறைவனின் படைப்பில் இங்கே எல்லாமே உயர்ந்தவைகளாக, குணத்தில் சிறந்தவைகளாக, பண்பில் மிகுந்தவைகளாக இருந்துவிடுவதில்லை. ஆனால் அவன் அப்படிப் படைப்பதற்கும் தகுந்த காரணங்கள் இல்லாது போவதுமில்லை!

அவனின் படைப்பில் பாயும் புலி இருப்பதனால்தான் பரம சாதுவான முயலினிடம் நமக்குப் பரிவு பிறக்கின்றது. உயர்ந்த இமயங்கள் இருப்பதினால்தான் தாழ்ந்த பள்ளத்தாக்குகளை நாம் குனிந்து பார்க்கிறோம். எறும்பைக் கண்டு "இவ்வளவு சிறிய பிராணியா?" என்று சிந்திக்கின்ற அதே நேரத்தில் யானையைப் பார்த்து எவ்வளவு பெரிய பிராணி! என்று வியப்படைகின்றோம். 'கோட்ஸே' போன்ற கொலைகாரர்களை எண்ணும்போது 'மகாத்மா' போன்ற மாபெரும் மனித தெய்வங்களையும் மனதில்

SKF–*revolutions ahead in quality and technology*



ASSOCIATED BEARING COMPANY LTD.
Chinchwad, Poona-19.

SKF

Bensons/5050

With Best Compliments

from

NARESHKUMAR & CO.

Dealers for

"TRAYONS" TRAYOPHANE

102, Banian Street,
Pydhonie,
Bombay-3.

Phone No: 332110

எண்ணி வணங்குகின்றோம். எனவே இறைவனின் எந்தப் படைப்பிற்கும் தகுந்த காரணம் இங்கே இல்லாது போகவில்லையல்லவா?

நாடக ஆசிரியனின் படைப்புமிங்கே அத்தகையதுதான். அவன் படைக்கும் பாத்திரங்களில் நல்லனவுமுண்டு; தீயனவுமுண்டு. பண்பில் உயர்ந்துநிற்கும் இமயங்களுமுண்டு; தாழ்ந்த பள்ளத்தாக்குகளுமுண்டு; விலைமதிக்கவொண்ணாத மாணிக்கங்களுமுண்டு! வீணாகும் மண் கட்டிகளும் உண்டு. ஆனால் இறைவனின் எந்த ஒரு படைப்பிற்கும் இங்கே எப்படியொரு சீரிய காரணம் காணப்படுகின்றதோ அதேபோல் தெய்வீக அருள்பெற்ற ஒரு நாடக ஆசிரியனின் எல்லாப் பாத்திரப் படைப்புகளுக்கும் இங்கே சீரியதோர் காரணம் காணப்படுவது மட்டும் எவருமிங்கே மறுக்கவியலாத உண்மை! அந்தக்காரணம் இதுதான்:

அவன் சொல்ல நினைத்த கருத்தை இனிய கதையோடு, இணையறுபண்போடு அன்போடு, தன் பாத்திரங்களின் வாயிலாக எடுத்துக்கூறி அந்நாடகத்தைக் கண்டவர்களிடம் ''மனமாற்றம்'' ஏற்படும்படி செய்து, கலை வழியில் - கவினூறும் அறவழியில்-அவர்களைத் தன்பால் கவர்ந்துவிடுதல் என்பதுதான் அது! ஆம். இச்சீரிய முடிவினைக் காணுதற்குத்தான் அவன் மேற்குறிப்பிட்ட பல்வகைப்பட்ட பாத்திரங்களைப் படைக்கின்றான். கதைகளில் விடுக்கின்றான்.

களர்நிலத்திலே நெல் விளையுமா? வயிறு கெட்டவனின் வாய் நாறத்தானே செய்யும். நினைவுகெட்ட நாடக ஆசிரியனின் படைப்புகளுமிங்கே அப்படித்தான். அவைகளால் விளைவது தீமைகளே தவிர்த்து நன்மைகளாக இருக்கமுடியாது.

தூய அன்பும் - துல்லியமான நற்பண்பும் - ஆழ்ந்த நல்லறிவும் - அகன்ற மனமில்லாதார் எழுதுகின்ற நாடகங்கள் அரங்கிற்கு வந்துவிட்டால், அது எத்துணை ஆபத்தான விளைவுகளைத்தரும் என்பது சொல்லவா வேண்டும். மனம் வேறு; சொல் வேறு; செயல் வேறு என இயங்கும் மனித மரப்பாச்சி பொம்மைகள் நாடகமெழுத முனைந்தால் அதைப் பார்க்கும் உலகு படுகுழியிலன்றோ வீழும். மனித இனத்தின் மேன்மையைக் கருதியே தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கும் இவ்வரிய கலைவழியை ''கலை; வெறும் கலைக்காகவே!'' என்று கூறி வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே அதை பயன்படுத்தி அக்கலை வழியைக் கொலைவழியிலிட்டுச் சென்றால், அதைவிட கொடும் பாவம் வேறென்ன இருக்க இயலும்?

நாடகம் எழுத முனையும் நாடக ஆசிரியன், முதலில் நல்ல கருத்தைத் தேடி அதனைத் தன் கதையின் கருப்பொருளாக அமைத்துக்கொள்ள வேண்டும். தான் சொல்ல நினைத்ததை நயம்பட, அன்போடு-பண்போடு - தாய்மைப் பரிவோடு - பக்குவமாக அதைத் தன் பாத்திரப் படைப்புகளின் வாயிலாக எடுத்தியம்பி அரங்கை அலங்கரிக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் அவனுக்கும் சிறப்பு; நாடக அரங்கிற்கும் அது பெருமை. நாட்டுக்கும் அதனால் பெரும் நன்மை. அதைவிடுத்து தகுந்த உறுதியான கருப்பொருளின்றி, பயன்தரத்தக்க எவ்வித குறிக்கோளுமில்லாது ஏனோதானோவென்று ஒரு கதையை உருவாக்கிக் கொண்டு, கதைக்கே சம்பந்தமில்லாதவகையில் ஏதேதோ பாத்திரங்களையெல்லாம் படைத்துக்கொண்டு ''எடுத்தேன், கவிழ்த்தேன்'' என்று அப்பாத்திரங்களைப் பேசவிட்டு, நாட்டினர் நெஞ்சில் விஷவித்தைத் தூவுமொரு நாடக ஆசிரியனால் நாடக அரங்கு எவ்விதம் மாறும்? நாச அரங்காக அன்றோ மாறும்? நாட்டை தன் அகத்தில் கொண்டிலங்குவதுதானே நாடகம்? நாடகம் நாசமானால் நாடும் நாசமாகும் என்பது தானே அதன் உண்மை. எனவே நாட்டையே நாசப்படுத்துகின்ற அளவுக்கு நாடக ஆசிரியன் துணியலாமா? அப்படித் துணிந்து எழுதுகிறான் என்றால் ''தாய்மைப் பரிவுடையவன்'' என அவனை இவ்வுலகம் எவ்விதம் ஏற்கும்? எனவே நாடக ஆசிரியன் துவக்கத்திலிருந்தே எழுத்துக்கு எழுத்து சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

ஆசிரியனின் படைப்பே அரங்கில் நடைபோடுகின்றது. எனவேதான் ஆசிரியன் வேறு - அரங்கம் வேறு எனப் பிரிக்காமல் இரண்டினையும் இணைத்தே இக்கட்டுரையில் இயம்ப விழைந்தேன்.

இறுதியாக ஒன்று நல்ல கருப்பொருளை உருவாக்கிக் கொண்டு நாடகமாக அதை மாற்றத் துவங்கும்போதே தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற அரும்பெரும் நாடக ஆசிரியர்களை, நாடகத் தமிழை வளர்க்கவே தம் வாழ்நாளெல்லாம் அர்ப்பணித்த சீலர்களை-அவர்கள் ஆக்கித்தந்த அரும் பெரும் நாடக நூல்களை, அந்நாடகங்கள் நாட்டில் விளைத்த நற்பயன்களை, இன்றைய ஒவ்வொரு நாடக ஆசிரியனும் தம்மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்து-மானசீகமாக அப்பெரியார்களை வணங்குதல் மிகவும் அவசியம்.

வாழ்க அவர்களின் திருநாமம்! வளர்க நாடகக் கலை! ★

With the Best Compliments

of

TATA ENGINEERING & LOCOMOTIVE CO. LTD.

BOMBAY — JAMSHEDPUR — POONA

With Best Compliments
from

NATVAR PARIKH & CO. (PVT) LTD.

107-109, P. D'Mello Road,
Opp. Sugar Market,
BOMBAY-9.
Phone No. 326793/324091

TRANSPORT CONTRACTORS & BUILDERS, SUPPLIERS OF HEAVY DUTY TRUCKS, CRANES & 40 TON LOW-BED TRAILER.

இசைச் சிந்தனைகள்

எஸ். பாலசந்தர்

இசையில் இசையாத இதயம் இல்லை. இறைவனை ஏழிசையின் வடிவம் என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஓர் இனிய கீதம் அதன் நாதத்தை நம் செவில் பரப்பும்போது, உள்ளத்தினுள்ளே அது ஊடுருவிச் சென்று இன்பமயமான ஒரு கிளர்ச்சியை உண்டாக்குகிறது. அப்போது கவலையை மறக்கிறோம்; களிப்புணர்வைப் பெறுகிறோம்; அமைதியுறுகிறோம்.

ஆகவே உள்ளம் மகிழ்வு காண்பதற்கு உற்றதோர் புனிதமான சாதனமாக விளங்கும் உன்னதமான கலை இசை ஒன்றுதான் என்பது உறுதியாகிறது. அதனால்தான் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை, ஏன், அஃறிணை உயிர்கள் கூடத் கானத்தில் பரவசப்பட்டு நிற்கின்றன.

ஒரு பாட்டைப் பாடும்பொழுது சொற்களின் மூலமாக ஒரு பொருளையோ, கருத்தையோ எடுத்துரைத்துக் கேட்பவர்களை வசீகரிக்கும் வாய்ப்பு வாத்திய சங்கீதத்துக்கு இல்லை. ஆயினும் வாத்தியங்களின் புனிதமான நாதத்தினால் எந்தவிதமான வார்த்தைகளும் இன்றியே, கேட்பவர்களை வசப்படுத்தும் சக்தி அவற்றுக்கு அமைந்துள்ளது. அத்தகைய வாத்தியங்களில் வீணை மிகவும் முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது.

வீணை வாத்தியத்தின் தனித்தன்மை பற்றியும் அதன் புராதனப் பெருமை பற்றியும் இசை ரசிகர்கள் நன்கு உணர்வார்கள். வேதகாலம் முதல் வீணை வாத்தியம் சிறப்புப் பெற்று வருகிறது. வீணை இசையோடு இழைந்து சாமகானம் முழக்கும் சாம்பசிவனைப் பற்றிப் பக்தி ஏடுகள் கூறுகின்றன. கலையின் ஆதிதேவியான கலைமகளின் கரத்தில் மின்னுவது வீணை. இதிகாச புராணங்களினும் வீணைக்குப் பிரதான்யம் உள்ளது. இலங்கேஸ்வரன் வீணாகானத்தில் விற்பன்னன்.

சங்க இலக்கியங்களைப் பார்த்தால் வீணையின் பெருமை தெரியவரும். சிலப்பதிகாரத்தில் வீணை இசையின் இலக்கணமே விளக்கப்பெறுகிறது. பெருங்கதை என்ற தமிழ்க் காவியத்தின் நாயகனான உதயணன் வீணை வித்தகனாக விளங்கிச் செயற்கரிய செயலைப் புரிந்திருக்கிறான். ஸ்ரீரங்கநாதப் பெருமானைத் தினமும் இரவில் துயிலுறச் செய்யும்போதும், காலையில் துயிலெழச் செய்யும்போதும் வீணை வாசிப்பது இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது. அந்தத் திருப்பணியைச் செய்வதற்கென ஒரு குடும்பமே இருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேர்ப்பட்ட தெய்விகமான வாத்தியத்தை மேன்மையாகக் கையாண்டவர்கள்

ASP/L-97

The Beauty Business.

Lakmé

knows all about it.

Launched in 1952, Lakmé is today the leading manufacturer of quality cosmetics, with the widest and most sophisticated range of products distributed throughout the country.

Lakmé products are specially made to suit Indian complexions and weather conditions. Manufactured on the most scientific and hygienic lines, and backed by a full research programme, Lakmé products have also met with great success in many countries, including the U.S.A.

More and more women are using Lakmé products—ample proof of the trust and confidence beauty-conscious women everywhere have in the name 'Lakmé'.

Beauty begins with Lakmé

With Best Compliments

from

THE WESTERN INDIA ENG. CORPN. PVT. LTD.

68-A, Alli Chambers, Tamarind Lane,

Fort, Bombay-1.

Gram : WIECOL

Phone : 256896 & 256863

பலர். காரைக்குடி சகோதரர்களில் பெரிய வரான சுப்பராமையர், ஆந்திரத்தைச் சேர்ந்த வேங்கடரமண தாஸ், அந்நாட்டைச் சார்ந்த சங்கமேஸ்வர சாஸ்திரி, மைசூரைச் சேர்ந்த சேஷண்ணு, சுப்பண்ணு இவர்களைப் பற்றியெல்லாம் நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்களுடைய வாசிப் பைக் கேட்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையே என்பதைப் பலமுறை எண்ணி வருத்தப்பட்டதுண்டு. நான் நேரி லேயே கேட்ட வித்துவான்கள் காரைக்குடி சாம்பசிவ ஐயர், தனம்மாள், மைசூர் வேங் கடகிரியப்பா, தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயர், சேரன்மாதேவி சுப்பிரமணிய சாஸ் திரி முதலானவர்கள். எல்லோருமே அவர வருக்கு ஒரு பாணியை வகுத்துக்கொண்டு, அதன்மூலம் அற்புதச் சாதனைகளைச் செய்த வர்கள். எல்லோருமே தேர்ந்த வித்துவான் கள்.

சாம்பசிவ ஐயர் வாசிப்பில் "தானம்" வாசிக்கும் முறையும், அதன் கம்பீரமும் இன்றும் என் காதைவிட்டு அகலவில்லை. அவர் 'தானம்' வாசித்து முடித்தால், அது வரை கம்பீரமாகச் சங்கீதப் புயல் அடித்து ஓய்ந்த இன்ப உணர்வு ஏற்படும். தனம்மாள் வாசிப்பு, ஒரு பெண்மணிக்கு உகந்த வகையில் அழகும் மிருதுத்தன்மை யும் நிறைந்த வாசிப்பு. நயம், நளினம் முதலியவற்றுக்கு அவர் தலைமை கொடுத்து வாசிப்பார். வேங்கடகிரியப்பா வீணையில் கையாளும் விரலடிப் பிரயோகத்திலும் துரித கதி வாசிப்பிலும் விற்பன்னர். தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயர் கிருதிகளை வாசிப்பது மிகவும் கண்ணியமான முறையில் இருக்கும். சேரன்மாதேவி சுப்பிரமணிய சாஸ்திரி சிறந்த சம்ஸ்கிருத பண்டிதராக இருந்த தனுல் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கிருதிகளை அவற்றின் தனித்தன்மை வெளிப்படத் தமது வீணையில் வாசிப்பார்.

இவர்களை என் முந்திய தலைமுறை யைச் சேர்ந்த வித்துவான்கள் எனக் குறிப் பிடலாம். நான் வீணையை வாசிக்கத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இந்தத் தலை முறையைச் சேர்ந்த தேவகோட்டை நாராயண ஐயங்கார், கே. எஸ். நாராயண சாமி ஐயர், மைசூர் வி. துரைசாமி ஐயங்கார், எம். ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர், ஈமனி சங்கரசாஸ்திரி போன்றவர்கள் ஏற் கனவே அப்போது வீணைக் கச்சேரி செய்து கொண்டு, ஒவ்வொரு பாணியைக் கடைப் பிடித்து, அதன் மூலமாகக் கர்நாடக இசைக் குப் பெருந்தொண்டு செய்து கொண்டிருந் தார்கள். டைகர் வரதாசாரியார், மஹாராஜ புரம் விசுவநாதையர், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், செம்பை வைத்தியநாத பாகவதர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, முசிறி சுப்பிரமணிய ஐயர் முதலிய வித்துவான்கள் எல்லோருமே வேறுபட்ட தனித்தனிப் பாணியை அவரவர்களுக்கென கையாண்டு அதன்படி கச்சேரி செய்து வந்தாலும், எல் லோருமே கர்நாடக சங்கீதத்துக்கு மேன் மையான பணியைச் செய்து வந்தவர்களா வார்கள்.

இதேபோன்று பிடில் வாசிப்பவர்களும் ஒன்றுக்கொன்று முற்றும் மாறுபட்ட பல பாணிகளைக் கையாண்டு வந்திருக்கிருர்கள். தாளம் மட்டுமே கொண்ட லய வாத்திய மான மிருதங்கத்தை வாசிக்கும் வித்துவான் களுங்கூடத் தனித் தனிப் பாணிகளைக் கையாண்டுள்ளார்கள். இவ்வாறே வீணை வாசிப்பிலும் பல பாணிகள் கையாளப்பட்டு வந்த சமயத்தில், மற்றுமொரு புதுப் பாணியை உண்டாக்கி, ஆண்டவன் அரு ளால் இடைவிடாது சாதகம் செய்து, ஸ்தா பனம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத் தது. நான் ஆரம்பத்தில் 'சித்தார்' வாத் தியந்தான் வாசித்தேன். பலர் அந்த நேரத் தில் அதைக் கேட்டும் இருக்கலாம். ஆனல் நான் சித்தார் வாசித்தது மூன்றே வருஷங் கள்தாம். வீணையைக் கையாளத் தொடங்கி, அதை வாசிக்கும் நாட்டம் ஏற்பட்டதுமுதல் சித்தாரில் எனக்கு இருந்த ஆர்வம் குறைய ஆரம்பித்து விரைவிலேயே மறைந்தும் விட் டது. சித்தார் வாத்தியத்திலும் நான் கர் நாடக இசையைத்தான் வாசித்தேன் என்

With the compliments of

DORR-OLIVER (INDIA), LIMITED

16, Queen's Road Estate, Bombay-20 Stamford, Conn., U.S.A.
56A Free School Street, Calcutta-16.

With Best Compliments
from

UNIVUL TYRES PVT. LTD.

Tyre House,
168, A. Premji Marg,
Bombay-7.

Regd. Office :
17, Jackeria Bunder Road,
Cottongreen, Bombay-33.

THE HOUSE THAT KEEPS YOU MOVING SAFELY
(Tyres & Quality Retreads)

ருலும் வீணையின்மூலம் கர்நாடக இசைக்குச் செய்யக்கூடிய தொண்டுதான் சிலாக்கியமாகப்பட்டது.

சித்தாரில் தந்தியை இழுத்து வாசிக்கும்போது கார்வை இருப்பதில்லை. வீணையில் கார்வை உண்டு. அந்தக் கார்வையிலே பல சாதனைகளும் செய்ய வாய்ப்புண்டு. 'கமகம்' என்ற அம்சம் கர்நாடக சங்கீதத்துக்கே ஜீவன் போன்றது. அதை நல்ல கார்வையுடன் இயக்கக்கூடிய வாத்தியம் வீணைதான் என்பது அதைக் கையாள ஆரம்பித்தவுடனே நான் தெரிந்துகொண்ட உண்மையாகும்.

எனது புதுப்பாணி என்று சொன்னேனே, அது என்ன? தந்தியை இழுத்து அதிலிருந்து உண்டாகும் கார்வையைப் பயன்படுத்திக்கொண்டு அதன்மூலமாக, வாய்ப்பாட்டில் இசைக்கக்கூடிய சங்கதிகளை வீணையிலும் இசைத்துச் சாதிக்க முடியும் என்பதே அது. இந்தப் புதுப்பாணியை நான் கையாள ஆரம்பித்தபோது அதைத் தெரிந்து வியந்தவர்களும் பலருண்டு. எதற்காக இப்படி இழுத்து வாசிக்கிறார் என்பது புரியாதவர்களும் உண்டு. என்மேல் அக்கறை காட்டுபவர்களாக உண்மையிலேயே தங்களை நினைத்துக்கொண்டு, (ஆனால் என்னுடைய உண்மையான எண்ணங்களைப் புரிந்துகொள்ளாமல்), "எதுக்காக இப்படித் தந்தியை இழுத்து வாசிச்சுச் சிரமப்படறே? லகுவாக வாசிச்சுட்டுப் போயேன்" என்று இலேசாகப் புத்திமதி கூறினவர்களும் அக்காலத்தில் உண்டு. 'அக்காலத்தில்' என்று குறிப்பாக ஏன் சொல்லுகிறேன் என்றால், அப்போதுதான் நானே என் பாணியைப்பற்றி மனத்துக்குள் புரிந்துகொண்டும், அதை வீணையின் மூலமாக வெளிப்படுத்த முயன்றுகொண்டும் இருந்தேன். அந்தக் காலத்தில் என் மனத்துக்குள் இருந்தது இவர்களுக்கு எப்படிப் புரியமுடியும்?

தவறாக எனக்குப் புத்திமதி கூறினவர்களின் பேச்சைக்கேட்டு நான் என் லட்சியத்திலிருந்து மாறாமலிருப்பதற்குரிய தெளிவை அளித்தமைக்கு, நான் ஆண்டவனைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் என் இலட்சியத்தில் நான் கொண்டிருந்த அந்தத் திடமான நம்பிக்கையை இழந்திருந்தால், என்னுடைய புதுப்பாணியை நமது சங்கீத உலகத்துக்கு அர்ப்பிக்கும் பெரும் வாய்ப்பினை நான் இழந்திருப்பேன்.

எந்தப்பாணிக்குமே எல்லைக்கோடு என்பது கிடையாது. அதேபோன்று நான் கையாளும் இந்தப் பாணியையும் நாளுக்கு நாள் சாதகத்தின் மூலமாக வளர்த்து விருத்தி செய்வதே என் கடமையாக இருக்கும்.

எந்த வித்துவானும் தமது வாழ்நாள் முழுவதும் தம் பாணியைக் கையாண்டு தீவிரமாகவும் மனத்தூய்மையோடும் இசைக்கலைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்க முடியுமே தவிர எதிலும் ஓர் எல்லையைக் கண்டு விட்டதாக முடிவு செய்துகொள்ள முடியாது. எந்தவிதப் புதுப்பாணியைக் கையாளுவதானாலும் கர்நாடக இசையின் சம்பிரதாய சுத்தத்திலிருந்து வழுவாமலும் ராகங்களின் ஸ்வரூபங்களுக்குப் பங்கம் விளைவிக்காமலும் மகனீயர்கள் இயற்றியிருக்கும் கிருதிகளுக்கு எந்தவிதச் சேதத்தையும் உண்டுபண்ணாமலும் இருப்பதை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

உருத்தெரியாமல் ராகங்களைப் பாடுவதோ, இசைப்பதோ சங்கீத உலகத்துக்குத் தொண்டு செய்வதாகாது. கிருதிகளைப் பாடும்போது அவற்றின் பொருள் தெரிந்து பாடுவது சிலாக்கியம். பொருள் தெரியாதிருப்பினும், பாவம் குன்றாமல் 'பயபக்தியோடு' பாடுவதுதான் முக்கியமான கடமையாகும். ஏனெனில், சொற்களின் உச்சரிப்புக்கும் அவற்றின் பொருளுக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, பாட்டில்

With

Best

Compliments

from

THE

CAMBATA GROUP OF

COMPANIES

CAMBATA BUILDING,

42, QUEENS ROAD,

BOMBAY-20.

பாவமோ சங்கீதமோ இல்லாதிருந்தால் யாருக்கு என்ன பயன்?

மேலே 'சம்பிரதாய சுத்தம்' என்று குறிப்பிட்டேன். சிலர் பேசும்போது ''சம்பிரதாயம் கெடக்கூடாது; சமபிரதாயம் காப்பாற்றப்பட வேண்டும்'' என்று (தாங்கள் தீவிரமாக அவற்றை அநுஷ்டிக்காவிட்டாலும்) வெளியே மற்றவர்களுக்குப் புத்திமதி கூறுகிற வேடிக்கையையும் காண்கிறோம்!

'சம்பிரதாயம்' என்பது இன்னதுதான் என்று ஒரு முடிவுடன் யாருமே அறுதியிட்டுக் கூறமுடியாது; சங்கீத வித்துவான்களுக்கிடையே மட்டுமல்லாமல், சங்கீத சாஸ்திரத்தையே கரைத்துக் குடித்திருக்கும் பெரும் பண்டிதர்களுக்கிடையேயும் சர்ச்சைக்கு இடமளிக்கும் ஒரு முடிவற்ற கோட்பாடாகும். ஏனெனில் ஒவ்வொரு தலைமுறைக்கு ஏற்பவும், அந்தப் பரம்பரைக்கு ஏற்பவும், அந்த வித்துவான்களின் கொள்கைகளுக்கு ஏற்பவும் தொன்றுதொட்டே இந்தச் சம்பிரதாயம் பல வடிவங்களைப் பெற்று, அப்போதைக்கப்போது உருமாறிக்கொண்டே வருகிறது. அதனால் நான் குறிப்பிட்ட 'சம்பிரதாயம்' என்பது என் அறிவுக்கு எட்டியவரையில் பின்வருவதுதான்:

'எதிலும் நல்லது கெட்டது, சரியானது தவறானது என்று உண்டு அதை நாம் நமது பகுத்தறிவினால் கூர்ந்து ஆராய்ந்து எப்படி வாழ்க்கையில் நல்லதைத் தேர்ந்தெடுத்துக் கடைப்பிடிக்கிறோமோ, அதேபோன்று சங்கீதத்திலும் நம் மனச்சாட்சிக்கு ஏற்ற தார்மிகமான சம்பிரதாயத்தைத் தேர்ந்தெடுத்துக் கடைப்பிடித்து, அதன் மேன்மைகளை ரசிகர்களுக்கு முறைபிசகாமல் அளிக்க வேண்டும்.

இசையின் ஜீவநாடி ராகம். முக்கியமாக அந்த ராகங்களைக் கையாளும்போது மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் எந்த விதத் தீங்கும் அவற்றிற்கு விளைவிக்காமல் இருப்பதே சம்பிரதாயத்தைக் காப்பதாகும்.

ராகங்களை மனோதர்ம பலத்துடன் விரிவான முறையில் ஆலாபனை செய்வதைக் கைவிட்டு, சுருக்கமாக ஏதோ ராகத்தின் சாயலைமட்டும் காட்டிவிட்டு பற்பல கிருதிகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பாடிக் கச்சேரி முழுவதையும் நிரப்புவது ஒரு ஃபாஷனாக (Fashion) இப்போது வந்துவிட்டது துர்ப்பாக்கியமாகும். இப்படி ஒரு ஃபாஷன் உண்டாவதற்குக் காரணமாயிருந்தவர்கள் முந்திய தலைமுறையைச் சேர்ந்த சிலர் என்பதை எண்ணும்போது வருத்தப்படாமல் இருப்பதற்கில்லை.

இந்துஸ்தானி சங்கீத வித்துவான்களின் கச்சேரிகள் நடக்கும்போது, அவர்கள் முக்கியமாக ராக ஆலாபனைகளை விரிவாக இசைப்பதைக்கேட்டு, அதைச் சிலாகித்து ரசிக்கும் நம் வித்துவான்கள் கர்நாடக இசையில் தொன்றுதொட்டு வந்திருக்கும் புனிதமான ராகங்களின் மேன்மையை அதேபோன்று விஸ்தாரமாக வழங்கி அதிலிருக்கும் ஆனந்தத்தை ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கு அளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ★

With Best Compliments from

SRIRAM BROTHERS
ENGINEERS & CONTRACTORS

(On Govt. Approved List)

also

Indian Oil Corporation
Burmah-Shell
Esso

"Dattatraya Smruti"
7 Bombay-Poona Road,
POONA-3.

Branches :

10/468 Punjabi Colony,
Sion Koliwada, Bombay-22.

'KALYAN'
Opp. J. S. Rungta High School,
489 Raviwar Peth,
Nasik-2.

With Best Compliments from

M/S. V. R. KADAM
ENGINEERS & CONTRACTORS

Mathru Bhuvan

7-A Kirol Road

Ghatkopar

Bombay-86.

படியேறிவரும் நங்கையரைக் கண்டு சாரதா சற்றுத் திகைத்தாற் போல் நிற்கிருள். ஒருத்தி அவள் மகள் சுசீலாதான். ஆழ்ந்த கழுத்து, குட்டை முதுகுச் சோளியும், தோளோடு குஞ்சமாய் நின்றுவிடும் சேலைத் தலைப்புமாக அவள் காட்சியளித்தாலும் வரம்பு என்ற ஒன்றைவிட்டு அவள் தாண்டத் துணியாள் என்ற உறுதி சாரதாவுக்கு உண்டு. ஆனல் உடன்வரும் பெண்–(தோழிதானே அவள்?)...யாரோ?

மொசமொச வென்ற கருப்புப் பட்டுநூல். தொப்பிக்குக் கீழ் பிடரியில் கூந்தல் புரளவில்லை. தீர்க்கமான நெற்றியும் செவிகளும் முழுமையாக விளங்குகின்றன. கடுகுமஞ்சள் வண்ணத்தில் தொளதொள வென்ருெரு சாமியார் சட்டை, முழங்கால்களுக்குக் கீழே வந்து விரிந்த கால் சராய். நீண்ட பாதங்களை எடுத்துக் காட்டும் காலணிகள். வலக்கையில் இரண்டங்குலத் தோல் பட்டையில் பெரிய அளவு கைக் கடிகாரம். கையில் ஒரு பர்ஸும் சாவிக்கொத்தும் இருக்கின்றன. சாரதா பேச்செழாமல் நிற்கையில் முல்லைப்பற்கள் தெரிய ஒரு நகையுடன் அவள் அருகே வருகிருள். "ஷீல், உன் மம்மிக்கு என்னை இன்ட்ரட்யூஸ் பண்ணு ?"

"இது ... ... நான் சொல்வேனேம்மா, அநிலா. பாலிடிக்ஸ் எம். ஏ. சேர்ந்திருக்கான்னு..."

"ஓ .... வாம்மா ... சுசீ அடிக்கடி சொல்லுவா, ரொம்ப கெட்டிக்காரின்னு..."

சுசீ குறிப்பிட்ட ஒன்றிரண்டு தோழிகளைத்தான் வீட்டுக்குக் கூட்டி வருவாள். அவர்கள் சுசீலாவைப் போன்றவர்கள் தாம். ஆனல்.. இவள்...

"இங்கே படிக்க வந்து ஆறு மாசமாகிறது. இன்னிக்கு நானே கேட்டு வந்துட்டேன் ஆன்டி... உங்களை அப்படித்தான் கூப்பிடணும். உங்களுக்குப் பாருங்க .. ஸர்ப்ரைஸ்......" சட்டென்று பர்ஸைத் திறந்து ஒரு புகைப்படத்தை எடுத்து சாரதாவிடம் காட்டுகிருள் அநிலா.

சாரதாவின் முகத்தில் குளிர்ப் பூஞ்சாரல் விசிறும் அதே நேரத்தில் அநிலாவின் கண்கள் குளமாவதை அவள் நிமிர்ந்து பார்த்தால் புரிந்து கொண்டிருப்பாள்.

பத்மா ......

அந்தப் படத்தில் பத்மாவும் சாரதாவும் தோளோடு தோளாய் அணைந்து நிற்கின்றனர்.

"இது நீங்கதானே ஆன்டி? அப்பவும் தோடு மூக்குத்தி எல்லாம் போட்டுட்டு இருக்கிறீங்க. மம்மியின் போட்டோ வீட்டில் நிறைய இருக்கு. ஆனு அதெல்லாம் கல்யாணமான பிறகு எடுத்தது. எனக்கு இதுதான் ரொம்பப் பிடிச்சுது.." என்று படத்திலுள்ள தாய்க்கு உதட்டைக் குவித்து ஒரு முத்திரை வைத்துவிட்டுச் சாரதாவின் கன்னத்தோடும் உறவாடுகிருள். கண்ணீர் கன்னத்தில் படிகிறது.

"சுசீ இதைச் சொல்லவேயில்லையே?..."

"எனக்கு ஒண்ணுமே தெரியாதே? இது ... அம்மாவா?..." சுசீலா அந்தப் படத்தை வாங்கிப் பார்த்துக் கொண்டு சிரிக்கிருள்.

"உங்கப்பா லாயர்னு மம்மி சொன்ன ஞாபகம். எனக்கென்ன வோ

ராஜம்கிருஷ்ணன்

With Best Compliments
from

TRIKAMJI KANJI GAJJAR & SONS

CIVIL ENGINEERS & CONTRACTORS

Gajjar Nivas,
Dr. Ambedkar Road,
(Near Maheshwari Udyan)
Matunga, Bombay-19.

With
Best
Compliments
from

ERECON

Sarangpur Daulat Khana
AHMEDABAD-1.

உன்னைப் பார்த்தப்ப ஸ்ட்ரைக்காச்சு. உங்கம்மா பேரு. எந்தக் காலேஜில் படிச்சான்னு அதான் கேட்டேன். போன மூன்ரும் வருஷம் அப்பாவுக்கு பரலிடிக் ஸ்ட்ரோக் மாதிரி வந்து இங்கேதான் நர்ஸிங்ஹோமில் ஆறு மாதம் இருந்தார். நான் ஹைதராபாத்திலேயே படிச்சிட்டிருக்கேன் அப்ப. மம்மி அப்ப இங்கே வந்தப்ப, போட்டோவில இருக்கிற ஃபரண்டைப் பார்த்தேன்னு சொன்ன. அடிக்கடி உங்களைப் பத்திப் பேசுவா.."

"திடீர்னு பத்மாவுக்கு என்னம்மா வந்தது? நான் பேப்பரில்தான் நாலுவரி சேதி பார்த்தேன். நம்பவே முடியல்லே..."

"நான் பரீட்சை எழுதிட்டிருந்த நேரம். முடிச்சிட்டு வந்தப்போ, பிரின்ஸிபல் சோகமா வந்து, 'அநில், நீ வீட்டுக்குப் போகணும்'னுங்க, காலையில் கூடச் சிரித்த முகத்தோடு பர்த்தேன். ஹார்ட் அட்டாக்னு சொன்ன..." கண்ணீர் தானகவே பெருகுகிறது

பெண்மையின் நளினமோ, குழைவோ காணமுடியாத உடைகளின் உள்ளே ஒரு நெகிழ்ந்த நெஞ்சம் கரைகிறது. கூந்தல் ஆண் பிள்ளைக்குரிய 'கிராப்' வெட்டாக இராமல் நீண்ட பின்னலாக இருந்து, செவிகளில் பொன்னுலான பூக்களும், மார்பகங்களின் எழில் விளங்கும் ரவிக்கையும் அடக்கமான சேலைக் கட்டுமாகத் திகழ்ந்தால் அவளுடைய முகத்தின் தீர்க்கமான அழகு, பெண்மையின் கம்பீரமான தோற்றத்தையே விளக்குவதாக இருக்கும்.

அகன்ற கண்கள், எடுப்பான மூக்கு, அழுத்தமான மோவாய், வாட்டசாட்டமான வாளிப்பு-இயல்பான தோற்றம் ஒரு ஆணுக்குரியதாகவும் சோபிக்காமல் இந்த உடையில் ஒரு ஆண் பெண்ணின் வேடத்தில் ஒளிந்தாற்போல் விசித்திரமாகக் காட்சி அளிக்கிருள்.

"மம்மி இப்படி போயிடுவான்னு நான் எதிர்பார்க்கவேயில்லே. ஆனு கொஞ்ச நாளாகவே அவள் ரொம்ப 'வீக்'கா இருந்தான்னு நினைச்சேன் .. சீ .. நான் அழறேனே?.." கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டு தலையைக் குலுக்கிக் கொள்கிருள் நீரில் முழுகிய பின் தலையைத் தூக்கிச் சிலுப்பிக் கொண்டு புன்னகை செய்வது போலிருக்கிறது.

"அப்பா இப்ப எங்கே இருக்கிருர், மா?"

"ஹைதராபாத்தில்தான். ஆன்டி, நீங்க இந்த போட்டோ எடுத்துக்கறப்பல்லாம் மம்மி எப்படி இருப்பா?" பொலிடிகல் சயன்ஸ் எடுத்திட்டுப் படிச்சாளாம் எனக்கு அந்த நாளைப் பற்றிக் கேட்கணும்னு ஆசை. அப்ப அம்மாவுக்கு ஒரே முற்போக்கு வேகமாமே? ப்ராக்ரஸிவ் யூனியன் செக்ரடரியாகக் கூட இருந்தாளாமே?"

சாரதாவுக்குப் பழைய நினைவுகள் அலை அலையாக வருகின்றன. அந்தக் காலத்தில் பத்மா தீவிர முற்போக்கு வாதி.

"அந்தப் பத்மாவுடன் சேர்ந்து அடங்காம போறதுக்காக உன்னைப் படிக்க வைக்கல்லே. அவளோட என்ன சிநேகம்?" என்று பெற்ருேர் சாரதாவைக் கண்டிக்காத நாளில்லை.

"காதில், மூக்கில், கழுத்தில், கையில் ஒண்ணில்லாம, பாழ் நெத்தியும் வெள்ளைப் புடவையுமாக வந்து நிற்கிறது; அவளோடு உனக்குச் சகவாசம் வேண்டாம்!" என்பார்கள். அந்தக் காலத்தில் சாரதாவுக்கு அவளைப் போல் வெள்ளைப் புடவை உடுத்த வேண்டும் என்று எவ்வளவு ஆசை! ஹூம், சாயம் அழிந்து சலவையில் வெண்மையாகிவிட்ட சேலைகூட இட்டிலித் தட்டுக்குப் பயன்படப் போய்விடும்!

"உன் அம்மா அந்த காலத்தில் கட்டுப்பாடுகளை உடைத்தெறியத் தூண்டும் புரட்சிக்காரின்னு எனக்கு அவளிடத்தில் ஈடுபாடு. பெண்ணின் சிந்தனைகளைத் தனித்தன்மையுடன் வளரவொட்டாமல் இந்த அர்த்தமற்ற மூடநம்பிக்கைக் கட்டுப்பாடுகள் தடுக்கின்றன என்பாள். அடுப்படியிலிருந்து அரசியல் வரை அவள் முற்போக்குக்காரி. அப்போதைய முற்போக்கு அரசியல் வாதிகளைக்கூட இவள் பேச்சினுல் கவர்ந்த

FOR GROWING CHILDREN...

FOOD ALONE MAY NOT BE ENOUGH



FOR CHILDREN, ADULTS AND CONVALESCENTS

FERRADOL

FOR FITNESS

A PRODUCT OF PARKE-DAVIS

Children are always rushing about. They use up a tremendous amount of energy. And though you give your children regular, nourishing meals, they may still suffer from undernourishment. Why is this? Their energy expenditure often exceeds the nutrition obtained from regular meals. A dietary gap results. It increases steadily...leads to loss of vitality, undernourishment and low resistance to illness. **FERRADOL fills the dietary gap.** Specially formulated to fill the dietary gap, FERRADOL is a balanced combination of important body-building vitamins and blood-enriching iron in a pleasant malt base. As a nutritive tonic, FERRADOL has been the family stand-by for well over a generation. It is equally beneficial for children, adults and the aged. After illness, FERRADOL helps speed the convalescent's return to an active life.

PDY-3

துண்டு. இந்தப் போட்டோவில்தான் பாரேன்? முழு வெள்ளைப் புடவை, மூக்குக் கண்ணாடி, பரபரப்பு, துருதுருப்பு. இதன் பிரதி ஒன்றை எனக்கு வீட்டில் வைத்துக் கொள்ளப் பயம்! நான் வாங்கிக் கொள்ளவே இல்லை. என்னை அதற்காக அவள் கேலி செய்தாள். அவளை யூனியன் செக்ரடரியாக்கப் பாடுபட்டு வெற்றி கண்டவர்... உன் அப்பாதான் !"

"ஐயோ ? அப்பாவா ? பொய் ! நான் நம்பவே மாட்டேன் ?"

"பின்னே ? அப்பத்தான் அவர் ஆக்ஸ்ஃபோடிலிருந்து வந்து லெக்சரராகச் சேர்ந்திருந்தார்... இவளைக் கொஞ்ச நாளிலேயே வசமாக...... "

சுசீலா குபீரென்று சிரிக்கிறாள்.

ஆனால் அநிலா சிரிக்கவில்லை. முகம் சுண்டிப் போகிறது.

"ஹ்ம். இதுதான் எனக்கு மம்மியிடம் பிடிக்கவில்லை, புரியவில்லை. ஆன்டி, இந்த ஃபோட்டோவில் எப்படி இருக்கா ? எனக்கு இதுதான் ரொம்பப் புடிச்சிருக்கு......"

சாரதாவின் இதழ்களில் புன்னகை - விளையாடுகிறது.

"அவ அப்படியே இருந்திருந்தா, நீ எப்படிம்மா வரது ?"

"வர வேண்டாமே? நானும் அவளுள்ளிருக்க, மலையவ்வளவு உரம் பெற்றிருப்போமே, சமுதாயத் தீமைகளை எதிர்த்துப் போராட? மம்மி அவ்வளவு எளிதில் மாறியிருக்கக் கூடாது. அவ மாறாமல் இருந்திருந்தால், நல்லதொரு அரசியல் தலைவராகவோ, ஆளும் பொறுப்பின் அங்கமாகவோ வந்திருக்கக்கூடும். ஒரு பெண்ணின் தனித்தன்மையை, திறமையை வளரவொட்டாமல் அடிக்கிறதற்கே சில கட்டுப்பாடுகளை வளர்க்கிறார்கள் இதுவும் ஏறக்குறைய 'ப்ரெய்ன் வாஷிங்'தான். நாமெல்லாம் இதை, கட்டுப்பாடுகளை உடைத்தெறிய வேண்டும்!''

"உங்கப்பாதான் பத்மாவை அவளுடைய சுதந்திரமான எண்ணங்களை வளரவொட்டாமல் தடுத்தார்னு எப்படிம்மா சொல்லுவாய்?"

"சந்தேகம் வேறு? அதான் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டாளே? போச்சு !"

சாரதாவுக்குச் சிரிப்பு வருகிறது. ஆனாலும் அவள் அடக்கிக் கொள்கிறாள். ஓரளவு அது உண்மையாகவும் இருக்கக்கூடும். அவள்தான் எப்படி மாறிவிட்டாள்? சென்ற இரண்டாண்டுகளுக்கு முன், பவானி மடத்தில் பார்த்த காட்சியை அவளாலேயே நம்ப முடியவில்லை.

பெரிய கூடம். ஒவ்வொரு மங்கலப் பெண்ணும் குத்து விளக்கில் ஐந்து முகச் சுடர் பொலிய, பொன்னும் பூவும் வைத்து வழிபடுகிறார்கள். ஆக இருளைப் போக்கிக் கொள்ள ஒரு வழிபாடாக, ஆன்மீக வாழ்வின் படிகளில் ஏறிச் செல்ல ஒரு சாதனமாக அந்த வழிபாட்டில் அவள் பங்கு கொண்டிருந்தால் கூட அவளுக்கு அத்தகைய வியப்பு தோன்றியிருக்காது

வற்றிச் சருகாக, பட்டுச் சேலையும் மூக்கில் முத்துச் சுடரும் பொலிய அவளை, பூஜையைப் பார்க்கப் போயிருந்த சாரதா கண்டாள்.

"பத்மாவா ?..."

"சாரு...?" என்று கூவியவளுக்குக் குரல் எழும்பாத துயரம், கண்கள் பனிக்கின்றன.

"அவர் அஞ்சு மாசமா ப்ராலிடிக் ஸ்ட்ரோக் வந்து படுத்திருக்கிறார்டி. எனக்கு என்ன செய்வதென்றே தெரியல்லேடி...!"

உண்மையில் சாரதா அதிர்ந்து போனாள்.

துள்ளிக் குதிக்கும் ஒரு ஆற்றல் சிறையினுள் மங்கி மங்கித் தன்னம்பிக்கையையே இழந்து விட்டதோ ? பெண்...அவள் ஒரு ஆளைச் சார்ந்தாலே வாழ்வு, மங்களம், மகிழ்ச்சி, பூ, பொன், பொட்டு, பட்டு...

இந்தக் கோட்பாட்டில் அவள் ஆண் என்ற துணையைப் பற்றித் தன்னைக் கரைக்க வேண்டும். அந்தத் துணை போனால் அவள்... சூனியமாகிவிடுகிறாள்? இந்தக் கொடுமையின் அச்சத்தை நெஞ்சில் கொண்டுதான் பத்மா ஒரு காலத்தில் மூட நம்பிக்கைகள் என்று இகழ்ந்தவற்றுக்குத் தன்னை உள்ளாக்கிக் கொண்டாளோ என்று சாரதா நினைத்தாள். இக்கோடி அல்லது அக்கோடியா ?

TREAT YOUR FEET TO *Carona* FOOTWEAR

Your feet do a lot for you...
like carrying you around all day.
Do something for them in return.
Put them into a pair of comfortable,
elegant Carona shoes. You'll like
the way your friends will
admire your Carona shoes.

Carona **FOOTWEAR**
—elegant footwear for all occasions!

Support World Wildlife Fund—Indian National Appeal.

AIYARS-CS-146

" ஆன்டி ? நீங்களே இதைப்பற்றி உண்மையா நினைச்சுப் பாருங்க. ஒரு மனைவி உடல் நலமில்லாம இருந்தாலோ, அல்லது இறந்து விட்டாலோ, அது அவள் புருஷனை எந்த விதத்தில் பாதிக்கிறது ? நான் சாப்பாடு, பண வசதி இதெல்லாம் குறிப்பிடல்லே. சமுதாயத்தில் அவளுக்கு அதனால் ஏதானும் தாழ்வான நிலை வருகிறதா? இல்லையே? பின்ன, ஒரு பெண்ணை மட்டும் ஏன் பரிதாபத்துக்குரிய பிறவியாக ஆக்கணும், அதே நிலையில்? மம்மியை, நான் அப்பா உடம்பு சரியில்லாம பாத்தப்ப, கிலி பிடிச்சுப் போனாப்பல இருந்தது. அவளுக்கு என்ன வந்ததுன்னே எனக்குப் புரியல்லே. யார் யாரோ கொடுத்த மந்திரக் கயிரெல்லாம் கட்டிட்டிருந்தா...... ஏன் ....? ஏனிப்படி ? .... "

சாரதாவுக்கு நா எழவில்லை.

" தப்பு ஏதானும் நடந்தாலும் அவ தலையில்தான் பழி சுமத்துகிறார்கள். சுமையும் அவள் மடியில். இதை எதிர்க்கணும். அடிபணியக் கூடாது. இதனால்தான், உண்மையான தன்னை ஒரு பொய்யான நம்பிக்கையில் இழந்துவிட்ட மம்மியைவிட இந்தத் தோற்றம் எனக்குப் பிடிக்கிறது... "

அநிலாவின் அகன்ற விழிகளில் ஒளி வீசுகிறது.

" நீ என்ன பாடம்மா எடுத்திருக்கே ? "

" மம்மி அப்பல்லாம் பெண்களுக்கு ஆர்ட், லிட்ரேச்சர் தான் சரின்னு என்னை லிட்ரேச்சர் எடுத்துக்கச் சொன்னா. அதுதான் மன அமைதி, ஆழ்ந்த இன்பம் கொடுக்கும்னு சொல்வாள். அப்ப என்னமோ, பி. ஏ. அதான் படிச்சேன். இப்ப என் கருத்து மாறிப் போச்சு. இப்ப பாலிடிக்ஸ், எகனாமிக்ஸ் எடுத்துருக்கிறேன். ஆன்டி, முற்போக்கு சங்கம்னுகூட ஒன்னு ஏற்படுத்தியிருக்கிறோம். ஷீல், நீங்க சொன்னாத்தான் அதுலே சேருவேன்னு சொன்னாள். "

பூ மூச்சாய் இழையும் சிசுவின் உடல் தூக்கத்தினூடே அதிர்ந்தாற் போல் உள்ளூற ஒரு குலுக்கலில் சாரதா சமாளிக்கிறாள்.

" அப்படியா ? சுசியை நான் கட்டுப்பாடு பண்ணுவதில்லையே? ஆனால், இப்பத்தான் பெண்கள் சரிசமமா முன்னேறி இருக்கறப்ப...... "

" என்னத்தை முன்னேறியிருக்கு?" முகம் சிவந்து கனலாகிறது. சொற்கள் வெடித்துத் தெறிக்கின்றன. "எவ்வளவுதான் படிச்சு வேலை பண்ணினாலும் தானே சம்பாதிச்சு சேர்த்த பணத்தை இந்த ஆண் வர்க்கத்துக்குக் கொடுத்துக் கல்யாணம் பண்ணிட்டு சுயமான தனித் தன்மையை இழக்கிறது தான் பெண்மைன்னு வேரோடியிருக்கிற மனப்பான்மை முன்னேற்றமா? இந்த ஆண் வர்க்கம் காலம் காலமா பெண்ணினத்தை அடிமைப் படுத்தியே சட்டதிட்டங்களை அமைத்து, அதற்குள் குடும்ப வாழ்வுங்கற போலி சுதந்திரத்தை வழங்குகிறது. உள் புகுந்து பார்த்தால் ஒரு பெண் பிறந்ததிலிருந்து, நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் வளைஞ்சு போகவே பழக்கப்படுத்தப் படுகிறான்னு புரியும். இல்லாட்டா இந்த வரதட்சிணை வழக்கம் என்னிக்கோ ஒழிஞ்சிருக்கும்; பெண் சுயநம்பிக்கை இல்லாமல் இழிவான தொழிலில் இறங்கும் கொடுமையும் ஒழிஞ்சிருக்கும். நீங்க ஒப்புத்துக்கிறீங்களா ?"

ஒப்புகிறாயா, ஒப்புகிறாயா என்று அதட்டுவது போல் கேட்கிறாள். இத்தகைய கிளர்ச்சி இவளுடைய இயல்புக்குரியது தானோ ?

ஆனால், பத்மா இப்படித்தானே இருந்தாள் ? முன்னேற்றம் என்ற தராசுத் தட்டில் ஒன்றுமே இல்லாத காலத்தில் அவள் பொருமிப் பொரிந்தாள். இப்போது தராசுத் தட்டில் பளு ஏறியும் அது தாழ்ந்துதான் கிடக்கிறது என்று இவள் பொருமுகிறாள். ஏன் தாழ்ந்து கிடக்கிறது? முள்ளே வளைந்து கிடக்கிறது. முள்ளே...... பெண்ணின் பெருமை, அட்டைகளிலும், விளம்பரச் சுவரொட்டிகளிலும், அன்று இறையருளால் நிகழாமல் போன துரௌபதை துகிலுரிவு படலங்களாய் விரிந்து காட்சி தருவதை சமுதாயம் வரவேற்று ஆதரித்து மகிழ்வதுதான்

With

Best

Compliments

from

WESTERN PAPER AND YARN PRIVATE LIMITED

Distributors for

TRAVANCORE RAYONS LTD.

for the States of Maharashtra and Gujarat
'Khetan Bhavan', 4th Floor, J.N. Tata Road,
Post Box No. 11127, Churchgate Reclamation,
Bombay-20.

Telegram : "YARNPAPER"

Telephone : 291625 &
294365

உண்மை. பெண் ஏன் இழிநிலைக்கு வருகிருள்? தன் உயர்வின் மீது நம்பிக்கை இழந்துவிட்டாள் என்பது சரிதானே ?

"ஒத்துக் கொள்கிறீர்களா ஆன்டி ?"

"சரிம்மா ...... !"

"பின்னே இவளைச் சேரச் சொல்லுங்க?"

"அவள் சுதந்திரத்தில் நான் ஒருநாளும் குறுக்கிடல அநிலா!"

"குட் ... !"

அநிலா அவளைத் தழுவிக் கொண்டு கன்னத்தை அழுத்திக் கொள்கிருள். அவள் படியிறங்கிச் செல்லும் வரையிலும் சுசீலா பேசவில்லை.

"என்னம்மா இது? நான்சென்ஸ், நீ பாட்டுக்கு 'உம்' கொட்டறே? நீ நிசம்மா ஒப்புக்கறயா? முற்போக்காவது சங்கமாவது. பேத்தல்!"

சாரதா வியப்புடன் மகளைப் பார்க்கிருள். இந்த வார்ப்பு வேறு. வழிகாட்டிகளைப் படித்து, குடத்தில் அடைத்துக் கொண்டு போய் பரீட்சைக் கூடத்து விடைத்தாளில் கக்கிவிட்டு, பெயருக்குப் பின்னுல் எழுத்துக்களைத் தேடிக் கொள்ளும் இலட்சோப லட்சங்களில் ஒரு துளி.

"முதல்லே, இவர்களுடைய சங்க விதிகளில் ஒண்ணைக் கூட உன்னுல் ஒப்ப முடியாது. தலையைக் கிராப் பண்ணிக்கோ, இல்லாட்டா சிகரெட் பிடி ..."

திடுக்கிட்டுப் பார்க்கிருள் சாரதா "என்னம்மா சொல்றே ?"

"பின்னே? எதேனும் ஒரு கட்டுப்பாட்டைப் பகிரங்கமா உடைச்சிட்டுத் திரியணும். உடை சம்பந்தமான வெளிவேஷக் கட்டுப்பாட்டையே உடைக்காத போனுல் புரட்சித் துணிவு வராதாம். நான் உன்மேல் பழியைப் போட்டு தப்பிச்சிட்டா, நீ மாட்டி வைக்கறே! ஒப்புக்கறியா ?"

சாரதாவுக்கு என்னவோ போலிருக்கிறது.

புரட்சி என்ருல் புரட்சிதான். குழம்பித்தானே தெளிய வேண்டும்? எவ்வளவுதான் ஆறுதல்கள் செய்து கொண்டாலும் அமைதி கிடைக்கவில்லை.

வீட்டுப் படியை விட்டுப் புதிதாகக் கிளர்ச்சியுடன் தெருவில் முதலடி எடுத்து வைக்கும் குழந்தைக்குத் தெருவிலுள்ள அபாயங்களை முன்னதாக உணரும் முதிர்ச்சி ஏது? அநிலா ஒரு குழந்தை. கனலும் இளம் பொறி. அநிலாவைப் பிறகு காணவேயில்லை வெகு நாட்களுக்குப் பிறகு அவள் கேட்டாள்.

"அநிலா ஊருக்குப் போயிருக்கிருளா, சுசீ ?"

"ஓ, உனக்குத் தெரியாதாம்மா? முற்போக்கு சங்க நிதிக்காக 'ஷோ', ஃபன் ஃபேர்னு ஒண்ணு நடத்தினுளா, வி. எச். காலேஜ் ப்ரமிஸிஸ்லே ?"

"ஆமாம், அங்கே விளக்கணேஞ்சு கலாட்டால்லாம் நடந்து ஆசிரியருக்குக் கடிதங்கள் பத்தியில் யாரெல்லாமோ எழுதிண்டேயிருந்தாளே, அதானே ?"

"அதேதான். அதற்கப்புறம் அவளை இந்த மதருஸ்லே காணலே; அவ அத்தையோ, சித்தியோ வந்து அழைச்சிட்டுப் போனதாகக் கேள்வி .."

மகளின் இதழ்க்கடையில் ஒரு ஏளனப் புன்னகை மின்னி மறைகிறது. ஆனுல் சாரதாவுக்கோ அடிவயிற்றைச் சுருட்டிப் பிடித்தாற்போற் வேதனை உண்டாகிறது.

எத்தனையோ இளம் பொறிகள் கனன்று சீறி மேலே எழும்புகின்றன. குளிர்ந்து கருகித் தாழ்ந்து மடிகின்றன. அநிலாவை இனியும் அந்தக் கவடற்ற பரபரப்போடு, துடிப்போடு பார்க்க முடியுமோ? இலட்சோப லட்சங்களைப் போல் அவளும் ஒரு துளி. ★

Gopal works for Century Rayon 8 hours a day

Century Rayon looks after Gopal the other 16 hours

Gopal is one among 7000 workers at Century Rayon. He works an 8-hour shift. When he's off duty, Century Rayon strives to keep him off the everyday worries.

Like lunch-break, for example. He doesn't have to worry if his food has arrived from home. He gets his, at the subsidised canteen. A wholesome meal at a fraction of its cost.

After work hours, Gopal returns home—a subsidised house in the Century Rayon Colony, to have his family under a roof. The next-to-factory colony also saves him the bother of transportation.

Medical help is within a 'calling' distance. Leisure finds Gopal & his family playing indoor or outdoor games. Or, watching a movie with the family, once a week. Courtesy: his welfare club. So the next day, Gopal returns to work a happy man.

It takes a lot more to keep Gopal and his 6999 colleagues happy. During the 16 hours they aren't working.

Belief of Century:
a happy worker is a happy company.

Century Rayon

Industry House, 159, Churchgate Reclamation, Bombay-20.





THE WALLACE FLOUR MILLS COMPANY LIMITED

9 Wallace Street, Fort, Bombay-1.

Manufacturers & Exporters of :

WHEAT PRODUCTS SUCH AS FLOUR, ATTA, RAWA SOJI & BRAN AND GRAM BESAN

MILLS :

Bombay
'A' Mills
Chikalwadi
Tardeo
'B' & 'C' Mills
Mazagaon

Bhopal
Central India
Flour Mills

Goa
Goa Flour Mills
Chicalim
Vasco-Da-Gama

நாடக மகுடம்

'கலைமணி' — 'நாடகமணி' —
— 'இலங்கேஸ்வரன்'

திரு. ஆர். எஸ். மனோகர்

"காந்தன்"

மனோகர மேடை

அறுபத்து நான்கு கலைகளில் நாடகக் கலையே சிறந்தது. எப்படியெனில், மற்றக் கலைகளிலுள்ள தனிச் சிறப்புக்களை நாடகக் கலையில் ஒருங்கே காணமுடியும். நல்ல அழுத்தமான கதையை நாடகமாக்கி, சிறந்த பாத்திரப் படைப்பினால் நல்ல உருக்கமான சூழ்நிலையை உருவாக்கி விட்டால் அந்த நாடகம் மற்ற நுண் கலைகளான நடிப்பு, அபிநயம், இசை, நாடகம், நடனம் இவை தவிர நவரசங்களையும் அதியற்புதமாக வடித்துக்காட்டும் வண்ண ஓவியமாகத் திகழும்.

ஆயிரம் பள்ளிக்கூடங்கள் செய்யும் கல்வித் தொண்டை ஒரு நாடகத்தின் மூலம் அநாயசமாகச் செய்துவிட முடியும். எத்தனையோ பொது மேடைகளில் செய்யும் பிரசாரத்தை ஒரு நாடகக் காட்சியின் மூலம் பொது மக்களின் மனத்தில் பதியும் வண்ணம் எடுத்து காட்டிவிட முடியும்.

பொதுவாக, பாரத நாட்டில் நாடகக்கலை தழைத்து வளர்ந்து பரவியிருக்கிறது. குறிப்பாக, தமிழ் நாட்டில் மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. ஒரே பாடல் மயமாக இருந்த நாடகம் படிப்படியாக மாறுதல் அடைந்து ஒரு சிறப்பான இடத்தை அடைந்திருக்கிறது.

திரு ஆர். எஸ். மனோகர், நாடகக் காவலர் என்ற சிறப்புப் பெயரைத் தாங்கியவர். பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகவே நாடகக் கலையின் சிறப்புக்காகவே அயராது உழைத்து அரும் பாடுபட்டு அரிய பெரிய இதிகாச, புராண, சரித்திர நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றி. கலையுலகில் தனக்கென ஒரு தனி இடம் தேடிக் கொண்டு விட்டார்

அவர் நாடகங்களின் தனிச்சிறப்பு திரைப் படங்களையே திணற வைத்ததுதான். காட்சி ஜோடனைகளிலும் சரி, உடைகளிலும், அலங்காரங்களிலும் சரி, மூன்று நிமிஷங்களுக்கு மேல் அதிகரிக்காத விறுவிறுப்பான காட்சி அமைப்புகளிலும் சரி, திரைப் படங்கள் அவர் நாடகங்களுக்கு எதிராக நிற்க முடியாமல் ஓடியே போய் விடும்!

திரு மனோகரின் திறமை பளிச்சிடுவதின் காரணம் எதுவாயிருக்கும் என்று ஆராய்வோம்.

எந்தக் கதையை அவர் நாடகமாக அமைக்கிறார் என்பதல்ல முக்கியமான விஷயம். அந்தக் கதையை எப்படி நாடகமாக அமைக்கிறார் என்பதுதான் முக்கியமான விஷயம். அவர் ஒரு கதையை நாடகமாக்க எண்ணினால், அதிலுள்ள நாடக இயலைத் தான் அதிகமாகக் கவனிக்கிறார். எதிலும் "சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்" என்னும் அரிய உத்தியைத்தான் அடிப்படை அம்சமாகக் கையாளுகிறார். பிறகு. அவர் கையாளுவது புதுமை. அதாவது பழம் புராணக் கதையிலும் புதுமையான அம்சத்தைத் தேடிப் பிடித்து அதற்கு மேடையில் முக்கியத்துவம் ஏற்படச் செய்கிறார் அந்தப் புதுமையையே சஸ்பென்ஸாக அமைத்து நாடகத்தின் கடைசிக் காட்சி

வரையில் உயிர் நாடியாகச் செய்து விடுகிறார். அப்புறம், இதிகாச புராணக் கதைகளுக்கே உரிய பாத்திர எண்ணிக்கையைச் சற்றும் அலுத்துக் கொள்ளாமல் தாராளமாகவே அமைக்கிறார். சாதாரணமாக நாடகங்களில் பாத்திரங்கள் குறைவாக இருப்பதுதான் எல்லா விதத்திலும் நல்லது என்று நினைப்பதுதான் நாடகக் குழுவினரின் சிறப்பு திரு. மனோகர் அதற்கு முற்றிலும் மாறானவர் நிறையப் பாத்திரங்களைப் படைத்து, சிக்கலில்லாமல். குறைந்த உரையாடலையும், நிறைந்த காட்சிகளையும்' சுவாரஸ்யமான 'டெம்போ'வின் மூலமாகவே நாடகத்தைச் சிறப்பாக நடத்திச் செல்லும் ஆற்றல் அவரிடம் அபரிமிதமாக இருக்கிறது.

பழைய புராணக் கதைகளை அப்படியே மேடையேற்றியிருந்தால் திரு. மனோகர் இவ்வளவு புகழடைந்திருக்க முடியாது. எந்த இதிகாச பாத்திரமானாலும் அதன் நல்லியல்புகளை அலசியெடுத்து, அவற்றின் காரண, காரியங்களை ஆராய்ந்து அறிந்து, அதற்குப் பிறகு அந்தப் பாத்திரத்தை மேடையில் ஏற்றுவது அவரது பண்பட்ட வழி.

உதாரணமாக, அவரது குழுவினராக நேஷனல் தியேட்டர்ஸாரின் முதல் நாடகம் ''இலங்கேஸ்வர''னை எடுத்துக் கொள்வோம். பிறன் மனைவியை அபகரித்துச் சென்ற பித்தனாகவும், கொடிய அரக்கனாகவுமே பல்லாண்டுகளாகக் காட்சியளித்து வந்த ராவணனை மிக உயர்ந்த பண்புள்ளவனாகத் தோன்றச் செய்த பெருமை திரு' மனோகரையே சேரும். இதற்கு ஆனந்த ராமாயணக் கதையை ஆதாரமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இதே மாதிரிதான் ''காடகமுத்தரையன்" நாடகமும். மிகவும் பொல்லாதவனாகவே கடைசிவரையில் தோன்றும் அம்மாபெரும் ராஜ தந்திரி எவ்வளவு நல்லவன் என்பது நாடக முடிவில் வெளியாகிறது.

''சூரபத்ம''னையும் திரு. மனோகர் நல்லவனாகத்தான் காட்டியிருக்கிறார். இப்படிப் பட்ட உத்தம வீரனான சூரபத்மனை முருகப் பெருமான் சம்ஹாரம் செய்துதான் ஆக வேண்டுமா என்று கூட நினைக்கச் செய்து விடுவது நாடகத்தின் சிறப்பான அமைப்பு

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பரம வைரியான ''சிசுபால''னை நாடக மேடையில் நல்ல குணசீலனாகக் காட்டி, இதிகாசக் கதைக்கே புதிய ஒரு திருப்பத்தைத் தந்து விட்டார் திரு. மனோகர். ''சிசுபாலன்'' அவரது வெற்றி நாடகங்களில் ஒன்று.

நாடக உலகம் இடைக்காலத்தில், அதாவது தமிழ்ப் பேசும் படங்கள் வரத்தொடங்கியதிலிருந்து, இருண்டு போக ஆரம்பித்தது. அச்சமயம் நாடகத்தில் நாட்டமுள்ள பல கலைஞர்கள் பல புதிய உத்திகளுடன் புதிய நாடகங்களை அரங்கேற்றி மீண்டும் ஒளியுண்டாக்கினர். அவர்களில் திரு மனோகருக்கு என்றும் தனியிடம் உண்டு. நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு அதியற்புதக் காட்சிகளை மேடையில் படைத்து வண்ணப் படம் பார்ப்பது போன்ற பிரமையை உண்டாக்கி எல்லோரையும் அயர வைத்து விட்டார் திரு. மனோகர்.

இத்தகைய புதிய நோக்கு, புதுமுறை அணுகல் (approach), புதிய உத்தி இவ்வளவையும் கொண்ட நாடகங்களையே நடத்துவது என்ற கொள்கை மிகவும் உயர்ந்ததுதான் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. ஆனால் அதைச் செயலாக்குவதிலுள்ள சிரமங்களையும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கதாநாயகனை மாத்திரம் உயர்வாகக் காட்டி விட்டால் போதாது. அவனுக்கு ஏற்ப மற்ற பாத்திரங்களையும் உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. மூலக் கதையினின்றும் வழுவாமல்தான் மேற்படி மாற்றங்களைச் செய்ய முயல வேண்டும். மூலக்கதையின் அடிப்படைக் கருத்து

மற்ற பாத்திரங்களை மாற்றி அமைக்க முடியாமல் குறுக்கே நிற்கும். அப்பொழுது நாடகத்தின் தரம், சுவை, சிறிது குன்றக்கூடும். அத்தகைய குறைபாட்டைப் போக்குவது மிகவும் சிரமமான காரியம். திரு. மனோகரின் நாடகங்களிலும், வேகமான, நூதனமான மாற்றங்களை மேற்கொள்ளுவதனாலேயே கதாநாயகனைத் தவிர மற்ற பாத்திரங்கள் வலிவிழந்து போக நேரிடும் குறைபாட்டைக் காணும்படியாகிவிடுகிறது.

உதாரணமாக "சூரபத்மன்" நாடகத்தில், தேவகுருவான பிருஹஸ்பதியும், அசுர குருவான சுக்கிராச்சாரியாரும் சந்திக்கும் காட்சிகளைக் கூறலாம், சூரபத்மன் நல்லவனாவதற்குச் சுக்கிராச்சாரியார் மிகவும் கொடியவராக வேண்டி வந்தது அவர் கொடியவரானதும் வியாழ பகவான் என்று மரியாதையாக அழைக்கப்படும் தேவகுருவான பிருஹஸ்பதி ஓர் உதவாக்கரைப் பாத்திரமாக வேண்டி வந்தது. இவைகளையெல்லாம் பெரிய குறைகளாகச் சுட்டிக் காட்டவில்லை ஆயினும் திறனாய்வு என்று ஆரம்பித்தால், நியாயமான முறையில் அதைச் செய்ய வேண்டும் அல்லவா? அந்த முறையில்தான் மேற்படி குறைகளை எடுத்துக் கூறினேன். திரு. மனோகரின் புதிய முயற்சிகளை நான் என்றும் வரவேற்பவன். லாப, நஷ்டம் பற்றிச் சிறிதும் சிந்தியாமல், கலைவளர்ச்சி ஒன்றையே லட்சியமாகக் கொண்டு விடாமுயற்சியுடன் நாடக மேடையில் அரிய சாதனைகளைச் செய்து வரும் திரு. ஆர். எஸ். மனோகர் நம் பாராட்டுக்குரியவர். தெய்வபக்தி. கற்பு. பொறுமை, வீரம், அரசாட்சி நடத்துவோரின் பொறுப்பு. நட்பு முதலிய அருங்குணங்களைப் பாத்திரங்களின் வாயிலாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் நற்பணியைச் செய்து வரும் திரு. மனோகர் இன்னும் பல நூறு நல்ல நாடகங்களை அரங்கேற்றிப் பொன்றுப் புகழுடன் விளங்க வேண்டும் என்று குன்று தோருடும் குமரப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன். *

With Best Compliments
from

MODERN ENGINEERING WORKS

275/29 Bellasis Road.

Bombay-8.



Soon she'll have savings to count on!

Make your child start saving now. Open a Savings Bank Account for her, with the State Bank. She'll love to see her savings grow.

Cheque-operated Minors' Savings Bank Accounts can be opened:

(a) by a natural or court appointed guardian who operates the account till the minor attains majority, at which time the latter begins operating the account.

(b) by children 14 years old or above who can make deposits and withdrawals themselves.

State Bank for Service

-Aiyars S. 147 D

தரிசனம்

கங்குல் அயர்ந்து மரித்தவுடன
காலை வியந்து சிரித்தவுடண்
பொங்கும் இளம்கதிர்க் கனறினம் பொன்னொளிப்
பூழ்தி எழுப்பித் திரிந்திடவும்
எங்கும் எழுச்சியின் இன்னிசை பாய்ந்(து)உயிர்
எண்ணிறந் (த)ஆற்றல் புரிந்திடவும்
மங்கிய சிந்தனை விண்ணிடை-யுன்
மாண்புறு காணும் கரம்குவியும் !

வாடிய ஞாயிறு வீழ்ந்தவுடன்
வண்ண இருள்திரை தாழ்ந்தவுடன்
கோடி ஒளிச்சிறு மீனினம் வான்கடல்
கொட்டிப் பிறழ்ந்து குதித்திடவும்
மோடி ஒளித்தினை காதலர் இன்பம்
முயங்கி மயங்கிச் சுகித்திடவும்
கூடிய துன்ப நினைப்பிடையுன்
கோலம் அறிந்தென் சிரம் குனியும் !

சுற்றிய துன்பம் நெருக்குகையில்
சோதனை வம்பும் உருக்குகையில்
மற்றினி வாழ்விலை என்றெந பாழ்மனம்
மாள நினைத்தே தவித்திடவும்
பற்றெந கோடி இங் குண்டென ஓர்மனம்
பாய்ந்து தடுத்து மறித்திடவும்
உற்றிநு நல்மன வெற்றியிலுன்
உண்மை தெளிந்தென் உளம்கசியும் !

நா. ஸ்ரீ வரதராஜன்



With the Compliments

of

AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED

BOMBAY/LUCKNOW.

MANUFACTURERS OF : LAMBRETTA SCOOTERS AND THREE WHEELERS, API CLUTCH SYSTEM, API BRAKE SYSTEM AND API STEERING LINKAGES.

இந்திய நாடகமேடை

நவீன் காண்ட்வாலா

"இந்த பாரத தேசத்தில் எல்லாவுமே கடவுள்களிடமிருந்து தோன்றியவைதாம். நாடக மேடையும் கூடத்தான்." பிரமன் ருக்வேதத்திலிருந்து சொல் முறையையும், சாம வேத்திலிருந்து இசையையும், யஜுர் வேதத்திலிருந்து பாவங்களையும், அதர்வண வேதத்திலிருந்து உணர்ச்சியையும் வடித்தெடுத்தார். தேவர்களுக்கு நாடகங்களை நடிப்பதில் சொந்த சிரமங்கள் இருந்தன போலும். எனவே, அந்தப் பொறுப்பை மனிதர்களிடம் ஒப்படைத்தார்கள். பரத முனியும் இந்த நாட்டு சம்பிரதாயமான நாடக இயலின் பகுதிகளாக விளங்கும் அங்க அசைவுகள், மேடை அமைப்பு, கற்பனை வளம் இவற்றை உள்ளடக்கிய கருத்துக்களை நாட்டிய சாஸ்திரம் என்ற நூலாகத் தொகுத்தார். விசுவகர்மா என்ற சிற்பி அரங்கை நிர்மாணித்தார்.

பரத முனிவனுடைய நாட்டிய சாஸ்திரம் மிக லௌகீகமான எளிய விளக்கங்கள், தெளிவுகள், வழிமுறைகளோடு உலகத்திலேயே ஈடு இணையற்றதாகி விளங்குகிறது. இவ்வியல் பலவேறு நாடக வர்ணனை, அமைப்புகள், நாடக அரங்கங்கள், நாடகத் தயாரிப்பு முறைகள், நாடக மேடையேற்றம் நாடக பாவங்கள், நல்ல நாடகங்களை உருவாக்கும் உணர்வு நிலைகள், அவை ரசிகர்களிடையே தூண்டிவிட வேண்டிய உணர்ச்சிகள் இவற்றை விரிவாகப் பேசுகின்றது. மேலும், நாடக இயக்கு முறைகளைப் பற்றிய விரிவான வழிவகைகளை— மொழியைப் பயன்படுத்துவது பற்றியும், உரையாடல், அறிமுகம், செயல் வேறுபாடுகள், ஆடை, ஒப்பனை, இவைபற்றியும் விரிவான விளக்கங்களைத் தருகிறது.

இந்தியப் பழம் நாடகம், வடமொழி நாடக இயல் இவற்றின் தோற்றம் எட்டாம் நூற்றுண்டு என்று கொண்டு பார்த்தால் இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து நாடக இயலைப் பெற்றுர்கள் என்ற கருத்துக்கு இடமில்லை. கிரேக்கர்களுடைய கத்தோலிஸஸ் கருத்துக்கும், பரத முனிவனுடைய சுவை தத்துவத்துக்கும் எவ்வித ஒற்றுமையையும் காண முடியாது. கிரேக்கர்களுடைய துன்பியல் கற்பனையை வடமொழி நாடகங்களில் காண வழியில்லை. அவற்றில் நாடக மேடையில் சாவுக்கோ அல்லது நாடக முடிவில் தலைவனுடைய வீழ்ச்சிக்கோ இடமில்லை. வடமொழி நாடகம் இன்பம், துன்பம், மகிழ்ச்சி, துயரம், கடுமை, எளிமை, துன்பியல், இன்பியல், நன்மை தீமை, கண்ணீர், சிரிப்பு இவற்றின் ரசக் கலவையினுலானது. இவ்வனைத்தும் ஒருங்கிணைந்து ரசிகர்களின் மனத்தில் ஒரு நிறைவையும், அமைதியையும் ஏற்படுத்த வேண்டும். கிரேக்கத் துன்பியல் நாடகாசிரியர்கள் மனிதனை ஊழ்வழிப்பட்டவனுகவே கண்டார்கள். துன்பியல் வெறிகொண்டு, எரித்துச் சாம்பலாக்கி, சினமும், விதிக் கொடுமையும் நாடகப் பாத்திரங்களை அவற்றின் தவிர்க்க முடியாத முடிவிற்கு இழுத்துச்செல்கின்றன.

இதற்கு மாற்ருக சமஸ்கிருத நாடகங்களில் எல்லாத் தடைகளையும் வென்று நிற்கிருன். அவனுடைய போராட்டங்கள் அவனைச் சின்னுபின்னமாக்குவதில்லை; அல்லது அவனும் பார்ப்பவர்களைக் குழப்பத்திற்குள்ளாக்குவ

Beauty is



Decolam

(sorry, ladies!)

Choose from a range of magnificent marbles, worldwide woodgrains, kaleidoscopic colours, and tantalizing textured prints. Backed by the international know-how of Bakelite Xylonite of England.

decolam

THE MOST DECORATIVE LAMINATE

A PRODUCT OF BAKELITE HYLAM LIMITED

LINTAS-BHL/DLM. 22-603

With

Best

Compliments

from

METTUR CHEMICALS

&

INDUSTRIAL CORPN.,

Mettur Dam,

Dist. Salem,

Tamil Nadu.

தில்லை. கிரேக்கத் துன்பியல் நாடகங்களிலோ இயற்கை மனிதனுடை துன்பங்களுக்கு எதிராக சதி செய்கின்றன. அதனுடைய கொடுமையும் மனித சோகத்தைப் பற்றிக்கொள்ளும அகங்காரமான அலட்சியமும் துன்பியல் உணர்ச்சியை ஆழப்படுத்திக் காட்டுகின்றன. வடமொழி நாடகங்களில் இயற்கை கோரப் பல்லும், கூரிய நகங்களும் கொள்ளாமல் மனித உணர்ச்சிகளை அனுதாபத்தோடு அணுகி அவற்றை துல்லியமாக்குகின்றன. சகுந்தலை ஆஸ்ரமச் சுழலை விட்டு புக்ககம் செல்லும் பொழுது கொடிகள் துவளும், மயிலினம் பிரிவுத் துயரால் ஆலும். மானினம் கடைவாயிலிருந்து இரை எடுத்த புல் நழுவ ஏங்கி நோக்கும். இங்கே, மனிதன் பூதச் சேர்க்கையின் ஒரு அங்கமாகி இயற்கையின் ஒருங்கு அமைதியோடு இணைந்தும்,விலகியும் மற்ற எதையும் போல தோற்றமளிக்கிறான். இந்த அடிப்படை வேறுபாடுதான் கிரேக்க நாடகத்தையும், வடமொழி நாடகத்தையும் பிரித்து இந்திய நாடகத்தைத் தனித்துவம் கொண்டுள்ளதாகக் காட்டுகிறது.

வடமொழியில் நாடகம், பிரகரணம் என்பவை இரு பெரும் பிரிவுகள். நாடகம் என்பதில் கதை, புராண அல்லது சரித்திர அடிப்படையில் காதல், பக்தி, வீரம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மைய உணர்ச்சியாகக் கொண்டு, ஐந்து அல்லது பத்து அங்கங்களோடு விளங்குவது. இதில் நாடகத் தலைவன் தன்னேறில்லாதவன். பிரகரணத்தில் காதல் என்ற ஒரு கருத்தைக் கொண்டுள்ள கற்பனை கலந்து புனைந்த உண்மைக் கதை அமையும். அதிலுள்ள பாத்திரங்கள், சமூகத்தின் உயர்வடிவிலுள்ள அமைச்சர்கள், புரோகிதர்கள், படைத் தலைவர்கள், வணிகர்கள் முதலியவர்கள். மிருச்சகடிகத்தில் வரும் தேவதாஸியைப் போன்ற ஒருத்தி நாடகத் தலைவியாக அமையலாம்.

முகலாயர் படையெடுப்பிற்குப் பின் தென்னகத்தில்தான் மரபான நாடகமேடை இயங்கியது. இராமாயணம், மகாபாரதம் இவற்றிலுள்ள சம்பவங்களை அரங்கிடும் ஊர்ஊராகச் சுற்றும் நாடகக் குழுக்கள் நம்மிடம் இருந்தன. கதை, தலைவன், தலைவி இவர்கள் இமயம் முதல் குமரி வரையிலும் காம்போஜம் முதல் காமரூபம் முடிய உள்ள அத்துணை மக்களும் அறிந்த ஒன்றுதான், இதுவே, பாரத நாடு எங்கணும் பரவிய பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாக விளங்கியது.

கி. பி. 1853ல் வஜீத் அலிஷா எனும் அயோத்தி நவாபின் ஆதரவில் உருது நாடக மேடை பெற்றது. அந்த மன்னனே இந்திர சபா நாடகத்தில் தலைவி வேடம் தாங்கி நடித்தும், அவனுடைய அந்தப்புர மாதர் அந்நாடகத்தில் பங்கேற்றும் ஆதரவு தந்தனர். கி. பி. 1857ல் நடைபெற்ற தேசியப் புரட்சிக்குப் பின் வங்கத்தில் நாடக இயக்கம் தோன்றியது. மற்ற எல்லா நாடகக் குழுக்களிலும் ஆண்களே பெண் வேடம் தாங்கி நடித்துக்கொண்டிருந்த பொழுது பார்ஸி கம்பெனிகள் நடிகைகளையும் அனுமதித்தது. மகாராஷ்டிரத்தில் பாபுராவ் கோல்ஹாட்கர், குஜராத்தில் ஜெயசங்கர் சுந்தரி போன்ற சில கலைஞர்கள் பெண்வேடம் தாங்கி அபூர்வத் திறமையுடன் நடிப்பதைக் கண்டு ரசிகர்கள் அவர்கள் ஆண்களே என்பதை அறிந்து மூக்கில் விரல் வைத்தனர். அந்தக்காலத்தில் தனி முடியலங்காரம் புழக்கத்தில் இல்லாதபடியால் ஸ்திரீ பார்ட் நடிகர்கள் நீண்ட முடியாக வைத்துக் கொள்ளுவார்கள். 1930-லோ அதற்கு சற்று முன்போ கல்லூரியிலும், பயில்முறை கலைக் குழுக்களிலும், சிறுவர்கள் பெண்வேடமிட்டு நடித்து வந்தார்கள். இந்த அசம்பாவிதம் என்னையும் என் சில நண்பர்களையும் அருவருப்புக்குள்ளாக்கின. நாங்கள் சிறுவர்கள்; பெண்வேடமிட்டு நடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அம்மாதிரியான

With Best Compliments
from

SURESH CONSTRUCTIONS

ENGINEERS & CONTRACTORS
ROADMASTER
MACHINERY HIRERS

Tele: : 473429
16, Gulratan Mahal,
162, Sion East, BOMBAY-22.
Tele. : 25501
406/24, Nana Peth,
Poona-2.

With Best Compliments
from

ATUL DRUG HOUSE LTD.,

Baldotta Bhavan,

117, Maharishi Karve Marg,

Opp. Churchgate Station,

Bombay-20.

எந்த நாடகங்களிலும் நடிப்பதற்கு மறுத்து விட்டோம். நாங்கள் ஒரு கூட்டமாக அமைந்து, இந்தப் பழக்கத்தை எதிர்த்துப் போராடுவதில் முனைந்தோம். கடைசியில் இந்தக் கண்ணருவியைக் களைவதில் வெற்றி பெற்றதும் பல பெண்கள் இந்தப் பழக்கத்தை முறிப்பதற்காக நடிப்பதற்கு முன்வந்தனர்.

பார்ஸிகள் உருதுமேடையில் நடிக்கத் தொடங்கியபொழுதுதான் குஜராத்தி நாடக மேடை தன்னுருவம்பெற்று பம்பாய், அகமதாபாத், பரோடா முதலிய கேந்திரங் களில் இயங்கலானது. இந்நூற்றுண்டின் தொடக்க ஆண்டுகளில் மறைந்த மாமேதை டாக்டர் கே. எம். முன்ஷி, இன்னும் சந்திர வதன் மேத்தா போன்றவர்கள் குஜராத்தி நாடக மேடைக்குப் புத்துருவம் தந்தார்கள். 1950-ம் ஆண்டையொட்டி நாடகமேடை பல இன்னல்களுக்கு உள்ளாயிற்று. ஆயி னும் நடிகமணி பிருத்விராஜ்கபூர். இந்தி நாடக மேடைக்குப் புனர்வாழ்வு தர வீரமாக முயன்ருர். ஆனுலும் திரை மேடையை வெகு வாகப் பாதித்தது. பாரதீய வித்யா பவனத் தின் கலாகேந்திரம் இக்காலத்தில் சில நாடகங்களை மேடையிட்டாலும் மக்களிட மிருந்து எந்தவித ஆதரவையும் பெறவில்லை. எனவே நாங்கள் புதிய கலையூற்றுக்களை — கல்லூரி மாணவர்களை — தயார் செய்தோம், இந்த நேரத்தில்தான் அனைத்துக் கல்லூரி நாடகப் போட்டியினை முதலில் நான்கு மொழிகளிலும் பின்னர் பதினைன்கு மொழி களிலும் தொடங்கினேம். ஒவ்வொரு ஆண் டும் இது நடக்கும் இரண்டு மாத காலங்களும் ஏதோ இளைஞர் விழா போன்று தோன்றி ஆண்டுதோறும் மாணவர்களின் உற்சாகத்தை அபரிமிதமாகத் தூண்ட ஆரம்பித்தது. கடந்த 18 ஆண்டுகளில் பத் தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவக் கலை ஞர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டுள் ளார்கள். இது புதுமையான திறமைகளுக்கு வளமான பயிற்சிப் பண்ணையாக அமைந்து இன்று பல மொழிகளிலும் உள்ள முன்னணிக் கலைஞர்கள் இப்போட்டிகளின் விளைச்சல்களாகவே வளர்ந்து காண்கின் ருர்கள். இவர்களில் சிலர்: சதா கர்மர்க்கர், விஜயா மேத்தா, தாமு கேங்கரே, பவன் பிரபு, உபேந்திர திரிவேதி, அரவிந்த் திரி வேதி, ப்ரவீண் ஜோஷி, கிஷோர்பட்,காந்தி மடியா, விஜயா ஆனந்த், ராஜேஷ் கன்ன, சஞ்சீவ்குமார், கிருஷ்ணகாந்த் முதலிய வர்கள். இறுதியாகக் கூறப்பட்டவர் இப் பொழுது அமெரிக்காவில் ப்ராட்வேயில் நாடகங்கள் தயாரித்துக் கொண்டிருப்பவர். ப்ரபோத் ஜோஷி சிறந்த நாடக ஆசிரிய ராக விளங்கி வருகிருர்.

பல சுயமான கதைகள் எழுதப்பட்டுள் ளன. மேடையிடப்பட்ட பல பரிசோதனை நாடகங்கள் மக்களிடையே நாடகத்தைப் பற்றிய ஒரு சுவையை ஏற்படுத்தி இதன் விளைவாக சிறந்த ஒழுங்கான நாடக ரசிகர் களைக் கூட்டியது. இன்று மக்களிடையே நாடகம் ஒரு பெரும் கவர்ச்சியாக விளங்கு வதற்கு அடிக்காரணம் இப்போட்டிகள் தான்.

தொழில்முறை நாடகமேடை ஐரோப் பாவிலும், அமெரிக்காவிலும், ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்க நமக்கு சக்தி வாய்ந்த பயில்முறை மேடை நாடெங்கும் இருந்தாலும் வங்கம், பீகார், தென்னகம் இவற்றைத்தவிர மேற்குக்கரையில் தொழில் முறைமேடை வலுவுள்ளதாக இல்லை.

என் வெளிநாட்டுப் பயணங்களின் பொழுது சிறுவர்மேடை என்னை வெகு வாகக் கவர்ந்தது. பெர்லினில் நடைபெற்ற உலக நாடக மேடை மாநாட்டில் நமக்கு 3,000 ஆண்டுகளின் நாடக கலாச்சாரம் இருந்தபொழுதிலும் வலுவான சிறுவர் மேடை இல்லை என்ற குறையை அப் பொழுது ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. பின்னர் நான் 1968ல் அமெரிக்கா சென்ற பெழுது நவீன நாடகம் மக்களை மேலெழுந்த வாரியாக கவர்ந்திருந்த பொழுதிலும் அவர்களிடையே சம்பிரதாயமான நாடகங் களுக்குத்தான் அதிக விருப்பமிருப்பதைக் கண்டேன். நவீன நாடகம் — அதாவது உயிருள்ள மேடை என்று இப்பொழுதெல் லாம் கூறப்படுகிறதே அதனை அங்கு கண்டு குழப்பம்தான் ஏற்பட்டது. நடிகர்கள் மேடை யிலிருந்து இறங்கி வந்து பார்ப்பவர்களிடம்

Magic Moments

Just a little Magic in a bucket of water. And, wonderful things happen to your washing. Each grain of Magic is power-packed to dissolve instantly in water. A rich active lather works at super-speed. Rinsing is so much faster too. And, your washing ends up Ultra White...Ultra Bright. What more could a housewife wish for!

A TATA PRODUCT

A single wash...your clothes are bright
A single wash...they're Magic White!

CMTM-32-103

Our Hearty Felicitations

to

BOMBAY TAMIL SANGHAM

on the occasion of their Drama Festival

THE ENFIELD INDIA LTD.

MADRAS-19.

Manufacturers of BULLET & CRUSADER motorcycles

VILLIERS agro industrial engines

அவர்களையும் பங்குபடுத்த தனித்த முறை யிலே பேசுகிறார்கள். விஷயம் அத்துடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. நடிகர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் இடையிலுள்ள வெளி குறைந்து விடுவதால், வந்திருப்பவர்களை ஆடைகளை யெல்லாம் கழற்றி பிறந்தமேனிக ளாக்கி விடுகிறார்கள். அதற்குப் பிறகு அங்கே என்ன நடக்கும் என்பது சாதாரண கற்பனை தானே!

இவ்வாண்டு மே - ஜூனின் மாதங்களில் லண்டனில் உலக நாடக மாநாடு நடை பெற்றது. மாநாட்டின் விஷயம் -"நடிகர்கள் - ரசிகர்கள் எதிரிகள்". தலைப்பு வேடிக்கையாக இருக்கிறதல்லவா ! இது என்னவென்றால் நடிகர்கள் அவையினரை எதிரிகளாகவே எண்ணி இவர்களுடைய உணர்ச்சிப் போக் கினை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டும் என்பதுதான். எனக்கு இது ஏற்பு இல்லை. நான் நடிகர்களுக்கும், ரசிகர்களுக் கும் உள்ள உறவு காதலர்களுக்கு இடையே அமையும் உறவாக நம்புகிறவன். நடிகர்கள் ரசிகர்களைக் கொஞ்சி, நையாண்டி செய்து, தூண்டிவிட்டு, உணர்ச்சி வசப்படுத்தி, கண் ணீரை வரவழைத்து இறுதியில் அவர்களைக் கவரவேண்டும்

நான் முதலாளித்துவ நாடுகளிலும் சோஷலிஸ நாடுகளிலும், உலகத்தின் பல பகுதிகளிலுமுள்ள நாடகங்களைக் கண்டிருக் கிறேன் ஆனாலும், நம்முடைய மேடைத் திறமை உலகத்தின் மிகச் சிறந்தவற்றோடு வைத்து எண்ணப்பட வேண்டியது. வழி முறைகளிலும், நாம் மிகவும் பின் தங்கியவர் கள் அல்லர் என்பது உறுதி. இதைத்தான் "யூனெஸ்கோ" ஆதரவில் 26 நாடுகள் பங் கேற்று பெர்லினில் 1966-ல் நடைபெற்ற "உலக நாடகமேடை" மாநாட்டில் இந்தி யாவின் பிரதிநிதியாக நின்று வலியுறுத்தி னேன்.

இந்த நாட்டில் நம் தேவை கலைஞர் களுக்கு வேண்டிய சந்தர்ப்பச் சூழ்நிலைகளே. எந்தப் பல்கலைக் கழகமும் மாநிலமும் நகராட்சியும் நாடக மேடைகளையோ போது மான ஒத்திகை அரங்குகளையோ அமைக்க வில்லை. பரிசோதனை நாடகக் கூடங்கள் கிடக்கட்டும்.

பம்பாயில் சில அரங்கங்கள் இருப்பினும் அவற்றில் நடைபெறும் மிகையான நிகழ்ச்சி கள் காரணமாக ஒரு ஒழுங்கான ஒத்திகையே பார்ப்பதற்கு வழியில்லாமல் நாடகத்தின் அரங்கேற்ற நாளே முழு ஒத்திகை நாளா கவும் பெருவாரியான நாடகங்களுக்கு ஏற் பட்டுவிடுகின்றன. இது வருந்தத் தக்க நிலைதான். ஏனெனில் கலைஞர்கள் தத்துவத் திற்கு மதிப்பளிப்பவர்களே தவிர கட்டண வசூலுக்குக் கவலைப்படுவதில்லை.

மாநிலங்களும், பல்கலைக் கழகங்களும் மேடைக் கல்விக்கோ, மேடை இயல் தேர்ந்தவர்களுக்கு வாழ்க்கை வாய்ப்பு களுக்கோ வழிசெய்யவில்லை. பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழக நிலைகளிலே மேடைக் கல்வி அளிக்கப்பட்டால் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்குத் தேவை ஏற்பட்டு நாடக மேடையில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு புது வேலை வாய்ப்புக்களுக்கு இடமளிக்கும் என நம்புகிறேன்.

இன்னமும் நாம் நம் சமுதாயத்தில் கலைஞர்களுக்குத் தக்க இடம் தரவில்லை. நம் அரசாங்கம் அவ்வப்போது இயங்கிவரும் கலைஞர்களுக்கு விருதுகளும, பரிசுகளும் என்னவோ தருகின்றதுதான். ஆனால் அது மட்டும் போதாது. மாஸ்கோவில் கலைஞர்கள் மிகுந்த மதிப்புடன் விளங்குவதை, தெருக் களின் பெயர்கள் அவர்களுடைய பெயரால் அழைக்கப்படுவதை, அரசியல்வாதிகளின் பெயரால் அல்ல - கண்டேன். அரசு கலைஞர் களுக்குப் பரிசளிப்பதுடன் மட்டுமல்லாமல் ஆராய்ச்சி கலைஞர்களையும், மேடை உலகத்தி லுள்ள அறிஞர்களையும், புலவர்களையும் அங்கீகாரம் செய்யவேண்டும். தீவிரமான ஆராய்ச்சியில் இறங்கும் நாடக அறிஞர்கள் அங்கீகாரம் செய்யப்பட வேண்டியது மிகமிக அவசியமான தேவை.

நாடகமேடை சமூகத்தின் கண்ணாடி என்பது பழைய வழக்கு. அது சமூக நிலையைத்தான் பிரதிபலிப்பது. ஆனால் இன்றோ நாடகமேடை இருளில் அலைகள் புரண்டு வரும் போது நிரந்தரமான மதிப்புகளுக்கு ஒளிதரும் கலங்கரை விளக்கமாக அமைய வேண்டும். அதுமட்டுமன்று; அவ்விளக்கின் கற்றைகள் இன்றைய, இன்னும் வெகு நாட்களுக்கு பின்வரவுள்ள பிரச்சினைகளைத் தேடி வெளிக் கொணர்ந்து அவற்றினை ஆராய்ந்து மக்களின் கவனத்தின் முன்வைத்து அவர்களை விழிப்புணர்ச்சி கொள்ளச் செய்ய வேண்டும்.

நாம் உண்மையான கொள்கைகளுக்கு மதிப்பு ஏற்படும் அந்த எதிர்காலத்தை எண்ணுகிறோம். நம் கலைஞர்கள் நம் நாட்டின் சமுதாயப் பொருளாதார அமைப்பில் தக்கதொரு இடத்தை ஏற்று, நமது நாடக மேடை நம்முடைய அரசியல் சமுதாயப் பொருளாதார வாழ்வை உண்மையாகப் பிரதிபலித்து, நமது மேடையும் ரசிகர்களும் ஆடவரும் பெண்டிரும் நல்ல குடிமக்களாக வாழ வகைசெய்யும் வண்ணம் ஓர் விரும்பத் தக்க ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தும் அந்த நாளை எதிர்நோக்குவோம்.

நாடகமேடை சிறந்த சமூகத்தை அமைக்கும் ஒரு சக்தி வாய்ந்த சாதனமல்லவா?

உதவி : பவான்ஸ் ஜர்னல், ஆண்டு மலர் 1971
ஆங்கில மூலத்தினின்று தமிழாக்கம்
ஆ-ர்.

WITH INDIAN BANK'S PROGRESSIVE BENEFIT SCHEME

INDIAN BANK Offers you a Unique Scheme

It undertakes to provide you credit to OWN YOUR HOUSE provided you save half the cost. The Bank gives you credit for the other half on easy repayment terms and at concessional interest rate.

SAVE AS LOW AS YOU WANT OR AS HIGH AS YOU WANT.

Call at the nearest office of the Bank for full particulars.

OVER 270 BRANCHES ALL OVER THE COUNTRY.

Branches in MAHARASHTRA

Andheri	Goregaon	Matunga Main	Poona (Nanapeth)
Chembur	King's Circle	Matunga Bazar	Sion
Ghatkopar	Mandvi	Poona (Laxmi Rd)	
Vile Parle	Wadala	Mahim	

INDIAN BANK

(Wholly owned by the Government of India)

Bombay Main Office :

Sir P. M. Road, Fort, Bombay-1.

SAVE WITH INDIAN BANK TO BUILD YOUR OWN HOUSE



"பாவை" பார்வதி

பூபதி தொலைவிலே வந்து கொண்டிருந்தான். அவன் கால்களுக்கிடையே உதைபந்தாகி, அங்குமிங்கும் அவன் இழுத்த இழுப்புக்கும் கொடுத்த உதைக்கும் ஈடு கொடுத்தபடி உருண்டு வந்தது ஒன்று. அதனைக் கல்லென்றும் கொள்ளலாம், காயென்றும் கொள்ளலாம். ஒவ்வொரு காலசைவிலும் தன் பிள்ளைப் பருவ நினைவுகளைச் சுவைத்து மகிழ்ந்தது அவன் மனம்' இதே 'உதைபந்து' ஆட்டம்தான் அவனையும் பரசுவையும் இணைபிரியாத் தோழர்களாக்கியது. இராணுவத்திலே பணிபுரியும் அவன், எல்லைப் புறத்திலிருந்து விடுமுறையில் வந்ததும் வராததுமாக, இதோ.... பரசுவைக் காணத் துடித்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

சிதறிய இரத்தத் துளிகளாய், செங்கதிரோனின் கிரணங்கள், அந்தி வானத்திலே ஆங்காங்கே படர்ந்திருந்த மேகக் கற்றைகள் மேலே படிந்திருந்தன. தலைக்குமேலே பறக்கும் விமானங்களின் ஓசை, துப்பாக்கியின் முழக்கம், தீபாவளி விடியலில் ஆங்காங்கே சீறும் வாணங்களைப் போல அவ்வப்போது எழும் வெடிகளின் ஓசை என ஆரவாரம் நிறைந்திருக்கும் எல்லைப்புறச் சூழ்நிலையிலிருந்து தற்காலிக விடுதலை பெற்றிருக்கும் பூபதிக்கு, மோனம் குடிகொண்டுள்ள அந்த வயற்காட்டுப் பகுதி, உறக்கத்திடையே சிரித்து மகிழும் பச்சிளங் குழந்தையின் முகமாய்ப் பொலிவு பெற்றிருப்பது போலத் தோன்றியது. கூடு திரும்பும் பறவைகளின் இரைச்சல் மட்டுமே அப்பகுதியின் மோனத்தைக் கலைத்தது. அவன் அண்ணாந்து பார்த்தான். கண்ணெதிரே பரந்திருந்த நீலவானமும் செவ்வண்ண மேகக் கற்றைகளும், வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாய் 'ஜில்'லெனப் பறக்கும் பறவைகளும் அவன் மனத்தை உற்சாகப் படுத்தின.

தொலைவிலிருந்தே பரசு உட்கார்ந்திருந்த இடத்தைக் கண்டுகொண்டான் பூபதி. பாதையிலிருந்து விலகி, பரசு இருக்குமிடத்தை நோக்கி நடக்குமுன், அவன் தன் காலடியிலிருந்த அந்தக் காயைப் பலங்கொண்ட மட்டும், சற்றுத் தள்ளியிருந்த மரவேர் ஒன்றினைக் குறிபார்த்து உதைத்தான். ஆனால், அது இம்மியும் பிசகாமல், அவன் வருகைக்குக்

With the compliments of

MAHINDRA AND MAHINDRA LIMITED

Bombay · Calcutta · Delhi · Madras



PSMM

கட்டியம் கூறுவதுபோல, பரசுவின்மேல் பட்டு அவனுடைய சிந்தனையைக் கலைத்தது. அவன் நிமிர்ந்து பார்த்தான். அதற்குள்ளாக, கூப்பிடு தூரத்திலே வந்துவிட்ட பூபதி, "பார்த்தியா பரசு! எங்கேயோ குறிவைச்சு இந்தக் காயை உதைச்சா, அது உன் கிட்டே வந்து நிற்குது. இந்தமாதிரி துப்பாக்கி பிடிக்கறப்போ என் குறி இருந்தா ... எப்படி இருக்கும்?" என்று சொல்லி, அட்டகாசமாகச் சிரித்தான்.

"ம்...?"—ஒப்புக்குத் தலை நிமிர்த்தி என்னவென்று கேட்டுவிட்டுப் பரசு மீண்டும் குனிந்துவிட்டான். அவனுடைய கையிலிருந்த அஞ்சலட்டை மாலைக் காற்றிலே படபடத்துக் கொண்டிருந்தது.

"என்னடா பரசு இது? வெகு நாள் கழித்து வந்திருக்கேன். அதுவும் உன்னைப் பார்க்கணும்னு ஓடோடி வந்திருக்கிற என்னை, ஏதோ வழியிலே போறவனைப் பார்க்கிருப்பலே பார்க்கிறியே! நான்தான் பூபதி .. . பரசு......டேய்!" பூபதி அவன் தோளைப் பிடித்து உலுக்கினன்.

"நீயா?" எனக் கேட்டபடி பரசு பூபதியைப் பார்த்து ஒரு கணம் சிரித்தாலும், அவன் கவனமெல்லாம் கையிலிருந்த அஞ்சல் அட்டையின் மீதே இருந்தது.

'சரவணன் இனி எந்தக் கோர்ட்டுக்கும் 'அப்பீல்' செய்ய முடியாது. அவனுக்குத் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பாகி விட்டது' — கடிதத்தை இந்தச் செய்தி மட்டுமே நிறைத்திருந்தது. அது பூபதியின் கண்ணில் படவும், அது பரசுவை எந்த விதத்தில் பாதித்திருக்க முடியும் என்பதை அறியும் ஆவல் கொண்டான்.

"பரசு......! இதிலே எழுதியிருக்கே...... இந்தச் சரவணன்கிறது யாரு?" — அவன் மெல்லக் கேட்டான். மறுகணம் பரசுவின் கைகள் அவன் கைகளை இறுக்கப் பிடித்தன. பூபதி, ஆதரவாக அவனை நெருங்கி உட்கார்ந்தான். "பூபதி! இந்தச் சரவணன் ஒரு கொலையை—அதுவும் பட்டப் பகலிலே என் கண்ணெதிரே செஞ்சவன். அதைப் போலீஸுக்குச் சொன்னவன் நான்தான். இதோ...செஞ்ச குற்றத்துக்குக் கயித்திலே தொங்கப் போருன்!"

கலக்கமடைந்திருந்த பரசு மேலே பேசத் தயங்குவது தெரிந்தது. பூபதிக்கு மேலே என்ன நடந்தது என்று தூண்டிக் கேட்கும் எண்ணமில்லை. எனவே பரசுவைத் தன் போக்கிலே பேசவிட்டான். ஒரு நெடுமூச்சிற்குப் பிறகு பரசு பேச ஆரம்பித்தான்.

"நான் ஆதியோடந்தமாகச் சொன்னல் தான் உனக்குப் புரியும். நானும், நீயும் காலேஜிலே படிக்கிறப்போ, நீ ராணுவத்திலே சேரணுங்கற துடிப்போடு இருந்து, அதே வேலையிலே சேர்ந்திட்டே. நான் என்னிக்காவது இந்த வயலையோ வெள்ளாமையையோ நெனச்சுப் பார்த்திருப்பேனு? வாழ்க்கையிலே ஒரு பிடிப்பா இருந்த அப்பா போனபிறகு நான் அனுதையாயிட்டேன்,பூபதி. ஊரைவிட்டு நகரமுடியாம என் நெலம் என்னை முடக்கிப் போட்டிட்டது...." பரசு நிறுத்தினன்.

பூபதி பரசுவைக் காணவரும்போதே அவனுடைய அப்பாவின் மறைவைக் குறித்து விசாரிக்கும் எண்ணத்தோடுதான் வந்தான். ஆனல் 'பரசுவை விசாரிக்கப் போக, அது அவன் வருத்தத்தைக் கிளறிவிட்டுவிட்டால்...? என்ற நினைப்பிலே வந்தவுடன் அதைப்பற்றி பேசாமலிருந்தவன் "பரசு! நான்கூட அப்பாவைப்பத்தி விசாரிக்க வந்தவன்தான். ஆனு எப்படி... என்ன கேட்கிறதுன்னு தெரியாமத்தான்.! மேலே பேசத் தயங்கினன் பரசு பேச ஆரம்பித்தான்.

'அப்பாவோடது அகாலச் சாவு. ஊர்க்காரங்க உனக்குச் சொல்லியிருப்பாங்களோ என்னவோ! வாய்க்கால் ஓரமா இருக்குதே எங்க நெலம், அந்த வளமான நெலத்தும் பேரிலே அப்பாவுக்குக் கொள்ளை ஆசை. எந்த நேரமும், அதோ அந்த வயலுக்கு



MB 6261A

GENERATORS OF SKILL

Skill is the human factor in industry—the basis of rising standards of productivity and quality.

To achieve a progressive level of skill and ensure receptivity to improved methods Metal Box has instituted training and incentive schemes for its employees. With rewarding results. Metal Box employees have figured prominently in the National Shramvir Awards, in the All India Trade Tests and in training projects conducted by government and industry.

And Metal Box's efforts extend beyond its own personnel. Metal Box has trained men on behalf of government organisations and technical colleges. Metal Box also collaborates with customers and suppliers to help them operate with greater skill. Activities such as these are a special commitment at Metal Box and help to generate skill for industrial growth.

MB Metal Box

With Best Compliments

from

FLO-RITE ENGINEERING CORPORATION

162, Tulsi Pipe Road,

Opp : Phoenix Mills,

Bombay-13.

வடபுறமா இருக்குதே அந்தத் தோப்பிலே தான் இருப்பார்." பரசு சொல்லி வருவதெல்லாம் பூபதி அறிந்ததுதான். இருந்தாலும் மறைந்துவிட்ட தன் தந்தையின் மேலேயுள்ள பாசம் அவனைப் பேச வைக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு பூபதி குறுக்கிடாமலிருந்தான்.

"இந்தக் கடுதாசியிலே எழுதியிருக்கே சரவணன்னு, அவன் எங்க தாயாதி அவங்க குடும்பத்துக்குன்னு எங்க தாத்தா எழுதி வைச்சதையெல்லாம் கரியாக்கிட்டு, இந்தப் பொன்னுன பூமியைத் தான் அடைஞ்சிடணும்னு என்னென்னவோ செஞ்சி பார்த்தான், எதுவும் நடக்கல்லே. இதுக்காக அவன் ஏருத கோர்ட் இல்லே. கையிலேயும் பணம் இல்லாமல் போயி, எந்தவழியிலேயும் எங்க நெலத்தை அடைய முடியாதுன்னு தெரிஞ்சப்போ, அவன் கொதிச்சான். அந்த மண்ணுசை...... பொருமை...... ஏமாற்றம் எல்லாமாய்ச் சேர்ந்து......"

—பரசுவின் குரல் கம்மியது. தந்தையின் நினைவு அவனை வதைத்திருக்க வேண்டும். இருட் போர்வைக்குள் முடங்கிவிடப் போகும் அகண்ட வெளியை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். அடுத்து, அவன் இதழ்கள் அந்தச் சோகக் கதையைச் சொல்லச் சொல்ல, அவன் அந்த நினைவிலே ஒன்றிவிட்டான்.

அவன் குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்த அன்றும் வழக்கம் போல, அவனுடைய தந்தை மோகனரங்கத் தேவர், வாய்க்கால் ஓரமாக இருக்கும் தென்னந்தோப்பு நடுவே ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். சுகமாக வீசும் தென்றல்—அது இலைகளூடே புகுவதால் சலசலக்கும் பண்ணெலி. வெய்யிலுக்கேற்றதாய்த் தோப்புக் காவல்காரன் பறித்துப் போட்டிருந்த இளநீர்க் காய்களின் குளுமை, இத்தனைக்கும் சிகரமாய் இவ்வுலக இன்பத்தையெல்லாம் ஒருங்கே கூட்டி அனுபவித்துவிட்டாற் போன்றதொரு எல்லையில்லா நிம்மதி மனத்திலே. —இவ்வாறு எந்தக் குறையுமின்றி சுகத்தை அனுபவித்தபடி அவர் படுத்திருந்தார். கைகளைக் கோர்த்தாற்போலத் தலைக்கடியில் வைத்தபடி, சரஞ் சரமாய்த் தொங்கும் இளநீர்க் குலைகளையும், தாளக் கட்டோடு ஒயிலாக அசையும் தென்னேலைகளையும், அவற்றினிடையே தோன்றித் தோன்றி மறைந்து கண்ணுமூச்சி யாடும் நீலவானத் துணுக்குகளையும் ரசித்தபடி, சுற்றுப்புறத்தை முற்றும் மறந்தவராய்ப் படுத்திருந்த தேவரின் கண்ணெதிரே திடீரென ஒரு கத்தி மின்னியது.

கலவரமடைந்து கட்டிலை விட்டு எழ முயற்சித்தபடி மோகனரங்கத் தேவர் எழுப்பிய குரல் கேட்டும், அருகே சரவணன் நிற்பதைக் கண்டும், நடக்கப்போவதென்ன என்று பதட்டங் கொண்டவனுய்ப் பரசு ஓடி வருவதற்குள் "அடேய் பரசு! நான் அனுபவிக்க முடியாத நெலத்தை என் கண்ணு முன்னுலே உன் அப்பன் மட்டும் அனுபவிக்க விடுவேனுடா?...... ஏலேய்!" —குரோதம் கொப்புளிக்க கூச்சலிடும் சரவணனின் குரல், அந்த வயற்காட்டை நிறைத்திருந்த பச்சைக் கதிர்களிலே அலைமோதியது.

"பரசு... என் நெலம்... என் நெலம்... ஆ...... அம்மா! பரசுக் கண்ணு... என்னை விட்டுப் போயிடாதே..." எனத் திணறிய தேவரின் நெஞ்சிலே இறங்கியிருந்த சரவணனின் கத்தி, வலி தாளாமல் அவர் புரளுகையில் நழுவிக் கீழே விழுந்தது. "அப்பா...! அப்பா..." —துடி துடித்துப் போன பரசு செய்வதறியாது திகைத்து நின்றுவிட்டான். தன் கண்ணெதிரே நடப்பதெல்லாம் ஏதோ கனவு போலத் தோன்றியது அவனுக்கு. தந்தையைத் தாங்கிப் பிடித்திருந்த அவன் கைகளைத் துவண்டுவிட்ட அவருடைய நெஞ்சிலிருந்து பீரிட்ட இரத்தம் நனைத்தது. மறுகணம் அவர் தலை சாய்ந்தது.

தந்தையின் பச்சை இரத்தம் தன் கைகளைச் சுட்ட அதே நேரத்திலே, அவருடைய பிரிவு பரசுவின் நெஞ்சைச் சுட்டது, அவனைச் சுற்றி உலவி வந்த தென்றல். அந்தத் தோப்பு, சலசலத்தோடும் வாய்க்கால் —எல்லாமே ஆவி அடங்கி ஒடுங்கிவிட்ட தேவரைப் போன்றே

KAMANIS' BRASS RODS WILL GO TO ANY LENGTHS TO KEEP CUSTOMERS HAPPY — WORLDWIDE !

Outstanding quality makes Kamanis' brass rods fast-sellers in international markets

For industry everywhere, only the finest non-ferrous rods will do — Kamanis ! The reasons are obvious . . .

— High consistent quality conforming to ASTM, BSS and customers' specifications — Free Cutting or Forging Quality — Wide range of sizes

KAMANI TUBES PRIVATE LTD.

New Kamani Chambers, Nicol Road, Ballard Estate, BOMBAY-1. INDIA.

K SYMBOL OF INDUSTRIAL VITALITY

With Best Compliments

from

ARUNODAY STEEL INDUSTRIES

STRUCTURAL ENGINEERS & CONTRACTORS

Fabrication, Supply & Erection of storage tanks of all dimensions and capacities. Boiler chimneys, steel structurals for industrial sheds etc. Fabrication and supply of pressure vessels, receivers, S. S. Vessels etc. Fabrication and supply of Quarry Bodies, Dumpers etc. Execution of chemical plants.

Behind Krishna Woolen Mills,
Lal Bahadur Shastri Marg,
Bhandup, Bombay-78.
Telephone : 592959.

அரவமற்றுப் போய்விட்டாற் போன்றிருந்தது. தொலேவிலே ஓடி மறையும் சரவணனேயே வெறித்துப் பார்த்தபடி இருந்த பரசுவின் இதழ்கள், "உன்னேச் சும்மா விடமாட்டேன் !" என முணுமுணுத்தன. தனக்கு இந்த உலகிலே ஒரேயொரு சொந்தமென இருந்து மறைந்து விட்ட தந்தையின் காலடியிலே முகம் புதைத்து அவன் விம்மினன்.

பரசு நடந்ததை விவரிக்க விவரிக்க, பூபதியின் நெஞ்சையும் துயரம் கௌவிக் கொண்டது. 'ஓ'வென ஒய்ந்திருந்த அந்த வயற்காட்டுப் பகுதி, மோனம் சூழ்ந்திருக்க மேலும் தன்னேச் சூழவரும் அந்திக் கருக்கலேக் கண்டு அஞ்சி ஒடுங்கிவிட்டாற் போல சலனமற்றிருந்தது வேறு அவர்கள் துயரத்தை அதிகமாக்கியது.

"அந்தத் துரோகியை, என் கையைப் பச்சை இரத்தம் கட்ட அன்னிக்கே ஒழிச்சுக் கட்டத் துடிச்சேன். ஆனு, 'சட்டம்'னு ஒண்ணு அவனுக்குத் தண்டனே வழங்கணும்னு இருக்கறப்போ நடுவிலே 'நீ யாரு'ன்னு கேட்டது என் நெஞ்சு. தூக்குத் தண்டனேயிலே கயிறு தன் கழுத்தை இறுக்குகிறபோதாவது அவன், தான் செய்த குற்றத்தை உணர்ந்து வருத்தப்படட்டும்னு கருவினேன். ஆனு... ஆனு..." —பரசுவின் தொண்டையிலே வார்த்தை சிக்கியது.

"வேண்டாம் பரசு! அனுவசியமா நான் உனக்கு அப்பாவை நினேவுபடுத்தி வருத்தப்பட வெச்சுட்டேன். என்னே மன்னிச்சிடு. நாம வேற எதையாவது பத்திப் பேசுவோமே, நீ எப்பவும் என்னேப் பத்திக் கேட்பியே, என் வாழ்க்கையைப் பத்தி பேசலாம் வா!" என அவனேச் சமாதானப் படுத்தினன் பூபதி.

"அன்னிக்கு —அந்த நிமிஷம் சரவணனேப் பழிவாங்கணும்னு இருந்ததே அந்த வெறி, கொஞ்சம் கொஞ்சமா காலப் போக்கிலே என் மனசிலே மடியத் தொடங்கியது. அந்தக் கொலேக்கு ஆதாரமாய் இருந்த ஆத்திரத்திலே, ஒண்ணு விடாம போலீஸிலே சொல்லிட்டே மறுகாரியம் பார்த்தேன். நடந்ததைப் போலீஸிலே சொன்னதிலேயிருந்து மனசுக்குள்ளே ஒரு அரிப்பு—எனக்கு எப்படி அப்பாங்கிற உறவு இல்லாமல் போயிட்டதோ அதே மாதிரி சரவணனுடை பெண்டாட்டி பிள்ளேகளுக்கும் இனிமே அவன் இல்லேன்னு ஆக்கிட்டோமேங்கிற அரிப்புதான் அது."

இதைச் சொல்வதற்குள் பரசு வெகுவாகப் பரபரப்படைந்துவிட்டிருந்தான்.

"பரசு! அவன் செஞ்ச குத்தத்துக்கு அவன் தண்டனே அடைஞ்சுதானே தீரணும்?" - பூபதி கேட்டான்.

"உண்மைதான். ஆனு, எம் மனசு ஒத்துக்கொள்ளமாட்டேங்குது. அவனேப் பிடிச்சிட்டுப் போறப்போ, அவனுடை பெண்டாட்டி பிள்ளேங்க கதறினதைக் காணச் சகிக்கல்லே. சரவணனுடை பெண்டாட்டி, தன் பிள்ளேயின் பிஞ்சு முகத்தைக் காட்டி, தன் தாலியைக் காட்டி, என்னேக் கெஞ்சின போதிருந்து, நானுகப்போய் போலீஸ்லே சொல்லி என்னேயறியாம தப்பு செஞ்சிட்டேனேன்னு என் மண்டைக்குள்ளே பூச்சி யரிக்கிருப்பல ஒரு குடைச்சல்.' - அவனேப் பெருமூச்சொன்று அலேக்கழித்தது. பூபதி அவனேக் கனிவோடு பார்த்தான்.

"நான் சொன்னதெல்லாம் சத்தியம்னு பிரமாணம் செஞ்சு கோர்ட்டிலே நான் சொன்னதிலே பொய்யில்லே, புரட்டில்லே தான். இருந்தாலும் அங்கே உட்கார்ந்திருந்த நீதிபதியைப் பார்க்கிறபோதெல்லாம், சரவணனுக்குத் தூக்குத் தண்டனேன்னு சொல்லிடுவாரோன்னு மனசு அடிச்சிக்கிட்டதுக்குக் கணக்கில்லே. வழக்கில்லே. இதோ அவனுக்குத் தூக்குத் தண்டனே கொடுத்திட்டதா தகவல் வந்தாச்சு. அப்பாவோட உயிர்போலவே, சரவணன் உயிரும் போனு திரும்பி வரப்போறதில்லே. பின்னே ஏன் எம் மனசிலே பழிவாங்கிடணும்கிற

With

compliments

from

THE TIMES OF INDIA
group of publications

THE INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY LIMITED

MAIN ROAD — METTUPALAYAM
(Coimbatore District)
INDIA.

Phone : Factory — 127 Office : — 136
Grams : "INDOSWISS"

Manufacturers of :

Rough Synthetic Gem Stones (Spinel & Corundum) in various colours and finished roundels in different sizes. Used for the manufacture of Watch Jewels, Cap Jewels & C. & c. & c.

Sole Distributors for Indian Union :

G. S. & COMPANY

No. 6, Jaffersha Street,
TIRUCHIRAPALLI-8.

Phone : 4006
Grams : "MANEK"

Rastha Gopalji
JAIPUR.

Phone : 72814
Grams : "INDOSWISS".

வெறி தோணிச்சி? தூக்கிலே ஊசலாடும் போது, சரவணனும் அன்னிக்கு அப்பா துடிச்சதைப் போலத்தானே துடிக்கப் போருன்? அவன் உயிரைப் பறிக்கறதாலே அப்பா திரும்பி வந்துடுவாரா? இந்தமாதிரி யான நினைப்புகள் எனக்குள்ளே எழுந்து ஒவ்வொரு நிமிஷமும் குறுகுறுத்து என்னைச் சித்திரவதை செய்யறதை என்னல் பொறுக்க முடியல்லே! பூபதி. பொறுக்க முடியல்லே!'' புலம்பிய பரசு கைகளிலே முகத்தைப் பதித்துக்கொண் டான். அவன் கோழையல்ல என்பது பூபதிக்குத் தெரியும். அவனுடைய மென்மையான மனத்தை என்ன சொல்லித் தேற்றுவது என்று புரியாமல் பூபதி உட் கார்ந்திருந்தான். பரசு திடீரெனப் பேச ஆரம்பித்தான்.

'பார்த்தியா பூபதி...இந்த மண்ணசை எவ்வளவு பொல்லாததுன்னு? அண்ணன் தம்பியாய் இருந்தவங்க, அண்டை வீட்டுக் காரங்களாய் அடிக்சிக்கிடறேம் எல்லைப் புறத்திலே. எங்கே திரும்பினலும் பூசல்... புகைச்சல்... அப்பப்பா!'' என்ற பரசுவின் குரலிலே விரக்தி மேலிட்டது. பூபதிக்கு அவன் பேச்சு எதையோ கோடி காட்டி விட்டாற்போலிருந்தது. அது, அவனைத் தேற்றிவிட முடியும் என்கிற தெம்பையும் பூபதிக்குத் தந்தது.

''பரசு! வேலையில்லாம ஓய்ஞ்சு உட்கார்ந்திருக்கறதாலே, அந்த ஓலங்களைப் பத்தின கற்பனையிலே உன்னலே ஆழ்ந்து போயிட முடியுது. ஓயாமல் பொழியுற குண்டுகளுக்கு முன்னலே நிற்கவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படறபோது-அதுவும் என் கைத்துப்பாக்கிக்கு எதிரிங்க இரை யாகும்போது நானும் உன்னைப் போல எத்தனை பேருகக்கு அவங்க புருஷனே, தகப்பனே இனிமே இல்லேன்னு ஆக்கிட்டேன்'னு புலம்ப முடியுமா? நாமெல் லாம் எய்தவன் கை அம்புகள்...பரசு! நீ சரவணனைக் காட்டிக் கொடுக்காம இருந்தி ருந்தா மனிதனகப்பிறந்தும் மிருகமாகிவிட்ட அவன் தன் கையாலே நீ உள்பட இன்னும் எத்தனை பேருக்குச் சாவோலை எழுதியிருப் பானே? அப்படிப்பட்ட மிருகத்தை ஒழிச்சுக் கட்டறதுக்கு வழி செஞ்சு, நீ சமூகத்துக்கு நல்லதுதான் பண்ணியிருக்கே!"

—பூபதியின் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையிலே இல்லை பரசு. சரவணனைத் தூக்கிலிட்ட பிறகு நிகழ விருக்கும் அவலக் காட்சிகளை எண்ணிப் பார்த்து உருகுபவனக - ஏன் அவற்றை எண்ணிப் பார்க்கவே அஞ்சுபவனக இருந்த அவன் சரவணனின் முடிவுக்குத் தானே காரணம் எனப் புலம்பவும் தொடங்கிவிட் டான்.

'பூபதி! நான் வளர்ந்து ஆளாகி விட்டேன். அப்பா இல்லையேங்கற ஒரு குறையைத் தவிர எனக்கு வேற குறை எதுவும் இல்லை. ஆனல்......சரவணன் குடும்பத்துக்கு? அவன் போயிட்டா அவங்க நடுத்தெருவிலே நிற்க வேண்டி வரும். கேவலம் இந்த மண்ணுக்காக ஒரு கொலையின் ல். அந்தக் கொலையின் அடிப்படையிலே இன்னெரு சாவு. அப்பவே அப்பாவோட பிடிவாதத்தைத் தளர்த்தி, இந்த நிலத்திலே ஒரு பங்கை அவனுக்குக் கொடுத்து சமாதானமாய்ப் போயிருக்கலாம். அவனை அப்படி வெறி கொள்ளச் செய்தது எது? மண்ணசைதானே? இந்த நிலம் இப்படி ரெண்டு உயிரைக் குடிக்கும்னு தெரிஞ்சி ருந்தா, அவனுக்கு இதை விட்டுக்கொடுத் திருக்கலாம். சரவணன் தூக்கிலே தொங்கு வதற்குக் காரணமாயிட்ட நானும் ஒரு கொலைகாரன்தான்! — பரசுவின் குரலிலே ஒரு தீவிரம். அவன் பூபதியின் கைகளைப் பற்றினன். உணர்ச்சிக் குவியலாகிவிட்டி ருந்த அவன் கைகளிலே சூடு மிகுந்து விட்டிருந்தது. பூபதி ஆதரவாக அவன் தோள்களைப் பற்றினன். '' இதோ பாரு பரசு! இப்ப, சரவணனுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்திருக்கிற நீதிபதியையே எடுத்துக்க. இப்படி மரண தண்டனையின்னு, ஒவ்வொரு குற்றவாளிக்கும் தீர்ப்பு சொல்ல

With

Best

Compliments

from

INDUSTRIAL TRADERS

14, Bake House Lane

Fort, Bombay-1 BR.

வேண்டி வரும்போதெல்லாம், அவராலே உன்னைப்போல புலம்ப முடியுமோ? இல்லே, தான் பண்ணுகிற வைத்தியத்துக்குப் பிடி படாத நோயானதாலே யமன் முந்திக்கும் போது, 'என் கை ராசியில்லேன்'னு டாக்டர் தன் தலையிலே கையை வச்சுக்கிட்டு மூலை யிலே உட்கார முடியுமா? அக்கிரமத்தை யும் அநீதியையும் அழிக்கத் தன்னு லானதைச் செஞ்ச உன்னைக் கொலைகார ளுகவே வச்சுக்குவோம். உன்னே விடக் கொலைகாரங்க நாட்டுக்குள்ளே எத்தனை பேர்? படியரிசியிலே பாதி கல்லைக் கலக்கிற வியாபாரி கொலை காரன் இல்லையா? ஒரு உயிரை அது துடிக்கத் துடிக்கக் கொன்று கடையை விரிக்கிறவனும், தன் வயித்தை நிரப்பிக்கிற வனும் யாரு? மத்தவங்க உணர்ச்சியை மதிக்காம, அவங்க உள்ளத்தைத் தன் காலடியிலே போட்டு மிதிச்சுத் துவைக்கிற தன்னலக்காரனுக்கு வேற என்ன பேரு? கைநீட்டி லஞ்சம் வாங்கறவனும், அதைக் கொடுத்து ஆசை காட்டறவனும் தர்மத்துக் குச் சமாதி கட்டவில்லையா? இப்படி தங்கள் மனச்சாட்சியைக் கொன்று, உடலாலே மட்டும் உயிர் வாழற கொலையாளிங்க கோடிக் கோடியாய் நாட்டுக்குள்ளே நட மாடிக்கிட்டு இருக்க, உன்னைக் குத்தம் சொல்லிக்கிறயே வேலையத்துப்போய்! அப்ப, நீ நினைக்கிருப்பலே நாட்டைக் காக்கிற பணியிலே எதிராளிங்களைச் சுட்டுத் தள்ளு கிற நாங்களும், கசாப்புக் கடைக்காரங்களும் ஒண்ணுதான் இல்லையா?''

— பூபதி கேலியாகக் கேட்டான். அவனு டைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் பரசுவி னுள்ளே அவனையும் மீறிய மனமாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவன் மனம் தெளிய நெடுநேரமாகவில்லை. இத்தனை நாளாய்ப் புழுங்கி வந்த எண்ணத் தைக் களைந்தவனுய் அவன் பூபதியின் கையைப் பற்றினுன்.

''பூபதி! நாட்டுக்காக உயிரை விடத் தயாராக இருக்கிற உன் முன்னுலே கோழை மனசோட இருக்கிற நான் நிற்கத் தகுதி யில்லே. நியாயத்தை நிலைநாட்ட நான் செய்தது சரிதான்னு என்னைத் தேடி வந்து சொல்ல வேண்டிய வேலையை உனக்கு வச்சிட்டேன். இனி உன் நினைவு வரும்போ தெல்லாம், என் மனசைத் தைரியப் படுத்திக்குவேன். ஆதரவற்றுப் போன சரவணன் குடும்பத்துக்கு என்னுலான உதவியைச் செஞ்சால் அதுவே பெரிய ஆறுதலாய் இருக்கும்''என்ருன் உணர்ச்சிப் பெருக்குடன்.

பரசு, எதிரே பரந்திருந்த தன் வயலைப் பார்த்தான். தலைக்கனம் காரணமாய் நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் மனித இனத் தைக் காணப் பிடிக்காது தலை கவிழ்ந்து விட்டாற் போல, முற்றிய கதிர்கள் நெல் மணிகளின் கனந்தாங்காமல் சரிந்திருந்தன. அவற்றைக் கண்டவன், ''பூபதி! கண்ணுக்கு நிறைவைத் தருகிற என்னுேட வயலைப்பாரு. நீ போர்க்களத்திலே நின்னு நாட்டைக் காப்பாத்துவது போல, இனிமே நான் முழு மூச்சாய் ஏர்க்களத்திலே நின்னு நாட்டைக் காப்பாத்துவேன்" என்ருன் பெருமையுடன். அவனிடமிருந்த உற்சாகம் பூபதியையும் தொற்றிக் கொண்டது.

'ஜெய் ஜவான்! ஜெய் கிஸான்—பூபதி உரத்த குரலில் முழக்கமிட்டபடி பரசுவின் கைகளைப் பற்றி குலுக்கினுன். அடுத்து எழுந்த அவர்கள் சிரிப்பொலியால் அந்த அகண்ட வெளி சிலிர்த்தது ★

With Best Wishes
from

SHAPOORJI PALLONJI & Co.,
Private Limited

Head Office :

70, N. Master Road,

Bombay-1.

With Best Compliments
from

PESTICIDES CORPORATION

BOMBAY MUTUAL CHAMBERS,
5TH FL. 19/21, HAMAM STREET,
FORT, BOMBAY-1.

தமிழ்க்கவிதையும் புதுமையும்

நா. பார்த்தசாரதி

கவிதை எழுதுவது மட்டும் அல்லாமல் நல்ல வசனம் எழுதுவதும் கூட ஒரு கலை என்றே நான் நினைக்கிறேன். அவ்வளவேன்? எழுதுவதே ஒரு கலை என்ற பொது மனப்பான்மை இருந்தால் இவை அனைத்துமே கலை என்ற பிரிவில் அடங்கிவிடும். வசனத்தைக் கவிதை போலவும், கவிதையை வசனம் போலவும் எழுதிவிடக்கூடிய முயற்சிகளும் உண்டு. ஒரு பிரதானக் கலையில் தோல்வி அடைபவர்கள் சமயங்களில் அந்தத் தோல்விகளுக்கே ஒவ்வொரு கலைப்பெயர் சூட்டிவிடுவதும் உண்டு. அந்தத் தோல்விகளைப் பற்றி நான் இங்கே விவரிக்கவில்லை. ஒருவேளை அப்படி நான் செய்யப் புகுந்தால், அது தீவிரமான விமரிசகனின் வேலையாகிவிடலாம். எனவே, அதைத் தவிர்த்துவிட்டுத் தமிழ் "கவிதை எழுதும் கலை"யின் நிலைமைகளைக் கவனிக்கலாம்.

புகழ் வாய்ந்த தமிழ் கவிதைக்குப் பல ஆயிரம் வருட வரலாறும், பல்வேறு வகை வடிவங்களும் உண்டு. கவிதை இயற்றுவதற்கு இலக்கணங் கூறும் நூல்களும் பல உண்டு. ஆயினும், அந்த வடிவங்களையும் அந்த இலக்கணங்களையும் அனுசரித்து வளர்ந்த மலையளவு பழந்தமிழ்க் கவிதைக்குப் பின் மீண்டும் இந்தப் பத்தாண்டுகளுக்குள் தமிழ்க் கவிதையில் சிறுசிறு புதிய சாயல்கள் சில தென்படுகின்றன. எப்போதும் தானாக நேரும் மாறுதலின் சாயல்கள் உயிரோட்டத்தை நிருபிப்பவை ஆகும்.

தமிழில் சங்க இலக்கிய யாப்பு முறைகளிலிருந்து 'சீவக சிந்தாமணி' ஆசிரியர் திருத்தக்க தேவரும், கம்பராமாயண ஆசிரியர் கம்பரும் மேற்கொண்ட விருத்த யாப்பு முறைகள் புதுமையானவை. பிற்காலக் கவிதையின் பிரசித்தமான வடிவம் விருத்தமாகவும், விருத்தத்தின் உட்பிரிவுகளாகவும் அமைய இவ்விருவரும் பேருதவி புரிந்தனர். இவர்களின் சக்தியும் தாயுமானவர், இராமலிங்கர், ஆழ்வார், நாயன்மார்களின் கலப்பான உந்துதலும், பாரதியாரின் நேருக்குநேர் பேசுவது போன்ற ஆற்றல் வாய்ந்த தமிழ்க் கவிதையை அளித்தன. பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை பாமரனுக்கும் புரியும் ஓர் அம்சமாகிவிட்டது. அதில் மேலும் பல புதிய சாயல்கள் பிறந்துவிட்டன. பாரதியால் தமிழ்க் கவிதை எளிதாகியது இது மிகச் சிறந்த மாறுதல்.

இன்று தமிழில் கவிதை எழுதுகிறவர்கள் பெரும்பாலும் பாரதி, பாரதிதாசன் வழியில் முன்னேறுகின்றனர். இவர்களில் பலர் மரபில் நம்பிக்கையோடு புதுமை செய்ய முயலுபவர்கள். சிலர் மரபை வெறுத்து ஒதுக்குகிறவர்கள்.

Wolf

THE FINEST ELECTRIC TOOLS IN THE WORLD



Whatever the industry—heavy and light engineering, transport, agriculture, or any other—Wolf portable electric tools prove themselves the ideal tools.

Wolf Tools provide

- **Portable extra power at your elbow.**
- **Increased productivity with more profitability.**
- **A wide range for diverse applications.**

After-sales service guaranteed through a net-work of Service Stations throughout the country.

Wolf ELECTRIC TOOLS

RALLIS INDIA LIMITED,
BOMBAY • CALCUTTA • DELHI • MADRAS

ULKA-RW-8

ஒரு பக்கம் சிறுபான்மை, மரபில் நம்பிக்கையற்றுப் புதுமை புரிய முயலும் வகையினரும் இருக்கின்றனர். இவர்கள் குரல்கள் புதுக் குரல்கள். இவர்கள் கவிதையும் புதுக் கவிதைகள். மரபு ரீதியான கவிதையின் புறவடிவ இலட்சணங்களை இவர்கள் அதிகம் பொருட்படுத்துவதில்லை. அதிகம் அனுசரிப்பதும் கிடையாது. ஒரோ நோக்கில் அது தவறில்லைதான்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு; ஒருவன் கவிதை எழுதும் ஆற்றல் உள்ளவனாக இருந்தால்தான் அவனுக்குக் கவி எழுதும் இலக்கண முறைகள் பயன்படும். கவி எழுதும் இலக்கண முறைகளே ஒருவனைக் கவிஞனாக்கி விடமாட்டா என்ற பொருளில் ''காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றாகுக'' என்ற பழமொழி வழங்குகிறது. ஆவலும், ஆற்றலும், கோவமும், உணர்வும் பொருந்தி வருகிறவனுக்கு இலக்கணமும் பயன்படலாம். இலக்கணமே ஒருவனைக் கவியாக்கி விடாது. இலட்சியமும், விஷயமும், ஆவலும், கனிந்த உணர்ச்சிகளுமே துணை செய்ய, ஒருவனிடமிருந்து நல்ல கவிதை பிறக்க முடியும். ஓசையின்பமும், பொருட் செறிவும், சொற் சிக்கனமுமே (Economy of expressions) கவிதையை வசனத்திலிருந்து உயர்த்திச் சிறப்பளித்து வேறுபடுத்துகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. விரைந்து மீண்டும் ஒரு முறையோ பல முறையோ, நினைவு கூறத்தக்க நயம் கவிதையில் இருக்கவேண்டும். எத்தனை முறை நினைத்தாலும், நினைவூட்டிலும், ஒரு புதிய சிலிர்ப்பையும், உணர்வையும் தரக்கூடிய அப்போ தலர்ந்த தன்மையே (Freshness) கவிதைக் குரியது.

இவற்றை எல்லாம் தேடி ஞாபகப் படுத்திக் கொண்டுதான் கவிதை எழுத வேண்டும் என்று சொல்ல வரவில்லை இவையெல்லாம் இணைந்து நேரும்படி கவிதை அமையவேண்டும். எழுதி முடிக்கப்பட்டுத் தன் கைக்கு வரும் கவிதையில் இவற்றையெல்லாம் ரசிகன் தேடுவான் என்பதென்னவோ உறுதி.

தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை ரயில் பிரயாணத்தில் மௌனமாக ஒரு 'மேகஸின்' படிப்பது போல் படிக்க முடியாது. தமிழில் சந்த விருத்தம், கும்மி, காவடிச் சிந்து, கிளிக் கண்ணி ஆகிய பாடல்கள் ஓசை நயத்துக்காகவே பிறந்தன.

இவையெல்லாம் புதிய காலத்தில் தமிழில் இன்றோ நாளையோ எழுதப்படும் கவிதைக்கும் கூட அழகு செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். நவீன சமூக அரசியல் விஞ்ஞான பாதிப்புக்களின் உலகளாவிய தன்மைகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் என்பதோடு புதிய சாயல்களைப் படரவிடவேண்டும் என்ற யோசனையையும் நான் மறுக்கவில்லை. புதுமை, உள்ளடக்கம், செறிவு, தொனி, ஸிம்பாலிஸம் ஆகிய விதங்களில் வரட்டும். ஓசை இன்பம், சொல்லும் திருப்தி ஆகியவற்றைப் பலியிடுவதால் மட்டும்தான் அவை வரவேண்டும் என்று தீவிரமாயிருப்பவர்களோடு நான் சிறிது வேறுபடுவது தவறாகாது என்றே நினைக்கிறேன். கருத்து வேறுபாடும் இலக்கிய உரிமையே.

மரபுகளுக்கு மேலும் எல்லை விரிந்து வளரும் நவீன உருவ உள்ளடக்க வளர்ச்சிகளை நானும் தமிழில் வரவேற்கிறேன். என்றாலும், உரைநடையையும் கவிதையையும் பாகுபாடு செய்கிற ஒரு மெல்லிய அழகிய நூலிழை வித்தியாசம் எதுவோ அது என்றும் அப்படியே இருக்கும், இருக்க வேண்டும் என்பதை என்னோடு சேர்ந்து நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

''சுவை புதிது
சொல் புதிது
பொருள் புதிது
சோதி மிக்க நவகவிதை'' என்று

மகாகவி சுப்பிரமணிய பாரதி கூறியதை இக்காலக் கவிஞர் அனைவரும் நினைவில் கொண்டிருப்பார்கள். அவரே வேறோர் இடத்தில் கூறுவதுபோல வருங்காலத் தமிழ்க் கவிதை நேருக்கு நேர் பேசுவது போல் துல்லியமாகவும், வெடிப்புறப் பேசுவது போல் சக்தி நிறைந்ததாகவும் அமையவேண்டும் என்று நாம் எல்லோரும் ஆசைப்படுவோமாக. ★

With Best Compliments

from

THE DIGVIJAYSINHJI SALT WORKS PVT. LTD.

GRAM : "SALT" BEDI PORT,

PHONE : 81 JAMNAGAR-2.

HINDUSTAN WIRE NETTING CO. PVT. LTD.

Post Box No. 55 — Agra Road,
THANA. (Maharashtra)

WIRE GAUZE
HEXAGONAL WIRE NETTING
CHAIN LINK FENCING

CRIMPED WIRE NETTING
STRANDED WIRE
BLOW ROOM FENCING

WIRE NAILS
PANEL PINS
BLUE CUT TACKS

U STAPLES
HEEL PINS
BARBED WIRE

Grams : WIRE-GAUZE, THANA. Phone : 593786-87-88

Works & Regd. Office :
Agra Road, Thana.

சூரபத்மன்

அன்று மனிதர், அசுரர், தேவர் மூவரும் கூடிக் குலவிய ஒரு பொற்காலம்.

அதுபோது ஆலயத் தீவை ஆண்ட அசுரகுல வேந்தன் சூரபத்மன். தாயாதிகளான தேவர்கள், நாவலந் தீவின் காவலன் பாண்டியன் கடுங்கோன் இவர்களின் நண்பன்.

அதுபோது தேவகுரு பிரகஸ்பதிக்கும், அசுரகுரு சுக்கிராச்சாரி யாருக்கும் தங்களுக்குள் யார் உயர்ந்தவர் என்ற போட்டி.

சுக்கிரர் சூரனைத் தூண்டுகிறார். சூரன் பணிவோடு மறுக்கிறான். ஆனால் வீரமாமக வேள்விக்கு மந்திரம் கேட்க வந்த சூரனை வஞ்சகமாக சிக்கவைத்து விடுகிறார் சுக்கிராச்சாரியார்.

வேள்வி நிறைவேறுகிறது. சூரன் வரம் பல பெற்று மகிழ்கிறான். சுக்கிராச்சாரியார், அளித்த மந்திரத்துக்குக் கைம்மாருக தேவர்கள் மீது போர் தொடுக்க அவனைப் பணிக்கிறார். வேறு வழியில்லாமல் சூரன் உடன்படுகிறான்.

சூரபத்மனின் கொடுமை தாளாமல் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடுகின்றனர். முருகன் சூரனை முடிக்க வருகிறார்.

வீரவாகு சூரனிடம் தூது வருகிறான். தூதினை மறுத்து போர் முழக்கம் செய்கிறான் சூரபத்மன்.

வீரவாகுவும், சூரனின் மகன் பானுகோபனும் போர்க்களத்தில் எதிர்க்கின்றனர்.

அடுத்து முருகன் சூரனின் இளவல் சிங்கமுகனையும், எண்ணற்ற வீரர்களையும் கொன்று குவிக்கிறான்.

அதுபோது சுக்கிராச்சாரியரே போரை நிறுத்தும்படி வேண்டியும், சூரன் மறுத்து செருக்களம் நோக்கி செல்கிறான்

மேடை, ஏற்கனவே அறிந்த செய்தியாகிவிட்ட விளைவிற்கு உருவம் காட்டும்

இரா. பழனிச்சாமி

With the Best Compliments of :

THE INDIAN EXPRESS NEWSPAPERS (BOMBAY) PRIVATE LIMITED

"Express Towers"
Nariman Point,
Bombay-1.

Publishers of :

THE INDIAN EXPRESS (Daily)
THE SUNDAY STANDARD (Weekly)
LOKASATTA (Marathi Daily)
SUNDAY LOKASATTA (Marathi Weekly)
SCREEN (Film Weekly)
THE FINANCIAL EXPRESS (Financial Daily)

SAKTHI SUGARS LIMITED

Manufacturers of :

SUPERIOR QUALITY
WHITE CRYSTAL SUGAR

Producers of :

SORGRUM, MAIZE, BAJRA,
IR. 5 AND OTHER
HYBRID SEEDS (Certified by M.S.C.)

Regd. Office :

72, Sen Gupta Street,
P.B. No. 960,
Ramnagar, Coimbatore-9.

சிசுபாலன்

கவிஞர் இரா. பழனிச்சாமி

குந்தி தேவியின் தங்கை சாத்துவதியின் மைந்தன் சிசுபாலன். அவனுக்குக் கண்ணன் பால் பெருமன்பு.

ஆனால் 'கண்ணனால் சிசுபாலனுக்கு முடிவு' என்பது அசரீரி. சாத்துவதி கண்ணனிடம் கெஞ்சுகிறாள் அம்மாயவனும் சிசுபாலன் நூறு குற்றங்கள் செய்யும் வரை பொறுப்பேன் என வாக்குறுதி தருகிறான்

சிசுபாலனின் ஒன்றுவிட்ட தம்பி தந்தவக்கிரன். அவன் சிசுபாலனைக் கண்ணனின் எதிரியாகிய ஜராசந்தனோடு சேர்க்க முயல்கிறான்; முடியவில்லை.

சிசுபாலன் கண்ணனின் தோழன். விசால மன்னனின் மகள் வைசாலினியைக் காதலிக்கிறான்.

ஒருநாள் மதங்கொண்ட பட்டத்து யானையை அடக்க சிசுபாலன் சென்றபொழுது, மலைப்பாம்பாக அவனைச் சுற்றிக் கொண்ட ஒரு பயங்கர மனிதனிடமிருந்து ஜராசந்தன் சிசுபாலனை விடுவிக்கிறான். காலத்தால் செய்த உதவிக்கு சிசுபாலன் அவனுடன் தோழமை கொண்டு தெய்வத்தையே எதிர்க்க முற்படுகிறான்.

இதன் விளைவாக, கண்ணனிடம் அவன் செய்த குற்றங்கள் வளரத் தொடங்குகின்றன.

தந்தவக்கிரனும், ஜராசந்தனும் கண்ணனை விரும்பும் ருக்மிணியை மணக்கும்படி சிசுபாலனைத் தூண்டுகின்றனர்.

நாரதர் வருகிறார். விஷயமறிந்த கண்ணன் ருக்மிணியைச் சிறையெடுத்துச் செல்லுகின்றான். பீமன் கண்ணன் ஆணை கொண்டு ஜராசந்தனைக் கொல்கிறான்-

நண்பனைக் கொன்ற கோபாலனைப் பழிவாங்க சிசுபாலன் புறப்படுகிறான்.

தருமன் நடத்தும் ராஜசூய யாக மண்டபத்தில் இருவரும் சந்திக்கின்றனர்

பின்னர் நடப்பதை அரங்கம் தெளிவுபடுத்தும்.



Nirlon

The largest manufacturers of Nylon filament yarn.

Pioneers of Polyester filament yarn.

One of the leading exporters of synthetic fabrics.

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.,
115, Mahatma Gandhi Road
Bombay 1.

With Best Wishes

from

"VIKAS"

213-15, KHETWADI MAIN ROAD,

SHAH MANSION, 3rd FLOOR,

BOMBAY-4.



சாணக்கிய சபதம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென்னகத்திலே பிறந்த சாணக்கியன் வடபுலத்து மன்னன் தனநந்தனால் அவமதிக்கப்பட்டு சபை நடுங்கும் குரலில் வஞ்சினம் செய்கிறான்.

“என்னை அவமதித்த இம்மன்னனையும், ஏன், நந்தர் குலத்தையே... வேரறுத்து, சந்திரகுப்தனை இம் மகத நாட்டின் மாமன்னனாக்கி, அம் மௌரியனின் அவைக்களத்தில் தளபதி ராட்சசனையும், மந்திரி மகேந்திரனையும் கைதியாக நிறுத்தி, மண் தட்டிலே உணவு கொள்ளச் செய்வேன். இச்சூளுரையைச் செயலாக்கி முடியும் வரை அவிழ்ந்த குடுமியை முடியமாட்டேன்.” —இதுதான் சாணக்கிய சபதம்.

அதுபோது, உலகையே வென்று வரும் அலெக்ஸாந்தரின் வீரக் குரல் கேட்டு, அவரிடம் சாணக்கியன் சந்திரகுப்தனையும் அவனுடைய தோழன் விராடனையும், படை உதவி வேண்ட பாஞ்சாலம் நோக்கி அனுப்பி வைக்கிறான். படை உதவிக்குக் கைம்மாறாக பார் முழுமைக்கும் பேரரசன் தாம்தான் என்பதை ஏற்கும்படி அலெக்ஸாந்தர் கட்டளையிட, அதனை ஏற்க மறுத்த சந்திரகுப்தன் பாதாளச் சிறையிலே அடைபடுகிறான். ஆனால், சிறை மீட்சியிலே உதவுகிறாள் செல்யூகஸ் நிகேடர் அருமை மகள், ரோஷனா!

இந்த நேரத்தில்தான் அவள் மௌரியனின் நெஞ்சம் கவர்ந்தவளாகி விடுகிறாள். உதவி கேட்டுப் போன இடத்தில் ஊறு விளைந்திட்டாலும் சாணக்கியனின் அரசியல் சூழ்ச்சி பாஞ்சால மன்னன் போரஸை சந்திரகுப்தனின் பக்கத் துணையாகக் கொண்டு வந்து சேர்க்கிறது.

விளைவு; பாடலிபுத்திரப் போர்க்களத்தில் நந்தன் வீழ்ந்து மடிகிறான். ராட்சசனும் மகேந்திரனும் சிறைப்படுகிறார்கள். சபதம் அநேகமாக நிறைவேறுகிறது; ஆனால், ...

உணவிட்ட மண் தட்டு, ராட்சசனின் இராஜ தந்திரத்தால் பொன் தட்டாக மாறுகிறது. ஆயிரமாயிரம் மக்கள் ராட்சசனின் விடுதலையை வேண்டுகின்றனர். மக்கள் கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது.

ரோமானிய ரோஜா ரோஷனா, ஆரிய மகன் சந்திரகுப்தனை மணப்பதைக் கேட்டு அவள் தந்தை செல்யூகஸ் வெகுண்டெழுகிறான். ஆனால், அவள் அண்ணன் ஆண்டியோகஸ் அவளுக்கு உதவுகிறான்.

ராட்சசன், ஆட்சியை மீண்டும் கைப்பற்ற சூழ்ச்சி நடத்துகிறான்.

அவனுடைய சூழ்ச்சி, சந்திரகுப்தனின் ஆட்சி ரோஷனாவின் காதல் வேட்கை என்னவாயிற்று?

மேடை விடை கூறும்.

மதுரை திருமாறன்

With

compliments

from

THE INDO-BURMA
PETROLEUM CO. LIMITED

தெலுங்கில் அரங்கு

எம். ஜி. சாரி

தெலுங்கு நாடகம் பல நூற்றாண்டு கால வரலாறு படைத்தது. இன்றும் ஒரு சராசரி ஆந்திரன் மற்ற எந்தக் கலைவடிவத்தைக் காட்டிலும் நன்கு நடிக்கப்படும் நாடகம் ஒன்றினையே நாடுகிறான். மற்ற இந்தியமொழி நாடகங்களைப் போல் ஆந்திரருடைய நாடகங்களும் பரதமுனிவரிடமிருந்தும் வடமொழி நாடகங்களிலிருந்தும் தங்கள் மேடைக்கு ஆர்வத்தையும் தூண்டுதலையும் பெற்றது. பழைய கால தெலுங்கு நாடகங்கள் மகாபாரதத்தின் தலையான நிகழ்ச்சிகளிலிருந்து கருத்துக்களை ஏற்று உருவாயினதாம். அதுபோன்று இன்னும் பாகவதம், இராமாயணம் போன்ற மற்ற சிறந்த இந்திய இதிகாசங்களிலிருந்து கருப்பெற்ற கதைகளே. இந்நாடகங்கள் சாதாரணமாக இசையும் நாடகமும் விரவியவை. பதின்மூன்றாம் நூற்றாண்டில் சித்தேஸ்வர யோகி தெலுங்கு நாடகத்தின் மறைந்த பெருமையை மீண்டும் வெளிக்கொணரும் முயற்சியோடு குச்சுப்புடி எனும் நாட்டிய நாடக வடிவத்தின் மூலம் ஒரு புதிய மலர்ச்சியை உருவாக்கினார். இவருடைய "பாமகலாபம்" ஆந்திரர்களின் பழைய நாடகங்களில் மிகச் சிறந்த ஒன்று. இதில் நடித்தவர்கள் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குச்சுப்புடி எனும் கிராமத்தைச் சேர்ந்த அந்தணர்கள். இக் குசகப்புடி அந்தணர்களுடைய பெண்டிர் இதில் பங்கேற்று நடிப்பது கூடாது எனும் காரணத்தால் இன்றும் சம்பிரதாயமான குச்சசப்புடி நாடகக் குழுக்களில் மகளிர் பங்கு பெறுவதில்லை.

இக் காலங்களில் மற்ற நாடக வடிவங்கள் இருந்தாலும் அவையாவும் வடமொழி நாடகங்களைத் தழுவியவை. அவை, மக்களை இந்தியப் பண்பாட்டு நாகரிக மரபுகளில் வளர்த்தன. இந் நாடகங்கள் பெரும்பாலும் தெருக்கூத்துகளே. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில், 'நாடகா' என்று கூறப்படும் இப் பாமரத் தெலுங்கு நாடக வகை ஓர் இலக்கிய அந்தஸ்து பெற்று, தஞ்சையின் புகழ்பெற்ற நாயக்க மன்னர்களான ரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் இவர்கள் காலத்தில் அரசவை ஏறியது. இக்காலத்தில் இவை, ஆங்கிலத்திலிருந்தும், மற்ற மொழிகளிலிருந்தும் காப்பியடிக்கப்பட்டு இயங்கும் நவீன நாடகங்களைப் போலில்லாமல் தனித்துவம் உடைய கட்டுக்கோப்பும், தரமான கலைப்பாங்கும் கொண்டு விளங்கின. இவை தென்னகத்திலுள்ள மற்ற மொழி நாடகங்களை, குறிப்பாக கர்நாடகத்தின் யக்ஷகானத்தைப் பெரிதும் செல்வாக்கு செலுத்தியிருக்க வேண்டும். பழமையான தெலுங்கு நாடகத்தின் புரவலர்களாக விளங்கிய தெலுங்கு நாயக்கர்கள், அண்மைக் காலம் வரையில் இந்தியாவிலேயே முதன்மையானது என்று எண்ணப்பட்ட அன்றைக்கு உள்ள எல்லா வித வசதிகளும் பொருந்திய திறந்தவெளி அரங்கையும் நிர்மாணிப்பதில் முன்னோடிகளாக விளங்கினார்கள். சமீப காலத்திய ஆராய்ச்சிகள் அரங்க நிர்மாணத்தில் தென்னகத்தின் எல்லாப் பகுதிகளையுமே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆண்ட ஆந்திரத்தின் சாதவாகனர்களே முன்னோடிகள் என்று காட்டுகின்றன. ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் மாநிலத்தில் உள்ள நாகார்ஜுன கொண்டாவின் அகழ்வுகளிலிருந்து ஆந்திர சாதவாகனர்கள் நான்கு பக்கங்களிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அமரும் வகையில் 'காலரி'யுடன் உள்ள வட்டவடிவ அரங்கினை நிர்மாணம்

A beautiful new way to stay cool. The 16" Deluxe Table Rallifan

YOU'RE COOLER WITH A

Rallifan

A PRODUCT OF THE RALLI GROUP

The quality Rallifan range: table fans, cabin fans, ceiling fans, pedestal fans, exhaust fans

With Best Compliments
from

SURESH & COMPANY

IMPORTERS, AGENTS, MERCHANTS
AND
STOCK HOLDERS OF TOOL & ALLOY STEEL
IRON AND STEEL MATERIALS ETC.

501, Loha Bhavan,
P. D'Mellow Road,
BOMBAY-9 BR.

Phones :
Office : 328548
Residence : 555347

Gram :
STAINSTEEL

செய்தார்கள் என்று தெரிகிறது. ரவீந்திரரின் நூற்றாண்டு விழாவின்பொழுது டெல்லியில் கட்டப்பட்ட 'ரவீந்திர ரங்சாலா' தங்கள் முன்னோர்களால் அமைக்கப்பட்ட வட்ட வடிவ அரங்கத்தை எண்ணி கட்டப் பட்டதுதான் என்பது ஆந்திரர்களின் பெருமைக்குரிய ஒன்று. மொகலாய படை யெடுப்புக்குப் பின் பழைய கால சம்பிரதாய நாடகமேடை தென்னகத்திலே மட்டும் தான் இயங்கியது என்பது மறுக்கப்படாத ஒன்று. இக்காலத்தில் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் பங்கு பெறாத காரணத்தினாலோ அல்லது பங்கேற்ற நடிகர்கள் சமுதாயத்தால் கீழ்த்தரமாக மதிக்கப்பட்ட காரணத்தினாலோ நல்ல சுயமான தெலுங்கு நாடகங்கள் மேடை யிடப்படவில்லை. குச்சுப்புடி நடன நாடகங் கள் பிராமண சமூகத்தினரால் மட்டும் நடிக்கப் பட்டாலும் சித்தேஸ்வர யோகி, சிருங்கேரி ஜகத்குருவின் ஆசிபெற்றவரான படியால், இவை மட்டும் இக்காலத்தில் விதி விலக்கான மேடைக் கலைவடிவமாக உயர்ந்து விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நவீன தெலுங்கு நாடக சகாப்தம் தொடங்கியது. இதுபோது 'தார்வாட்' நாடகக் கம்பெனி தங்கள் மேடைக் காட்சி ஜோடனைகளை இடத்துக்கு இடம் எடுத்துச் சென்று நாடகங்கள் நடத்தி ஆந்திர மாநிலத்தையே அயர வைத்தனர். இக்குழுவினர் ஹிந்தி போன்ற மக்களுக்குப் புரியாத பிற எந்த மொழியிலும் நாடகங்கள் நடத்தினாலும் அவை படித்த மக்களிடையே யும், பாமரர்களிடையேயும் நாடக ரசிகர் களிடையேயும் பொதுவாக எல்லோரிடத் தும் மனத்தில் ஒரு வலுவான தாக்குதலை உண்டாக்கியது. திறமையான காட்சியமைப் பும் அற்புதமான மேடை உத்திகளும் மக்களுக்கு ஒரு புது அனுபவமாய்த் தோன்றியது. இக்குழுவினருடைய சிறந்த பயிற்சி, கட்டுப்பாடு, நடிப்புத் திறமை, உடையணிகள், நிறைவான டைரக்‌ஷன் இவையாவும் நாடக ரசிகர்களைக் கவர்ந்தன. இந்த 'தார்வாட்' கம்பெனியார் தாம் முதன்முதலில் டிக்கெட் வைத்து நாடகங்கள் நடத்தினர். இவர்கள் ஆண் நடிகர்களின் ஈடுபாட்டையும், கவனத்தையும் குலைத்து விடும் என்ற காரணத்தால் பெண் வேடங் களுக்கு நடிகைகளைப் போடுவதில் நம்பிக்கை கொள்ளவில்லை.

'தார்வாட்' குழுவினரோடு தெலுங்கு நாடகங்களில் உயிர்மிக்க காலக்கட்டம் முடிவுற்று, நவீன தெலுங்கு நாடகங்கள் பூரண வலுவுடன் தொடங்கி ஆந்திரம் முழுதும் பலப்பல நாடகக்குழுக்கள் தோன்ற லாயின. ஏறக்குறைய 1920 வரை ஆந்திரப் பிரதேசத்தில் நாடகக் குழுக்கள் 'தார்வாட் குழுவினர் அமைத்த வழிமுறையைக் கொண்டே ஒழுகின. தார்வாட்' குழுவினர் தங்கள் நிகழ்ச்சிகளுக்காக நாடக அரங்கங் களைக் கட்ட முனைந்தனர். ஆந்திரத்தின் கோதாவரிக் கரையிலுள்ள அமைதியான நகரமான ராஜமகேந்திரத்தில் உள்ள நாடக ஆர்வலர்கள் இச்சந்தர்ப்பத்தை முன்னர் பயன்படுத்திக் கொண்டு அந்தந்த அரங்கங் களிலே தங்களுடைய நாடகங்களையும் நடத்தலாயினர். புகழ்பெற்ற சமூக சீர் திருத்தவாதியாகிய கந்துகூரி வீரேசலிங்கம் சில நாடகங்களை எழுதினார். அவற்றை உள் ளூர்க் கல்லூரி மாணவர்கள் நடித்தனர்.

இந்நாடகங்கள் ரத்னவளி, சமத்கார ரத்னவளி மற்றும் மிகக் குறுகிய காலத்தில் எழுதித் தயார் செய்த ஷேக்ஸ்பியர் நாடகத் தின் தழுவலான "Comedy of Errors' முதலியன. இந்நாடகங்கள் தொழில்முறை யில் சிறந்த வெற்றியடைந்தன. ஆனால், அக்கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் நாடகங்களில் தம் குழந்தைகள் நடிப்பது கீழ்த்தர மக்களுக்குரிய ஒன்று என்ற எண்ணங் கொண்டு திரு. வீரேசலிங்கம் அம்மாணவர்களை ஊக்குவிப்பதைக் கண்டித் தனர். அவர்கள் சட்டரீதியான நடவடிக்கை கள் எடுக்கப் போவதாகவும் பயமுறுத்தினர். எனவே, இக்குழு சிறிது காலத்திற்குள்ளா கவே மறைந்து போயிற்று. ஆந்திரத்தி லுள்ள நகரங்கள் முழுவதும் பல நாடகக்

With the Best Compliments

of

AMRUTANJAN LIMITED

Manufacturers of

RENOWNED AMRUTANJAN PAIN BALM, DERMAL OINTMENT, ANOLEUM, INHALER, GRIPE MIXTURE AND SALOFEN TABLETS

MAHARASHTRA AGRO-INDUSTRIES DEVELOPMENT CORPORATION LTD.

SERVES THE AGRICULTURISTS OF MAHARASHTRA

AGRICULTURAL MACHINERY

Imported tractors and tillers readily available on cash payment. Service and repair Centre for tractors and agricultural machinery has been established at Chinchwad.

"SUCRAS" ANIMAL FEEDS

Scientifically compounded Nutritious Feeds at Low Prices for Cattle, Poultry, Pigs and Sheep.

"KRUSHIUDYOG" FERTILIZERS

Superphosphate and compounded NPK Granulated Fertilizers.

For any of these services contact us at

"Rajan House", 3rd Floor,
Near Century Bazar, Bombay-25 DD.
Phone : 458211 (3 lines)

குழுக்கள் தோன்றினும் கி. பி. 1886 வரை தெலுங்கு மேடை குழவிப் பருவத்திலேயே தான் இருந்துவந்தது. அதற்குப்பின் தான் இம்மேடை தன் முழுவளர்ச்சியைக் கண்டது எனலாம். இக்காலத்தில் மிகவும் புகழ் பெற்ற நாடகக் குழுக்களான பெல்லாரி சரஸவிநோதினி சபா, ராஜமகேந்திரம் இந்து நாடக சமாஜ், சென்னை சுகுண விலாச சபா இவை தோற்றுவிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் சில தெலுங்குப் புலவர்களை ஆதரித்தது. இது அவற்றுக்குள்ளே ஒரு வலுவான போட்டியை ஆரம்பித்து, இதன் விளைவாக சிறந்த நாடகங்களும், நடிகர்களும் தோன்றுவதற்கு வழியமைத்தது. இந் நிறுவனங்களின் குறிக்கோட்கள் தாழ்ந்து போன மேடைக் கலையை மீண்டும் தழைக்கச் செய்வதே. அன்றாட அலுவல்களின் காரணமாகக் களைத்துச் சோர்ந்த மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான அனுபவத்தை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்க்கையின் இன்னல்களை சிறிது நேரத்திற்காவது மறக்கச் செய்வது, நாடக இயலின் உரைநடையை வளர்ப்பது, இந்திய நாடகமேடையின் தரத்தைஉயர்த்து வது ஆகிய இவை போன்றவைகளே.

தர்மாவரம் ராமகிருஷ்ணசாரியாவின் சித்ர நாளீயம், பாதுகா பட்டாபிஷேகம், ரோஷனரா சிவாஜி, சீலகமர்த்தி லக்ஷ்மி நரசிம்மத்தின் காயோபாக்யானம், வேதம் வெங்கடராய சாஸ்திரியின் ப்ராதாப ருத்ரீயம், பனுகௌடி லக்ஷ்மி நரசிம்மராவின் ராதாகிருஷ்ண, விப்ரநாராயண முதலியவை இக்காலத்தின் மிகச் சிறந்த நாடகங்களாக விளங்கி நாடக மேடையை ஒளிகூட்டின. இவை புராண. சரித்திர அடிப்படை கொண்டவைகளாக விளங்கின. இந் நாடகங்கள் பத்யம் என்று சொல்லப்படும் கவிதை வடிவங்களில் இருந்தும் அவை கவர்ச்சியான பண்ணமைப்போடும் இருந்தமையால் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் வெற்றியோடு பவனி வந்தன. இக்காலத்திற்குப் பிற்பட்ட காலத்ததாக இருந்தாலும் முந்தைய நாடகங்களுக்குக் குறையாத வெற்றி கண்ட நாடகம் திருப்பதி வெங்கடகவியின் பாண்டவ உத்தியோக விஜயலு (மகா பாரதத்தின் பிற்பகுதி) இந்நாடகத்தின் தனிப் பெருமை, இதில் நடித்த பெரும்பா லான நடிகர்கள் இதில் மட்டுமே நடித்து மிகப் புகழ்பெற்ற கலைஞர்களாக விளங்கியது தான்.

இத்தகைய இசை நாடகங்கள் மக்க ளிடையே செல்வாக்குப் பெற்றிருந்த போது கூரஜாடா அப்பாராவ் என்பவர் உரை நடை யிலேயே மிகப் புகழ்பெற்றதும், அதே நேரத் தில் மிகக் கருத்து வேற்றுமைக்கு உள்ளா னதுமான 'கன்னியா சுல்கம்' என்ற நாடகத்தை இயற்றினர். இந் நாடகம் மக்கள் பேசும் கொச்சை மொழியி லேயே எழுதப்பட்டது. இதற்குக் காரணம், அது பொதுமக்களுக்கு எளிதில் புரியக் கூடியது என்பது மட்டுமன்று, தெலுங்கு மொழியின் நகைச்சுவை பேச்சுக்கு இவ்வடிவமே இலக்கிய வடிவத்தைக் காட்டி லும் ஏற்றது என்பதால்தான். சமுதாய சீர் திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கிய இந் நாடகத்தின் அமைப்புச் சிறப்பு இதில் வரும் பாத்திரங்கள் அன்றாட வாழ்வில் காணும் மக்களாகவே விளங்கினர்கள் என்பதுதான். நகைச்சுவை, பாத்திரப் படைப்பு, நிகழ்ச்சிப் பின்னல்களைக் கொண்ட கதையமைப்பு, இவை கன்னியா சுல்கத்தைத் தெலுங்கு நாடகங்களின் சிறந்த இலக்கியமாக உயர்த்தியது இந்நாடகம் இப்பொழுது ரஷ்ய மொழியில் வெளிவரவுள்ளது.

இக் காலக்கட்டத்தில் உள்ள கலைஞர் களும், நாடக ஆசிரியர்களும் வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள். சமீப காலம் வரை ஆண்களே பெண் வேடம் தாங்கி நடித்து வந்தார்கள். இந்தக் காலத்தில் பல இளைஞர்கள் ஸ்திரிபார்ட் வேஷத்தில் புகழ் பெற்று விளங்கியவர்கள். இக்காலத்தில் நாயகி வேடங்களைப் போட்டு நடித்தவர்கள் பின்னர் புகழ்பெற்ற நாயகர்களாக (அரசியல் தலைவர்கள்)வும் விளங்கினர்கள். இவர்களில் ஆந்திர கேசரி, தங்கதுரி பிரகாசம்

Safer
Stronger
CEAT
tyres
last longer

FOR SAFETY
CEAT
FOR STRENGTH

CEAT TYRES OF INDIA LTD.

With Best Compliments
from

S. K. ENGINEERING CO.

MANUFACTURERS & CONTRACTORS

C-13, SHREE RAM INDUSTRIAL ESTATE,

KATRAK ROAD, WADALA, BOMBAY-31.

PHONE : 445573

(சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர்), தேசபக்தர் கோண்டா வேங்கடப்பைய பந்துலு, தேசோத்தாரக நாகேஸ்வரராவ் பந்துலு குறிப்பிடத் தக்கவர்கள். இன்னும் மூப்பிடி ஜக்கராஜு, உப்புலூரி சஞ்சீவராவ், ஸ்தானம் நரசிம்மராவ் போன்ற கலைஞர்கள் தங்களுடைய அற்புதமான ஸ்திரிபார்ட் நடிப்புத் திறமையால் தெலுங்கு மேடைக்கு மெருகூட்டினர். ஸ்தானம் நரசிம்மராவ் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருதுபெற்ற முதல் இந்திய நாடக மேடைக் கலைஞர் என்பது குறிப்பிடத் தக்கது. பெள்ளாரி ராகவ என்று பிரபலமாக அழைக்கப்பட்ட தாட்பத்ரி ராகவாச்சார்லு கலைஞன் மேடையில் தன்னுடைய பாத்திரத்தை வாழ்ந்து காட்டவேண்டும் என்ற சிந்தனையையும் ஏற்படுத்தி குடும்பப் பெண்களைத் தெலுங்கு மேடையில் பெண் வேடங்கள் இட்டு நடிக்க வைத்து ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தார். இவர் ஒரு சிறந்த நடிகர். கவியரசர் தாகூரை ஒரு தெலுங்கு நாடக மேடை ரசிகர் வினவிய போது. ஆந்திர நடிகர் ராகவா அவர்களையே அகில இந்தியப் பெருமைக்கு உரியவராகக் கருதுகிறேன் என்று கூறினாராம். அத்தகைய செல்வாக்கு ராகவா அவர்களுடையது.

பிரபலமான நாடகக் குழுக்கள் வீழ்ச்சியுற்றபோது காண்ட்ராக்ட் நாடகங்கள் கி. பி. 1928 வாக்கில் தோன்றலாயின. இவை லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டாலும் இதை நடத்தியவர்களே தெலுங்கு மேடையை அழிந்து போகாமல் காப்பாற்றியவர்கள் என்று கூறவேண்டும். 1920-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்காங்கு நாடக ரசிகர்களின் குழுக்கள் நடத்திய போட்டிகளின் விளைவாக நாடகங்கள் மக்கள் ஆதரவு பெற்று நாடக ஆசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் போற்றப்பட்டனர். இக்காலத்திய நாடகங்கள் சமுதாய கருத்தடிப்படை கொண்டனவாயினும், இசை நாடகங்களாகவே இருந்தன. இப்பொழுதுதான் பிரஹசனங்கள் எனும் நகைச்சுவை படைப்புகள் தோன்றின. இவ்வடிவத்தின் மிகச் சிறந்த படைப்பாளியாக பாமிடிப்பட்டி காமேஸ்வர ராவ் விளங்கினார். இவரே பிரஹசனங்களுக்கு தெலுங்கு இலக்கியத்தில் ஒரு தனி இடத்தை பெற்றுத் தந்தவராவார்.

1944-ல் ஆந்திர நாடக கலா பரிஷத் ஸ்தாபிக்கப்பட்டது. பல பயில்முறை நாடகக் கலைஞர்களும், ஆசிரியர்களும் முன்னணிக்கு வந்தனர். எளிய முறையிலும், குறைந்த செலவிலும் அரங்கிடத் தகுந்த நவீன உரைநடை நாடகங்கள் தோன்றலாயின. இவை அகில இந்திய மட்டத்தில் 1943-ல் நிறுவப் பெற்ற 'இந்தியன் பீப்பிள்ஸ் தியேட்டர் அஸோஸியேஷன்' நிறுவனத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டவை. இந்நிறுவனத்தின் ஆந்திரக் கிளையான பிரஜா நாட்டிய மண்டலி, டாக்டர் ராஜாராவ் அவர்கள் தலைமையிலே, விஜயவாடாவில் இயங்கலாயிற்று. இந்த ஸ்தாபனத்தின் நாடகங்கள் அநேகமாக நிலப்பிரபுக்கள். நிலமற்றோர் இவர்களுக்கிடையே உள்ள வர்க்கப் போராட்டம் பற்றியவை. இந் நாடகங்கள் அநேகமாக எல்லா பட்டி தொட்டிகளிலும் நடிக்கப்பெற்று, அவற்றினுடைய பொது ஜனக் கவர்ச்சி மக்களிடையே ஒரு மிகப் பெரும் அரசியல் விழிப்பை ஏற்படுத்தியது. திரை, நாடக மேடையைப் பாதிக்கலாயிற்று. ஆதரவு இல்லாத காரணத்தால் தயாரிப்புச் செலவு மிக்கதாய், கலைஞர்கள் நாடகங்களையே நம்பி வாழ முடியாமையினாலும் தொழில் முறை மேடை செயலிழந்து போகலாயிற்று. இன்றைய புதிய நாடகக் குழுக்கள் தரத்தில் தொழில் முறைக்கு நிகராக விளங்கினாலும் அமெச்சூர் முறையிலேயே இயங்கிவர விரும்புகின்றது.

விடுதலைக்குப் பிறகு ஆந்திரத்தில் நாடகங்கள் பலதரப்பட்டவைகளாக விளங்கின. போட்டிக்கானவை, பிரசாரத்திற்கானவை, பிறமொழித் தழுவல்கள், வியாபார நோக்கானவை, வரலாறு அடிப்படை

**TRAYONS
TRAYOPHANE
PROTECTS
WHILE
IT ATTRACTS**

Whatever your packaging need, go for India's tried and trusted Trayons Trayophane cellulose packaging film.

In India's widest range :
Plain transparent-Moisture-proof-Laminate-Opaque-Coloured.

Write for sample folder.
If you need advice,
we will be happy to help you.

THE TRAVANCORE RAYONS LTD.

Pioneer manufacturers of rayon yarn and cellulose film in India

Sales Office :
I. O. B. Building,
151, Mount Road,
Madras-2.

With

the Best

Compliments

of

CALTEX (INDIA) LIMITED

கொண்டவை, வானொலி நாடகங்கள் முதலியன. இவற்றுள் பல பயில்முறை குழுக்களால், பார்ப்போர்களைக் கவர்ந்திழுத்து பலமுறை அரங்கிடப்பட்டும், இன்னும் அரங்கிடப்பட்டுக்கொண்டும் உள்ளன. இது உயர்வு நவிர்ச்சியாகத் தோன்றலாம். ஆனால், ஆந்திராவில்தான் மிக அதிகமான அளவில் பயில்முறை குழுக்கள் இயங்கி வருகின்றன என்பது என்னவோ உண்மை. இக்குழுக்கள் எந்த அளவில் புதிய நாடகங்களையும் புதிய மேடை உத்திகளையும் தோற்றுவிக்கின்றன என்பதைக் கணிப்பது சற்று சிரமம்தான். நவீன நாடகங்களில் புகழ்பெற்ற திரைக் கலைஞரான நாகபூஷணத்தின் 'ரத்தக் கண்ணீர்' ஒன்றுதான் பலமுறை போடப்பட்டு அமோகமான வசூலைத் தந்துள்ளது. நாடகங்கள் எழுதுவது இலாபகரமாக இல்லாத காரணத்தால் ஆந்திரத்தின் சிறந்த பல எழுத்தாளர்கள் இன்று நாவல்களும் சிறுகதைகளும் எழுதுவதையே மேற்கொண்டுள்ளனர். பழம்பெரும் எழுத்தாளர்களான ஆத்ரேயா, டி.வி. நரசிம்மராஜு, பாலகும்மி பத்மராஜு, பிங்கடி நாகேந்திரராவ், பாமிடிப்பட்டி ராதாகிருஷ்ண போன்றவர்கள் திரைத்துறைக்குச் சென்றுவிட்ட காரணத்தால் இன்றைக்கு நல்ல புதிய நாடகங்கள் கிடைக்கவில்லை.

தனது சிறப்பான வாழ்வினை அநேகமாக இழந்து கொண்டிருக்கும் தெலுங்கு மேடையின் புனருத்தாரணம் தெலுங்கு நாடக ரசிகர்களின் பேராவல் மிக்க எதிர்நோக்கு. தென்னகம் முழுதும் செல்வாக்குடன் விளங்கி, அகில இந்தியப் பாராட்டையும் ஒரு நிலையில் பெற்ற தெலுங்கு நாடகங்கள், மாநில அரசு புதிய அரங்குகளை நிர்மாணித்தும், கலைஞர்களைப் பயிற்றுவித்தும் தொழில்முறை நாடகக் கலைஞர்களுக்கு அடிப்படையான தேவைகளை அளித்தும் ஆதரவு தந்தால்தான் புத்துயிரும் புது வாழ்வும் அடைய முடியும்.

தொழில்முறைக் கலைஞர்கள்தான் தெலுங்கு நாடகத்தின் உயர்ந்த மரபுகளைப் பேண முடியும் என்பது வரலாற்று உண்மை.

புதிய நாடகங்களை அறிமுகப்படுத்துவது, புதிய மேடை நுணுக்கங்களைக் கையாள்வது ஒருபுற மிருக்க, பழம்புகழ் பெற்ற நாடகங்களை வெளிக் கொண்டு வருவதும் மக்களுக்குத் தெலுங்கு நாடகத்தின் மீதுள்ள சுவையினைக் காக்க உதவும்.

—(ஆங்கில மூலத்தினின்று
தமிழாக்கம்: ஆ-ர்.)

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசு
தமிழ்நாடு அரசு

*** *** ***

எல்லா மாநிலங்கட்கும் வழிகாட்டும் வகையில்
திட்டட்டங்களை வகுப்பது தமிழ்நாடு அரசு

*** *** ***

குடிசை மாற்று வாரியமும் குடிநீர் வடிகால் வாரியமும்
அமைத்திட்ட அரசு தமிழ்நாடு அரசு

*** *** ***

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி திரட்டி சமுதாயப்
பிரச்னைக்கு தீர்வு காணும் அரசு
தமிழ்நாடு அரசு

*** *** ***

உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்ட அரசு

உழைக்கும் மக்களுக்கு நல்வாழ்வு நல்கும் அரசு

மாநிலத் திட்டக்குழு அமைத்த அரசு

மக்கள் பிரச்னைகளை

மனிதாபிமானத்துடன் நோக்கும் அரசு

தொடங்கும் திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறத்

துணையாக நின்றிடுவோம் !

அரசு குவிக்கும் வெற்றிக்காக

அயராது பாடுபடுவோம் !

வெளியீடு :

செய்தித் துறை, தமிழ் நாடு அரசு.

வற்றாதக் கடல் போலும், வாழி! ஊழி!

சந்தனத்தால் தரைமெழுகி ஆவின் பாலில்
தலை முழுகும் தமிழ் மகளிர் கருவில் வந்தீர்!
வந்தவிருந் தினை ஓம்பி அகமலர்ந்து
வருவிருந்தை எதிர்பார்க்கும், பண்பில் தோய்ந்தீர்!
நந்தமிழை அந்தமுறு பம்பாய் நாட்டில்
நயனம்போல் பாதுகாத்து வருகின்றீர்கள்!
சிந்தனைக்கோர் தேனூற்றாய், தென்றற் காற்றாய்,
செகம்புகழ் நம் தமிழ்ச் சங்க மரபு வெல்க!

"மாமதுரகவி"
முருகேசனார்.

ஆனைமுதல் எறும்புவரை மக்கள் ஈறாய்,
ஆண்டவனைக் காண்கின்ற திருமூ லர்தம்
ஞானதிரு மந்திரத்தை மனத்துள் வைத்து,
நாடோறும் போற்றுபவன் தமிழன் அன்றோ!
கானமரும் கவரியைப்போல் மானம் மிக்கான்!
கருதரிய தமிழன் என்றால் மிகையா காதே!
தேனுறையும் கமல மலர் மொய்க்கும் வண்டாய்
தினந்தோறும் மக்கள் மொய்க்கும் காட்சி கண்டேன்!



WITH COMPLIMENTS FROM

Crompton Greaves LIMITED



Grams : "READYSERVE" Tel: 372692

WITH BEST COMPLIMENTS FROM

RADIANT TRANSPORT SERVICE

TRANSPORT CONTRACTORS
&
TANK TRUCK FLEET OWNERS

Carriers of :
Molasses, Oils, Spirits, Petroleum Products, and Suppliers of water in Greater Bombay.

Contractors to :
All the leading Oil companies, Pharmaceutical concerns, and Industrial Organisations.

8-10, Dockyard Road,
Gunpowder 1st Cross Lane,
BOMBAY-10.

சங்கத்தை நிறுவினதால் அன்னை யானீர்!
சன்மார்க்கம் பரப்புவதால், தந்தை யானீர்!
இங்குற்றப் புலவர்களை ஆங்க ழைத்தே
இனியவர வேற்பீந்து கவுர வித்துத்
தங்கமெனப் போற்றுவதால், வள்ளல் ஆனீர்!
தன்மத்தைக் காப்பதனுல் மன்னன் ஆனீர்!
மங்காத முத்தமிழ்க் குயிரே ஊட்டி
வையத்து வாழ்வாங்கு தெய்வம் ஆனீர்!

நகர்நடுவே பழுத்துக்கனி குலுங்கு கின்ற
நல் ஆல்போல் திகழ்கின்றீர்! நமது சங்கம்
புகலரிய தாய்மொழிக்கே உண்மைக் காவல்!
புத்தகம் சூழ் வித்தகப் பல் கலாச்சாலை!
இகம்கவரும் தமிழ்த்தொண்டில் இமய உச்சி!
இனிய தமிழ்ப் புலவர்களை வழக்கம்போல
அகமகிழ ஆதரித்து மக்கள் நெஞ்ச
ஆலயத்தில் இடம்பெற்றீர், வாழ்க நன்றே!

வாழிய நும் தமிழ்த்தொண்டு! நாட்டுப்பற்று!
மங்காத கலையுள்ளம்! வையம் போற்ற
வாழியநும் தாயன்பு! நல்ல எண்ணம்!
வளர்க, நும் நூல் நிலையம்! வாய்மை! தூய்மை!
வாழிய நும் திரிகரணம்! மதிப்பு! வீரம்!
மாண்பு மிகு தனித்தியாகம்! பக்தி! ஞானம்!
வாழிய நும் உயிரொழுக்கம்! எழுத்து! பேச்சு!
வற்றாதக் கடல் போலும், வாழி! ஊழி!

CONSULT

TCI

THE TRAVEL EXPERTS

By air, by sea, by rail or road...wherever you go...TCI gives you complete service for both domestic and international travel.

From tickets, hotel reservations and foreign exchange formalities to passports, visas and insurance...TCI smoothes your way through the maze of travel procedures.

The next time you travel, **CONSULT TCI.**

Head Office:
TRAVEL CORPORATION (I) PVT. LTD.,
'Mon Repos', Arthur Bunder Road,
Colaba, Bombay 5. Phone: 213182/86

Branches:
Agra, Ahmedabad, Banaras, Calcutta, Cochin, Kanpur, Madras, New Delhi, Poona, Srinagar and foreign offices at Frankfurt, New York and Gangtok (Sikkim).

Interpub/TCI/9

PROCESSORS OF TEXTILES OF
CHOICED COLOURS, STYLES AND DESIGNS

CALICO DYEING & PRINTING MILLS (P) LTD.

Industrial Estate,
41-E, Dr. Ambedkar Road,
P.O. Box No. 6003,
Lalbaug, Bombay 12.

for

CADYTEX DYED AND PRINTED SATEENS, SHUNTUNGS, POPLINS, CAMBRICS, LAWNS, 2 x 2 VOILES AND COATED FABRICS.

THE HOME OF COLOURFUL CALICOES

Telephone Nos. 442561-62-63 — Gram : DYEPRINT

மனமேடை ஒவியங்கள்

ஆர். பி. ஐயர்

வாழ்ந்து முன்னேற கால ஓட்டத்தில் பின்னேக்கிக் காண்பது நல்லது; இது மனிதச் செயல்களில் எல்லாத் துறைகளுக் கும் பொருந்தும். நான்கு தலைமுறைகளுக்கு முன் தமிழ் நாடக மேடையைப் பற்றிய இனிய சிந்தனைகள் உள்ளத்திலே ஓர் ஏக்கக் கறையை ஏற்படுத்திவிடுகின்றன; ஆமாம், இனி நாம் தேனினும் இனிய தீங்குரல் மழையாய் ஒலிக்கும் அவ்விசை மேதைகள் மேடையில் நுழைந்தவாறே எழுப்பும் இனிய கானத்தை என்று கேட்கப் போகிறோம்!

அந்த நாட்கள் அமைதியான காலம். நேரத்தோடு மனிதன் போட்டி போட்டுக் கொண்டு ஓடாத பொழுது, எந்தத் தமிழ் நாடகமும் இரவு 9 மணிக்குத்தான் தொடங் கும். ஆற அமர காலை 3 மணி வரை நடை பெறும். புலன்களை எல்லாம் ஈர்க்கும் சங்கீத மாளுலும் பொறி தெறிக்கும் வசனங்களே யானுலும் ஆறு, ஏழு மணி நேர நிகழ்ச்சி என்பது அயர்வு தரும் ஒன்றுதான். இருந் தாலும் அந்தக் காலத்தில் வெலிங்டன் பிரபுவும், அவருடைய மனைவியும் பெருமை சேர் எஸ். ஜி. கிட்டப்பா நடித்த 'தசாவதாரம்' நாடகத்தைப் பார்க்க அத் துணை நேரமும் உட்கார்ந்திருந்தார்கள் தாமே!

வெலிங்டன் பிரபு அதுபோது தன்னுடைய பதவிக்கு உரிய பிரமாதமான ஆடை அலங்காரங்களுடன் வந்திருந்தார் என காலஞ்சென்ற வி. வி. சீனிவாச ஐயங்கார் (சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகவும் பின்னர் லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கில் எம். கே. தியாகராஜ பாகவதர் சார்பில் வழக்கறிஞராகவும் இருந்தவர்) கூறியது நினைவுக்கு வருகிறது. அப்பிரபுவின் மனைவியார் அவரைப் போலவே ஆடம்பரமான ஆடையும், வைர நெக்லேஸும் அணிந்துகொண்டு ஏதோ வானுலகத்திலிருந்து இழிந்து வந்த மங்கை போன்று விளங்கினர்களாம். வி. வி. எஸ். அவர்களே டீக்காக உடையணிவார். அவரைப்பற்றி சி. பி. ராமசாமி ஐயர் ஒரு தடவை கச்சிதமாகச் சொன்னர். "ஒரு வாரத்தில் ஏழு நாட்கள்தாம் உண்டு. ஆனல் வி. வி. எஸ். அவர்களிடமோ அணி வதற்குப் பதினேரு ஜதை காலடிகள் இருக் கும்" என்று.

வி. வி. எஸ் மேலான மரபு வழிப்பட்ட ரசிகர். அவர், இந்தியாவின் ஈடு இணையற்ற நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிப் புகழ்பெற்ற தீரர் சத்தியமூர்த்தி முதலியவர் களைக் கவர்ந்த சுகுண விலாஸ சபையோடு தொடர்பு கொண்டிருந்தார். நான் அமெச் சூர் நாடகத் துறையைப் பற்றிச் சொல்ல முற்படப் போவதில்லை. அப்படிச் சொல்லப் போனல் திருவனந்தபுரம் கல்லூரிப் பேராசிரியர் ஆர். சீனிவாசன் அவர்களைப் பற்றி விரிவாகக் கூறவேண்டும்.

எஸ். ஜி. கிட்டப்பா அவர்களைப் பற்றி பேச வருவோம். நந்தனர் நாடகம், கிட்டப்பா ஆதனூர் தொண்டனுகவும், கே. பி. சுந்த ராம்பாள் வேதியராகவும் நடித்து புகழடைந் தது. காந்தியடிகள் இந்த நாடகத்தை முழு தும் இருந்து பார்த்தது கிட்டப்பாவின் பெரும் பேறு. காந்திஜி, சுந்தராம்பாள் நந்தனிடம் பிழை மன்னிப்பு வேண்டி ஏழைப் பார்ப்பான் என்ற பாட்டைப் பாடியதைக் கேட்டு உருகியே போய்விட்டாராம்.

நான் சென்னை மாநிலக் கல்லூரி மாணவனுக இருந்தபோது கிட்டப்பாவோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் பெருமை கிடைத்தது. நான் அவருடைய பரம ரசிகன். அவர் நடிக்கும் நாடகத்தைப் பார்க்கத் தவறவே மாட்டேன். இவ்வளவு நாட்களுக்குப் பிறகும் கூட அவர் இசைத்து அமரத்துவம் பெற்றுவிட்ட பாடல்களான

Bridging the gap—



between India
and the rest of the world

Scindia Ships carry all types of Cargo to any of the world's major ports—
swiftly, securely and economically.

OVERSEAS SERVICES
India-Pakistan-U.K.-Continent
India-Poland
India-West Asia (Gulf)
India-U.S.S.R.
India-Pacific (Via East)
India-U.S.A.
(Atlantic & Gulf Ports)
India-Great Lakes-
Eastern Canada
India-Caribbean
India-Adriatic-
Eastern Mediterranean
India-U.A.R.
India-Red Sea
COASTAL SERVICES
India-Pakistan-Burma-Ceylon

SCINDIA
ESTD—1919

THE SCINDIA STEAM NAVIGATION CO., LTD.
Scindia House, Narottam Morarjee Marg,
Ballard Estate, Bombay-1.
Telephone: 268161 (12 lines) Telex: 2206
Central Bank Building,
33, Netaji Subhas Road, Calcutta-1.
Telephone: 225842 (8 lines) Telex: 305

AGENTS IN ALL PRINCIPAL PORTS OF THE WORLD

SISTA'S SSN 272 A

HERCULES, PHILLIPS, BSA
THREE WORLD RENOWNED BICYCLES

Made in India by

T. I. CYCLES OF INDIA

AMBATTUR,
MADRAS-53.

Proprietors :

TUBE INVESTMENTS OF INDIA LTD.
Madras-1.

தசரத ராஜகுமாரா, எவரடி காமீ சத்திய பாமா, பவழக் கொடியின் மீதிலாடை போன்றவைகளை நினைத்துப் பார்க்கும் போது இதய ஓட்டமே சற்று நின்று விடுகிறது.

யான் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டு நீண்ட சிறைத் தண்டனை பெற்ற பொழுது நான் இருந்த கண்ணனூர், வேலூர் சிறைகளுக்கு கிட்டப்பா பழங்களும் மற்ற பக்ஷணங்களும் அனுப்புவார். காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்குப் பின் நான் தண்டனைக் காலம் முடியுமுன்னரே விடுதலையடைந்த பொழுது கிட்டப்பா தன்னுடைய பெரும் நண்பர் அனந்தாச்சாரியாருடன் கூட செங்கோட்டை ரெயில்வே ஸ்டேஷனில் என்னை வரவேற்பதற்காக மாலையும் கையுமாகக் காத்திருந்தார் என்பதை நினைக்கும்பொழுது நெஞ்சம் முழுதும் அந்நினைவு நிறைந்து இனிக்கிறது.

கிட்டப்பாவின் இசை மேதையை விவரிக்கவே இயலாது. பாட ஆரம்பித்தால் அவர் குரல் நரம்புகளில் நின்று கலைவாணி நடம் பயில்வாள். அவருடைய ஸ்தாயை உயர்ந்தது இனிமையானது. எந்த ஸ்வர நிலையையும் மிகத் துல்லியமாகத் தொடக் கூடியது. எனக்குத் தெரிந்த வரையில் அவர் ஒருவர்தான் இசைக் கோலத்தின் வர்ண ஜாலங்களை யெல்லாம் வரைந்து காட்டக்கூடியவராக விளங்கினர். இன்றும் மிகத் தெளிவாக நினைவிருக்கிறது; அவர் ஏறக்குறைய அரை லட்சம் மக்கள் கூட்டத்திற்கு முன் "காந்தி லண்டன் சேர்ந்தார், கைகூப்பித் தொழுவீர்" என்ற பாடலைப் பாடியது. அதை அவர் ஏறக்குறைய இருபது தடவைகள் திரும்பித்திரும்பி பாடவேண்டி வந்தது. மக்களுக்கு அவரிடமிருந்து அந்தப் பாடலைக் கேட்டு அவ்வளவு கரைபுரண்ட உற்சாகம்.

கிட்டப்பா வைதிகப் பேர்வழி அல்ல. அவர் வாழ்க்கையில் உள்ள ரசமான விஷயங்களை அனுபவிப்பார். அளவுக்கு மீறிய மதுப் பழக்கத்தினல் இளம் வயதிலேயே காலமாகிவிட்டார். காலம் ஓடிவிட்டது. அவர் எந்த மனிதனும் திரும்பிவராத இடத்தை நாடிச் சென்றுவிட்டார். இருந்தாலும், இன்றும் அவரைப் பற்றி நினைக்கும் நோத்திலெல்லாம் உள்ளத்திலே துடிப்பும் ஏக்கப் பெருமூச்சும்தான் மிஞ்சுகின்றன.

அவருடைய துணைவியான கே. பி. சுந்தராம்பாள் அவர்களைப் பற்றி மிக உயர்வாக எழுதாமல் விடுவது கடினம். அவர் வாழ்க்கை முழுதும் காந்தியவாதியாகவே இருந்து வருபவர். அவருடைய "காந்தியோ பரம ஏழை, சந்நியாசி" எனும் பாடல் இன்றும் பசுமையாக என் நினைவில் நிற்கிறது. கே. பி. சுந்தராம்பாள் ஒருவர்தான் ஆண் வேடமிட்டு ஒரு முழுநீளத் திரைப் படத்தில் நடித்துள்ளார் என்பது ஓர் அபூர்வமான சான்று. அவர் சிறிது காலம் சென்னை மாநில மேலவை உறுப்பினராக இருந்தார் இன்னும் அவர் நம்மிடையே வாழ்வது மகிழ்ச்சியானது.

தமிழ் நாடக மேடையின் அற்புதக் கலைஞனை 'குயில்நாதம்' வேலு நாயரின் தேர்ந்தெடுப்பு, சுந்தராம்பாள். வேலுநாயரை அவருடைய கடைசி காலத்தில் சாரங்கதாராவில் நடித்ததைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுதும் அவர் பிரமாதமாக நடித்தார். இளமை கடந்த போதிலும் பாலாமணியின் நடிப்பை நான் கண்டு மகிழ்ந்துள்ளேன் தமிழ் நாடக மேடையின் மிகக் கவர்ச்சியான நடிகை பாலாமணி. அவருடைய ஒவ்வொரு அங்க அசைவும் கவர்ச்சி மிக்கது. ஆங்கில மேடையின் விவியன் ப்ரெய்த்வைட்டைப் போன்று அவர் ஒரு புகழ்பெற்ற நடிகை.

அந்தக் காலம் ஆண்கள் பெண்வேடமிட்டு நடித்த காலம். அவர்களுள் கே.எஸ். அனந்தநாராயணன் ஒப்பாரும் மிக்காரும் அற்றவராக விளங்கினர். அவரைப் பற்றிய செய்திகள் மிகமிக வியப்பானவை. பெண்களைப் போன்று உடையலங்காரம் செய்து கொண்டு அனந்தநாராயணன் திரு. எஸ். சீனுவாஸ ஐயங்கார் வீட்டு மஞ்சள் குங்கும வைபவத்திற்குச் சென்ருர் என்றும், அவரை யாருமே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை யென்றும், அவர், ஐயங்கார் அவர்களுடைய துணைவி

With the Compliments of

RICHARDSON & CRUDDAS, LTD.

STRUCTURAL, MECHANICAL & SANITARY

ENGINEERS

BOMBAY & MADRAS

R&C

for
presrile brand
tif moulding powders
and
m. f. moulding powders

Manufactured by

NUCHEM PLASTICS LTD.

54, Industrial Area,
Faridabad NIT.

Contact :
SRINIVAS BROTHERS

316, Neelam, 3rd Floor,
108, Worli Sea Face Road,
Worli,
Bombay-18 WB.

Phone : 377103

யும் பெருமைக்குரிய பாஷ்யம் ஐயங்காரின் புதல்வியுமான ரங்கநாயகிஅம்மாள் அவர்கள் முன் தன்னுடைய டோப்பாவை எடுத்து விட்டு வணங்கிய பொழுதுதான் தெரிய வந்தது என்ற பேச்சு உண்டு.

என்னுடைய இள மனத்தில் அந்தக் காலத்தில் அதி அற்புதமான திறமையினல் தங்கள் நினைவை ஆழப் பதித்துச் சென்ற பிற கலைஞர்களும் உண்டு. கே. எஸ். செல்லப்பா மேடையில் தோன்றும்பொழுதே உயர்வான நாடகப்பாணி துவங்கும். அவர் சிறந்த பாடகர்; பண்பட்ட நடிகரும் கூட. ரசிகர்களைச் சோர்வடையச் செய்யாமல் நீண்ட வசனங்களை அனுயாசமாகப் பொழிந்து தள்ளுவார். ஸ்திரி பார்ட் பரமேஸ்வர ஐயரை யார்தான் மறக்கமுடியும்? அவர் போதையில் இருந்தால் தவிர இனிய சொல்லும், எளிய சுபாவமும் கொண்டவராக இருப்பார். தன் சகாக்களை யெல்லாம் மீறி, தேவுடு ஐயர் அந்த நாட்களில் நாடக மேடையின் தனிப்பெருந் தலைவராக விளங்கினர். என்னுடைய நெருங்கிய நண்பர் திரு. சிதம்பரநாதன் பலவித காரணங்களால் புகழின் உச்சியை எட்ட முடியவில்லை.

தமிழ் மேடையின் ஹாஸ்ய நடிகர்கள் ஒரு தனி வர்க்கமாகவே விளங்கினர். பபூன் ஷண்முகம் மேடை வரலாற்றுப் புகழ் பெற்றவராகத் தன்னுடைய இளமைக் காலத்தில் விளங்கினர். இன்னும் ஜோக்கர் ராமுடு ஐயர் போன்றவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள். அப்போது தான் முன்னணிக்கு வந்துகொண்டிருந்த என். எஸ். கிருஷ்ணனைத் திரைத்துறை விழுங்கிவிட்டு அவர் மேடையில் தன்னுடைய முத்திரையைப் பதிக்கவிட முடியாதபடிச் செய்துவிட்டது.

என்னுடைய மனமேடையில் பல ஓவியங்கள் தோன்றுகின்றன அவை திரும்பி வராத நாட்கள். அந்த நாட்களில் புகழுடன் விளங்கிய எம். எஸ். தாமோதர ராவ், டி. பி ராஜலக்ஷ்மி, எஸ். ஆர். ஜானகி, எம். ஆர். ஜானகி முதலியவர்கள் என் நினைவலைகளில் தோன்றுகிருர்கள். இவர்களோடு நான் தொடர்பு கொண்டதுண்டு. இன்னும் சிலரைப்பற்றி, அவர்களுடைய ஒளி மிக்க நடிப்புத் திறனைப்பற்றி நான் கேள்விப்பட்டு மட்டுமே இருக்கிறேன் ஈடிணையில்லாத ஹார்மோனிய இசைக் கலைஞரும், அமரர் கிட்டப்பா அவர்களுடைய உடன் பிறப்புமான எஸ். ஜி. காசி ஐயரைப் பற்றி நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அடிக்கடி உறக்கம் இரவில் என் கண்ணிமைகளைத் தழுவிப் பொத்தும் பொழுது ஒளி மிகுந்த அந்தக் காலத்தின் ஆசை நினைவுகள் என்னை வட்டமிடுகின்றன. மலர்கள் எங்கனும் சிதறி, ஒளியிழந்து வெறிச்சோடியுள்ள பரந்த விருந்தரங்கிலே தன்னந்தனியளுக உலவும் ஒருவனைப் போல் நினைவுக் குமைச்சல்கள் நெஞ்சில் கனக்க, நான் நடக்கிறேன், நடந்துகொண்டே இருக்கிறேன்.

—(ஆங்கில மூலத்தினின்று
தமிழாக்கம்: ஆ-ர்.)



with the compliments of

Pfizer

PFIZER LIMITED

Pharmaceuticals — Animal Health Products — Pharmaceutical Chemicals — Agrochemicals — Nutritional Products

Bensons-I/PF-11

ஒன்றிடுவாயோ? ஒதுங்கிடுவாயோ?

என்றோ எங்கோ ஏனோ இயற்கை
    என்னையும் உன்னையும் எதிர்பட வைத்து
அன்றாடம் நம(து)ஆவலைக் கண்கள்
    அகல விரித்து அன்பை வளர்த்துக்
குன்றாக் காதலைக் கூறிட இயலாக்
    குமச்சலை நெஞ்சுள் இழைத்...து...ஓ!...அவை!
ஒன்றா இரண்டா ஒன்பது சுவையும்
    ஊட்டிய(து)இன்று நீ உணர்கின்றாயோ?

தன் அணி திரையும் சாளரக் கதவும்
    சற்றே விலக்கி முற்றே ஒளிந்து
உன் அணி முகத்தில் உவகையைத் தேடி
    உற்றவர் மற்றவர் கண்கள் மறைத்து
புன்னகை தவழப் பூமணம் கமழப்
    புறம் அறியாமல் மழலைபோல் நோக்க
என்னினைவாய் நீ இவண்வருவாய்என
    ஏங்கி இருந்ததை எண்ணுகின்றாயோ?

அந்த நினைவில் அடுக்கில் நிறைந்த
    அரிய பெரிய இலக்கிய நூல்களில்
இந்த இன்பம் எதிர்படுமா என
    எடுத்து ஆய்ந்து இன்மை கண்(டு)ஏங்கிச்
சொந்தக் கற்பனை தொகுத்துத் தனித்துத்
    தொடர்கதை ஆக்கி முடி(வு)அறியாமல்
சிந்தனைக் கடலுள் திக்(கு)அறியாது
    திகைத்(து) உனை நீயே பகைக்கின்றாயோ?

வெ. கலைக்கூத்தன்

Finance and other banking help for
Agriculture and small scale industries

With a net work of over 200 branches in India ALLAHABAD BANK offers you banking facilities of every description. The bank also undertakes collection of bills, arranges export finance and any other banking service you may require.

ALLAHABAD BANK

Established 1865

Head Office : 14, India Exchange Place, Calcutta-1.

BOMBAY BRANCHES :

Fort Branch	—	37, Apollo Street, Bombay-1.
Kalbadevi Branch		232, Kalbadevi Road, Bombay-2.
Dadar Branch	—	26, Tulsi Pipe Road, Bombay-28.
Parel Branch	—	Dr. Ambedkar Road, Bombay-12.
Kalina Branch	—	292, C.S.T. Road, Bombay-29.
Bandra Branch	—	53, Turner Road, Bombay-50.

J. M. BAXI & CO.

STEAMSHIP AGENTS & STEVEDORES
SERVING ALL INDIAN PORTS.

Head Office :

16, Bank Street, Fort, Bombay — 1 BR.

Phone : 253871 (8 lines) & 258381
Telex : 3439 BAXI BY
Cables : "BAXICO" at all places.

இன்ப வேட்கை இருக்கை கொள் ளாமல்
எழுந்து உலவி இவ் வெண்ணம் மறக்கத்
தன்பா (ல்)உணர்ச்சியின் தன்மையை மாற்றத்
தனித்துச் செவ்விதழ் கடித்து அடக்கி
முன்பாய்க் கிடக்கும் முடியாப் பணிகளை
முறைத்துப் பார்த்து முடிக்க ஒட் டாமல்
என்பா (ல்)ஏன் உள் இவை எழுந்தது என
இதயம் நொந்து தளர்ந்து விட் டாயோ?

மலரோ கனியோ எனத்தகு முகத்தில்
மகிழும் நாணப் புன்னகை மங்கி
உலர்பூங் கொடியாய் உதவாக் கனியாய்
உவப் பூ விழிகளில் உகு நீர் பெருக்கி
கலவாக் கயமை கலந்த இவ் வுலகக்
கட்டுப் பாடுகள் கண்டு நகைத்து
விலகாச் சினத்தின் விரக்தியால் பாழும்
விலக்கை நினைத்து வெதும்புகின் றாயோ?

இளமைத் துடிப்பு இருமடங் (கு)ஆனதில்
இதயத் துடிப்பு என்மடங் (கு)ஆகி
அள(வு)எழில் மூச்சும் அரும்புய லாகி
அடங்கிட இயலாத் தவிப்பினுள் சிக்கிக்
கள(வு)எனும் இச்சையின் கடைசியைத் தொட்டுக்
கனிந்த பழ(ம்)என மெத்தையில் விழுந்து
வளையணி மென்கரம் தலையணை இறுக்க
வடிகண் ணீ(ர்)அதற் (கு)ஊட்டுகின் றாயோ?

நான்ஏன் பிறந்தேன்! நத்திய உன்னை
நாடிட முடியா நடுச்சிறை வாடவோ?
நீஏன் பிறந்தாய்! நினைக்க இனிக்கும்
நீள்சுவைப் பாக்கள் வடிக்கும் கவிஞனாய்?
நாம்ஏன் கண்டு நல்லுளம் மாற்றினம்!
நவில்மொழி அற்று நலிந்து சாகவோ?
ஊன்ஏன்! உயிர்ஏன்? உட(ல்)எழில் வீண்என
உயிர்விட முயன்றுத விர்த்துகின் றாயோ?

ON THIS PAGE
WE COULD HAVE TOLD YOU
ALL ABOUT DELICIOUS
HIMA FOODS...

...but, on this occasion,
modesty is the best policy.

HINDUSTAN LEVER

Lintas-HLL 88-7-53

With Best Compliments from

NATIONAL CHIT FUNDS (REGD.)

271, Kamal Deep, Opp. Sion Hospital
Nurse's Quarters, Sion West, Bombay-22.

ESTD. 1966

CONDUCTING MONTHLY AUCTION CHITS

DENOMINATIONS OF CHITS

Class	Total No. of Tickets	Value of Each Ticket	Total Capital
	20 MONTHS DURATION		
STC	20	Rs. 50/-	Rs. 1000/-
STB	20	Rs. 100/-	Rs. 2000/-
	30 MONTHS DURATION		
LTA	30	Rs. 100/-	Rs. 3000/-
	40 MONTHS DURATION		
LTE	40	Rs. 250/-	Rs. 10000/-
LTG	40	Rs. 125/.	Rs. 5000/-
LTB	40	Rs. 50/-	Rs. 2000/-
LTF	40	Rs. 25/-	Rs. 1000/-

FOR DETAILS CONTACT —

Working Hours : 9-00 A.M. to 10-30 A.M.
Week days : 4-30 P.M. to 8-00 P.M.
Sundays : 10-00 A.M. to 2-30 P.M.

MONDAY HOLIDAY

BETTER SERVICE IS OUR MOTTO

வான்மதி ஒளியை வெளவிய மேகம்
வைகறை இருளென வழங்(கு)ஒளி தன்னில்
தான் மதி கலங்கித் தனிமையி(ல்) உழன்று
தன்மனம் இடுவரை தழுவா நினைவில்
ஏன்விதி இங்(கு)எனை எதிர்க்கிற தே என
எல்லைஇல் லாதஓர் இறுதியை வெறித்து
மான்சதி வலையுள் மருள்வது போல
மார்க்கமும் தேடிம யங்குகின் றுயோ ?

உன்னரும் நறுமணத் தனியறை இருந்து
உள்மன ரகசியம் முழுதையும் மறைத்து
என்னரும் நினைவில் இன்பம் நுகர்ந்து
ஏக்கம் நிறைந்(த) ஒரு கனவில் தவழ்ந்து
நன்னரும் செந்தமிழ்க் கீதம் முனங்கி
நாதசு கம்தரு போதைம யக்கையில்
உன்னரும் அறையுள் நான்எதிர் நின்றால்
ஒன்றிடுவாயோ !? ஒதுங்கிடுவாயோ !?

(கவிஞர் சயிஸ்ராமி கெயிஃப் அவர்கள்
உருதுக் கவிதையின் தமிழ் வடிவம்)





Today, we are a socio-economic institution, playing our role in achieving economic independence to our millions.

We do many things besides dealing with money. Our over 900 Branches function as co-extensions of people's aspirations for better living. We labour at farms and factories; we work at ports to earn foreign exchange for the country; we encourage higher education and technical mastery. In all these varied fields, we know that money is not everything. And this makes Central a different bank.

Join us at Central in this nation-building activity.

CENTRAL BANK OF INDIA

HEAD OFFICE: MAHATMA GANDHI ROAD, BOMBAY-1

With Best Compliments

from

SPECIAL STEELS LTD.

Manufacturers of

HIGH CARBON, MEDIUM CARBON, LOW CARBON, ALLOY STEEL, STAINLESS STEEL ETC.

Regd. Office & Factory :
Mouje Magathane,
Dattapara Road,
Borivli (East),
Bombay-66.
Phone : 662421
Grams : DRAWN WIRES
Telex : 2652

City Office :
New India Centre,
17, Cooperage Road.
Bombay-1.
Phone : 214464/66
Grams : DRAWN WIRES
Telex : 3523/4

"கிளைமாக்ஸ் ஸீன்"

பூர்ணம் விசுவநாதன்

எனக்கு எந்த நாடகத்திலும் கடைசிக் காட்சி பற்றித்தான்—அதாவது 'கிளைமாக்ஸ் ஸீன்' என்று சொல்லுகிறார்களே, அதைப் பற்றித்தான்—எப்போதும் கவலை. அந்தக் காட்சி ஒழுங்காயில்லாமல் நாடகத்தின் மற்ற காட்சிகளனைத்தும் அற்புதமாய் அமைந்திருந்தாலும் பிரயோசனமில்லை. மற்ற காட்சிகள் கொஞ்சம் முன்னே பின்னே அமைந்து, 'கிளைமாக்ஸ்' காட்சி நல்லபடியாக வாய்த்துவிட்டால், முந்தைய காட்சிகளின் குறைகளை மன்னித்து மறக்கக்கூட ரசிகர்கள் தயாராக இருப்பார்கள்.

ஆனால், நாடகம் நடத்துவோரின் அனுபவம் என்ன? ஒத்திகை நாட்களிலெல்லாம் தினமும் முதற் காட்சியில் ஆரம்பித்து, முக்கால் தூரம் முன்னேறுவார்களே தவிர, 'கிளைமாக்ஸ்' காட்சியைக் கடைசி வரை சரிவரக் கவனிக்காமலே விட்டுவிடுவார்கள். நாடகத்துக்கு இரண்டு நாள் இருக்கும் போது 'அய்யா அம்மா' என்று அடித்துக் கொண்டு, அரையும் குறையுமாக அந்தக் காட்சியை ஒத்திகை பார்த்து விட்டு, அநேகமாக ஒத்திகை மாதிரியே முதல் நாள் நாடகத்தை நடத்தி முடித்து விடுவது வழக்கமாயிருக்கிறது. "முதல்நாள் நாடகம்தான் எங்களுக்கு 'ட்ரெஸ் ரிஹேர்ஸல்' மாதிரி" என்று பெருமையுடன் சொல்லிக்கொள்பவர்கள் கூட இருக்கிறார்கள்....

'பக்த மார்க்கண்டேயர்' நாடகத்தில் 'கிளைமாக்ஸ்' காட்சிதான் எல்லோருக்கும் தெரியுமே! பல ஆண்டுகளுக்கு முன் நாங்கள் அந்த நாடகத்தை நடத்தியபோது 'கிளைமாக்ஸ்' காட்சி எப்படி அமைந்தது என்பதைச் சொல்வதற்குத்தான் இத்தனை பீடிகையும்:

மேடையில் பாதியை அடைத்துக் கொண்டு ஓர் அட்டைச் சிவலிங்கம் காட்சி தருகிறது. திரை உயரும்போது சிவலிங்கம் மட்டும்தான் தெரிகிறது. திரைக்குப் பின்னாலிருந்து கோயில் மணிச் சத்தம் கேட்க வேண்டும்; ஆனால், அந்தச் சமயத்துக்குக் கிடைத்த ஒருத்தனை மணியடிக்கச் சொன்னதில் அவன் கோயில் மணியை ஸ்கூல் மணி மாதிரி அடித்துக்கொண்டிருக்கிறான். கோயிலின் சூழ்நிலை வேண்டுமென்பதற்காக இயக்குனர், அந்தச் சமயத்துக்குக் கிடைத்த இன்னொரு ஆளை சாம்பிராணிப் புகை போடச் சொல்லிவிட்டார். அவன் தாறுமாறாகச் சாம்பிராணியை அள்ளி வீசி மேடையை ஒரேயடியாகப் புகை மூட்டத்தில் மூழ்கடித்து, ஈர விறகு மூலம் அவஸ்தைப்படும் சமையலறையாக மாற்றிவிட்டான். எல்லோரும் கண்ணைச் சுருக்கிக் கொண்டதுடன், நடுநடுவே மூக்கை உறிஞ்சவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இதோ, மார்க்கண்டேயன் யமனுக்குப் பயந்து கொண்டு மேடைக்குள் ஓடி வருகிறானே, அவனும் மூக்கை உறிஞ்சிக்கொண்டுதான் வருகிறான். மேடைக்கு வந்து சேரும் வரைதான் அவனுக்குக் கஷ்டம்; வந்தபின் சிவலிங்கத்துக்கருகில் சென்று கண்ணை மூடிக்கொண்டு தன் வசனத்தைக் கதற ஆரம்பித்துவிட்டான். அதனால் புகை ஒன்றும் செய்ய முடியவில்லை இயக்குனருக்கு மனோ தர்மம் ஜாஸ்தி. மார்க்கண்டேயன் யமனால் விரட்டப்பட்டுப் பாய்ந்து வந்து சிவலிங்கத்தைத் தழுவிக் கொள்வதாகத்தானே கதை? ஆனால், எங்கள் இயக்குனருக்கு, நடப்பிலுள்ள சில கஷ்டங்கள் நன்கு தெரியுமே! மேடையில் வைக்கக்கூடியது அட்டைச் சிவலிங்கம் தான்; அதை அன்றைய மார்க்கண்டேயன் வேடதாரியான குண்டுப் பையன் வந்து தழுவி வேரோடு சாய்ப்பதை அவர் விரும்பு

With Best Compliments

from

M. R. JADHAV & SONS

BHANSINGHAJI ROAD,

KOLHAPUR.

Distributors for :

I.C.I. (INDIA) LTD.

CADBURY FRY (PVT) LTD.

BRITTANIA BISCUIT CO. LTD.

KISSAN PRODUCTS LTD.

வாரா? ஆகையால், கதையைக் கொஞ்சம் மாற்றி, மார்க்கண்டன் சிவலிங்கத்தருகே வந்து நின்று கதறுவது போல் அமைத்து விட்டார்.

அடுத்தாற்போல் ஆவேசத்துடன் யமன் பிரவேசிக்கிறார், ஒரு கோடையிடிப் பாட்டுடன். இந்தப் பாட்டுக்கு ஆரம்பம் எது, முடிவு எது என்பது மற்ற கதா பாத்திரங்களில் யாருக்கும் தெரியாது; ஏனென்றால் இதற்கான ஒத்திகை ம்யூஸிக் டைரக்டர் வீட்டில் தனியாக நடந்ததே யொழிய எல்லோர் முன்னிலையிலும் நடக்க வில்லை. மார்க்கண்டன் பாடு தேவலை; யமன் பாடி முடியும் வரை கண்மூடி நிற்க லாம்; நின்றுகொண்டிருக்கிறான் யமனுக் குப் பாட்டு ஒத்திகையும் அரைகுறையாகத் தான் நடந்தது என்பதால் அவர் அடாணு ராகத்துக்குள் வேறு சில 'ஐந்தாம்படை' ராகங்கள் புகுந்து விட்டது தெரியாமல் கதறிக்கொண்டிருக்கிறார். ஆர்க்கெஸ்ட்ரா' அவர் இழுத்த பக்கமெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது. நடுவில், யமனுக்குப் பாட்டின் வார்த்தைகள் மறந்துவிடவே, 'கப்'பென்று நிறுத்திவிடுகிறார். என்னவோ ஏதோ என்று பயந்து கொண்டு ஆர்க்கெஸ்ட்ராவும் திடீர் பிரேக் போட்டு அடங்கி விடுகிறது.

பாட்டு நின்றவுடன் மார்க்கண்டன் சிவலிங்கத்தை நோக்கிப் பாயவேண்டும் என்பது இயக்குனரின் கட்டளையாகையால், அம்பி சமர்த்தாக முன்னே பாய்கிறான். அம்பி பாய்வதைப் பார்த்தவுடன், சீன்காரர் களில் ஒருவன் அதிர்வேட்டுப் போட வேண்டும் என்பதும், அந்தக் கணமே சீன்காரர்களில் இன்னொருவன் சிவலிங்கத் தைப் பிளக்கும் கயிறுகளை விடுவிக்க வேண்டும் என்பதும் ஏற்பாடு அதிர் வேட்டுக் குழாயில் போட்டு வைத்திருக்கும் வெடிமருந்தில் என்ன கோளாறோ தெரிய வில்லை. சீன்காரன் ஓங்கியடித்தும் வெடிக்க வில்லை ஆனால், அவனையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மற்ற சீன்காரன், தன்னையறியாமலே சிவலிங்கக் கயிற்றை விடுவித்துவிடுகிறான்.

நாடகத்தை ஒரேயடியாக உச்ச கட்டத் துக்குக் கொண்டுபோக வேண்டுமென்பதற் காக இயக்குனர், சிவலிங்கம் பிளக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்திருக்கிறாரே! சும்மாத்தானா?

லிங்கம் அமைதியாகப் பிளக்கிறது அதற்குப் பின்னால் சபையினர் ஓர் அசாதாரணக் காட்சியை— காணக் கிடைக் காத காட்சியைக்—காண்கிறார்கள். லிங்கம் நன்றாகவே பிளந்து விட்டதால் அந்தக் காட்சி தெளிவாகத் தெரிகிறது பின்னால் சிவபெருமான் திரிசூலத்தை மடியில் சாய்த்து வைத்தவாறு 'குத்துவிட்டு' உட்கார்ந்திருக் கிறார். அவரது கண்களிரண்டும் மூடியிருக் கின்றன; கைகளிரண்டையும் தோள்மட்டத் துக்கு உயர்த்தி, சுட்டு விரல்களால் இரு காதுகளையும் மூடியிருக்கிறார். கண்கள் மூடி யிருப்பது சாம்பிராணி புகைக்குப் பயந்து, காது மூடியிருப்பது, அதிர்வேட்டுச் சத்தத் துக்குப் பயந்து. அவருக்கும் தெரியும், யமனுடைய பாட்டு நின்றதும் அதிர்வேட்டு வெடிக்கும் என்று.

சபையோருக்கு இது எதிர்பாராத நகைச்சுவை விருந்து. வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். சிவபெருமானின் சுட்டுவிரல் கள் கனமானவையாகையால் சபையோர் சிரிப்பது அவர் காதில் விழவில்லை. திரை மறைவிலிருந்து இயக்குனர் கதறும் கதற லும் அவர் காதில் விழவில்லை என்பது நாடகத்தின் சோகம் மிக்க அம்சம். "பாவி, எழுந்திருந்து யமனைக் கோபித்துக்கொள்; மானத்தை வாங்காதே" என்று அலறுகிறார் இயக்குனர். ஊஹூம்! சிவபெருமான் காதில் வாங்கிக்கொண்டால்தானே? கடைசி யில் இயக்குனர் பொறுமை இழந்து, கீழே கிடந்த பொடிக் கற்களை எடுத்துச் சிவன் மேல் வீசுகிறார். இயக்குனருக்கு குறி பார்த் துக் கல்லெறிந்து பழக்கமில்லை. முதலாவது கல் மார்க்கண்டனின் தொண்டைக்குழியின்



**To create
a good impression
use West Coast Paper
for writing
printing
packaging
and many other uses**

WEST COAST PAPER
Shreeniwas House, Waudby Road, Bombay 1

IF YOU ARE INDUSTRIALIST TRADERS — THEN

YOU MUST NEED FINANCIAL
ARRANGEMENT

PLEASE CONTACT US :

DHURMAL BAJAJ SONS

(FINANCE & BANK BROKER)

JAI HIND BUILDING NO. 1,
2ND FLOOR, BHULESHWAR,
BOMBAY-2. (BR).

Grams : 'SNEHSARIT' Tel. N. : 31406

மேல் விழுகிறது; சிவலிங்கத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தவன் சட்டென நின்று பக்கவாட்டில் பார்க்கிறான். இயக்குனர், கல் தவறி விழுந்துவிட்டது என்பதை ஜாடையாகவே சொல்லி அவனிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டுவிட்டு இரண்டாவது கல்லைச் சிவபெருமானின் மேலேயே எறிந்து விடுகிறார். ஆனால், இந்தத் தடவை சிவனுடைய சடைமுடிமேல் விழுகிறது; அதனால் அது சிவனுக்கு உரைக்கவில்லை. "முயற்சி திருவினையாக்கும்; பயிற்சி பக்குவமாக்கும்" என்னும் முதுமொழியை அறிந்துள்ள இயக்குனர், மூன்றாவது கல்லை நேரடியாகவே சிவனின் முதுகில் படும்படி வீசிவிடுகிறார்.

இதற்கப்புறம் சம்பவங்கள் வேகமாகத் தானே போக வேண்டும்? திடுக்கிட்டு, அதே சமயம் சுட்டுவிரல்களைக் காதுகளுக்குள்ளிருந்து 'கார்க்' எடுப்பது போல் எடுத்து விட்டுத் திரும்பும் சிவபெருமானுக்கு இயக்குனர் ஜாடையால் சிவலிங்கத்தைக் காட்டிவிட்டு, கூடவே தணிந்த குரலில், "கூர் கெட்டவனே, லிங்கம் பிளந்தாயிற்று; எழுந்திருந்து உன் கட்டைக் குரலில் யமனைச் சபித்துத் தொலை" என்று அதட்டுகிறார்.

சிவபெருமானாக வந்திருப்பவருக்கு, விஷயத்தை 'க்விக்'காகப் புரிந்து கொள்ளும் சாமர்த்தியம் உண்டு. புரிந்து கொண்டு விட்டார். ஆனால், தான் புரிந்துகொண்டு விட்டதை சபையோருக்கெல்லாம் சொல்ல வேண்டுமா? "ஐயையோ, நான் வேட்டுச் சத்தத்துக்காகக் காத்திருந்ததில் சிவலிங்கம் பிளந்ததைக் கவனிக்கவே இல்லையே" என்று அவர் அங்கலாய்க்கும் போது, லிங்கத்துக்குப் பக்கத்தில் உள்ள 'மைக்' வழியாக அந்த வசனம் சபையோர் காதுக்கு எட்டுகிறது. அவர்களால் வாய்விட்டுச் சிரிக்காமலிருக்க முடியுமா?

இப்போது திடீரென்று யமனுக்கு பாட்டின் மறந்து போன சாகித்தியம் நினைவுக்கு வரவே, அந்த நடிகர் சங்கீதப் பிரியராதலால், எவ்வித முன்னறிவிப்புமின்றித் தொடர்ந்து பாட ஆரம்பித்து விடுகிறார். உடனே 'ஆர்க்கெஸ்ட்ரா'வும் கம்பீரமாக அவருக்கு பக்கபலம் கொடுக்க முற்படுகிறது. சிவபெருமான் திணறிப் போய், முன்பு டைரக்டர் நின்ற இலக்கை நோக்குகிறார். ஆனால் டைரக்டருக்கு இப்போது புது 'ப்ராப்ளம்' வந்துவிட்டதால், அவர் யமனுக்கு நேராகப் போய் நின்று கொண்டு அந்த நடிகருடைய பாட்டை நிறுத்துவதற்காகப் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்?. சிவபெருமான் நல்ல சமயோசித புத்தியுள்ளவர். சட்டென நீரில் முக்குளிப்பது போல், பிளந்த சிவலிங்கத்துக்குப் பின்னால் மறுபடி உட்கார்ந்து விடுகிறார். லிங்கம் மட்டும் பிளந்தே இருப்பதால் சபையோர் இப்போது சிவபெருமானை உட்கார்ந்த நிலையில் தரிசித்து மகிழ்கிறார்கள்.

இயக்குனருக்கு வெற்றி கிட்டுகிறது இறுதியில். அவர் முதலில் சைகை காட்டி 'ஆர்க்கெஸ்ட்ரா'வின் வாயை அடைக்கவே, யமன் தயக்கத்துடன் பாட்டை நிறுத்தி விடுகிறார். உடனே இயக்குனர், யமனுக்கு மட்டும் கேட்கும் படியாக, "எருமை ஜன்மமே, உன் ஊளையை யார் கேட்டது? வீசு பாசக் கயிற்றை" என்று கரகரக்கிறார். யமன் சற்று தூரத்திலிருந்தவாறே "உன்னை விட்டேனா பார்" என்று சொல்லிக் கயிற்றைத் தலைக்குமேல் சுழற்ற ஆரம்பிக்கிறார்; உடனே இயக்குனர் மறுபடி அடித்தொண்டையில் "டேய் மரக்கட்டை, மார்க்கண்டேயனுக்கு அருகில் சென்று கயிற்றை வீசு. உன் உற்சாகத்தில் சிவன் கழுத்தில் சுருக்கிட்டு விடாதே" என்று எச்சரிக்கிறார்.

யமன் பாசக் கயிற்றை வீசி விட்டார். நான்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே, சிவபெருமான் எதையும் 'க்விக்'காகப் புரிந்துகொள்ளக்கூடியவர் என்று.

Messrs. T. G. MERCHANT & CO. (Bond)

Ship Stores Suppliers viz. Beer, Whisky, Cigaretts and Alchoholic Beverages from Bond.

184, Nishanpada Road, Bombay-9.

TEL. : Office : 332449 Resi. : 332202

HEINKEN'S DUTCH DELUXE BEER IN PINTS
FAXE DANISH BEER IN PINTS
JOHHNIE WALKER RED LABLE SCOTCH-WHISKY
BLACK & WHITE SCOTCH WHISKY
VAT 69 SCOTCH WHISKY
DEWAR'S WHITE LABLE SCOTCH WHISKY
JOHN HAIG GOLD LABLE SCOTCH WHISKY
KING OF KINGS DELUXE SCOTCH WHISKY
BLACK DOG DELUXE SCOTCH WHISKY
CHIVAS REGAL 12 YEAR OLD SCOTCH-WHISKY
GORDEN'S DRY GIN
MARTINI SWEET VERMOUTH
NOILY PRAT VERMOUTH
HENESSY COGNAC BRANDY
VIVIENNE FRENCH BRANDY
BENSONS & HEDGES ENGLISH CIGARETTES
INDIA KINGS FILTER KING SIZE CIGARETTES

With Best Compliments
from

PANNA FERTILIZERS

7/8, Rajkot Gymkhana Bldg.,

P. B. No 201,

Rajkot.

அதுவும், பிளந்த லிங்கத்திற்குப் பின்னாலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுவிட்டவராயிற்றே! ஆவேசத்துடன் இறுதியாக எழுந்திருக்கிறார். திரிசூலத்தைக் கையிலேந்தியவாறு தன் வசனத்தைச் சொன்னதில் நடுவில் இரண்டு வாக்கியம் தான் விட்டுப் போய்விட்டது. கடைசி வாக்கியம் காதில் விழுந்தவுடன் யமன் சுருண்டு விழுகிறார் ...... மார்க்கண்டனுக்கு விடுதலை ... ஜய மங்களம் — நித்திய சுப மங்களம். திரை விழுகிறது.

திரையோடு கூடவே, திரை மறைவில் இயக்குனரும் கீழே விழுகிறார். ஏன் தெரியுமா? சிவனார் சொல்ல விட்டுப்போன இரண்டு வாக்கியங்களில் தான், "மார்க்கண்டேயன் என்றும் பதினாறாக வாழ்வான்" என்ற அறிவிப்பு அடங்கியிருந்தது!......

அதனால்தான் சொல்கிறேன்; எக்காரணம் கொண்டும் 'கிளைமாக்ஸ்' ஸீன் ஒத்திகையை ஒத்திப் போடாதீர்கள். *

With the Best Compliments

of

AUTO SERVICES (INDIA)

26/28 Manick Bhavan
Tribhuvan Road,
Bombay-4.

**SPECIALISTS IN AUTOMOBILE TYRES
TUBES AND ACCESSORIES.**

With Best Compliments of

ADVANI-OERLIKON

Welders to the nation

'FOR THE FINEST WELDING

ELECTRODES, FLUXES AND

EQUIPMENT'

ADVANI-OERLIKON PRIVATE LIMITED

Radia House, 6 Rampart Row, Fort, BOMBAY-1.

Area Offices at :

Bombay, Calcutta, New Delhi, Raipur & Madras.

Plants at :

Bombay, Poona, Raipur, Madras & Visakapatnam

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

நாடக இசை விழா - 1971

நேஷனல் தியேட்டர்ஸ் ஆர். எஸ். மனோகரின்

23-10-71 சனி
இரவு 8.00 மணி — **சூரபத்மன்**

24-10-71 ஞாயிறு
மாலை 6.30 மணி — **சிசுபாலன்**

25-10-71 திங்கள்
இரவு 8.00 மணி — **சாணக்கிய சபதம்**

★

26-10-71
செவ்வாய்
இரவு 8.00 மணி — 'வீணையோகி'
எஸ். பாலசந்தர்
காரைக்குடி மணி—மிருதங்கம்

★

இடம் : ஷண்முகானந்தா கலை அரங்கு.

With

Compliments

from

BRADY & MORRIS

ENGINEERING CO. LTD.

BRADY HOUSE,

12/14, VEER NARIMAN ROAD,

FORT, BOMBAY-1.

உனக்குப் பிடித்தது

தெங்கிள நீருடன் பாலும்
        தேனும் சருக்கரைப் பாகும்
செங்கனிகள் பிழிச் சாறும்
        சேர்த்திளஞ் சூட்டினி லிட்டுப்
பொங்கையில் ஏலம் பொடித்துப்
        போட்டு வடித்தெடுத் திட்டோர்
தங்கக் குடத்தினில் தானே
        தாங்கியுன் கோயில் புகுந்து

அன்றுநின் சன்னிதி முன்னே
        அன்பொடு வைத்து வணங்கி
நின்று நிவேதனம் செய்ய
        நீயதைத் தீண்ட மறுத்துச்
சென்றனை செல்லவும் குன்றிச்
        சிந்தை துயரிடை நொந்து
குன்றிட முன்றிலில் குந்திக்
        கூனிக் குறுகிக் கிடந்தேன்

சிந்தை குழம்பிடக் கண்டு
        சென்றவள் மீளவும் என்பால்
வந்தொரு மூலையில் கோயில்
        வாயிலில் நின்றிடு மென்கண்
சந்தடி யின்றி வடிக்கும்
        சஞ்சல நீரைத் துடைத்துச்
செந்தமிழ் பாலெடுத் தூட்டிச்
        சேர்ந்தெனைக் கூடி மகிழ்ந்தாய்!

"கலைவாணன்"

With Best Compliments
from

K. WASUDEV

FLAT NO. 12, BUILDING NO. 10-C,
NITYANAND BAUG HOUSING SOCIETY,
MAHUL ROAD, BOMBAY-74.

With Best Compliments
from

GOODWILL TRADING CO.

34, NAGDEVI STREET,
BOMBAY-3.

பண்ணொலி காட்டி எப்போதும்
பாடும் அலைக்கட லூடே
விண்ணிருள் மத்தியில் தோன்றும்
வெள்ளியைப் போல விளைந்து
கண்ணைக் கவர்ந்திடக் காந்திக்
கள்ளநகை செய்யும் முத்தை
மண்ணிற் கொணர்ந்து பொன்னூரில்
மாலை தொடுத்து முடித்து

பட்டு ரவிக்கை யொன்றிட்டுப்
பார்ப்பவர் கண்ணை மறைக்கக்
கட்டினும் மீறி முடிச்சை
வெட்டிட முட்டும் நின்மார்பில்
இட்டெழில் கண்டு களிக்க
எண்ணிக் கொணரவும் சீறித்
தட்டிப் பிடுங்கி என்கண்முன்
எட்டி உதைத்து நடந்தாய்

ஏய்ப்புற்ற நெஞ்சம் இடிந்து
இச்செயல் கண்டு மயங்கிப்
போய்ப்புற வாசலில் நின்று
பொம்மிக் கிடக்கின்ற போது
தீய்ப்புற்ற இன்பம் திரும்ப
தேவிநின் செங்கரம் தீண்டும்
வாய்ப்புற்று மேனி சிலிர்த்தேன்
வான்சுகம் மண்மிசைக் கண்டேன் !

கற்பனைக் கண்களுக் கெட்டாக்
காட்சிகள் நான்கு புறத்தும்
அற்புதச் சிற்பங் குவிக்கும்
ஆலய மொன்றமைத் துன்னை
பற்பலர் கண்டு வியக்கப்
பத்தியுடன் தொழ வைத்தேன்
நிற்பதற்கும் மன மின்றி
நீ அதை விட்டெழுந் தோட

With
Best
Compliments
from

MYSORE FERTILIZER CO.

6, LINGHI CHETTY STREET,
MADRAS-1.

WITH BEST COMPLIMENTS FROM

BOMBAY CARBON DIOXIDE GAS CORPORATION

CHEMBUR,
BOMBAY-74 AS.

நெஞ்சு குமுறிடக் கண்கள்
    நீர்த்துளி சிந்தப் புலன்கள்
அஞ்சும் அயர்ந்திட வீழ்ந்தல்
    வாலய முன்றிலில் நாயேன்
துஞ்சிக் கிடப்பதைக் காணத்
    தூரத்தில் சென்றவள் மீண்டும்
பஞ்சடி பேர்த்து விரைந்தேன்
    பக்கத்தில் வந்து குனிந்து

பூங்கரந் தொட்டெடுத் தன்பாய்ப்
    புல்லவும் பூரிப் படைந்துன்
தாங்கலில் மெல்ல நிமிர்ந்தோர்
    தண்டமிழ்ப் பாவல னானேன்
நீங்குவ தேதினி மேல்நம்
    நெஞ்சங் கலந்த பின்னாமோ ?
பாங்கி ! என்ஆசைக் கவிதா !
    பாகம் பிரிந்தக லாதோய் !

MAHINDRA UGINE STEEL COMPANY LTD. (MUSCOSTEEL)

Manufacturers of

Tool, Alloy & Special Steels

ROLLED PRODUCTS :
Round-cornered Square Billets * Rounds * Squares * Hexagons * Flats
* FORGED PRODUCTS
Rounds * Squares
* CATEGORIES :
Special carbon steels * Alloy Constructional and Ball Bearing Steels * Free-cutting steels * Spring steels * Boron Steels, conforming to various Indian and International Standards.
MUSCO offers you a Special Service — its expert metallurgists are available to give any information required on heat treatment processes or in selecting grades for specific end uses.

Registered Office :
Shree Niketan
Shiv Sagar Estate
Dr. Annie Besant Road
Worli, Bombay-18 (WB).

Enquiries to Selling Agents :
MAHINDRA & MAHINDRA LIMITED
Bombay — Calcutta — Madras — New Delhi.

With

Compliments

from

BABULAL BUBNA & COMPANY

339/41 KALBADEVI ROAD,

BOMBAY-2.

MEK SLOTTED ANGLE

FOR

SPACE SAVING RACKS

Product of

MEK ENGINEERING WORKS PVT. LTD.

250 Sant Tukaram Road,

Bombay-9 BR.

Tel. : 322369, 323665.

வீணை யோகம்

கலா சிகாமணி, ராகபிரும்மம், வீணாவாதன தத்வக்ஞ, நாதயோகி, வைணிக சரபம், வைணிக ரத்னம், நாத பிரும்மம், வீணா ப்ரவீண, வீணா வரப்பிரசாதி, வைணிக வித்தியாபதி, வீணா கலாபூஷணம், நாத வித்யா சிரோமணி, நாத சுவானுபவ யோகி, வீணா மார்த்தாண்ட, யாழிசை வல்லுநர், வீணா சக்கரவர்த்தி, வைணிக விசாரத சார்வபௌம, வைணிக கலாநிதி, அபிநவ நாரத, வைணிக சிரோமணி, மதுர ஞான கான வித்தகர், தந்த்ரி விலாஸ், வைணிக ஸ்வயம்பு, வீணை வாத்ய வித்யாதரன்,

வீணையோகி

திரு. எஸ். பாலசந்தர்

பேராசிரியர்:
டி.வி.ராமாநுஜம்

வீணையின் யோகம்

எந்தத்துறையிலும் 'மேதாவி' என்று பலரால் போற்றப்பட வேண்டுமானுல் அந்தத் துறையில் 'அசாதாரணமான' திறமையையும் ஆற்றலையும் அடைய வேண்டும்.

கிரிக்கெட்டில் பிராட்மனேயும், ஹாக்கியில் தியான்சந்தையும், மேனுட்டு சங்கீதத்தில் பிடிலைக் கையாளுவதில் மெனுஹினேயும், மிருதங்கத்தில் பாலக்காடு மணியையும், நாதஸ்வரத்தில் ராஜரத்தினத்தையும், நாடகப் பாட்டுக்களில் கிட்டப்பாவையும் மேதாவிகள் என்று விஷயமறிந்தோர் கூறியுள்ளனர்.

ஏன்? அவர்களுடைய பாதைகளில் அவர்கள் அடைந்த ஒப்பற்ற முன்னேற்றம் தான் இதற்குக் காரணம்.

கர்னடக சங்கீதமென்ற மிகப் பெரிய சமுத்திரத்தில் வீணை என்ற ஒப்பற்ற வாத்தியத்தைக் கையாண்டு அரிய, பெரிய சாதனைகள் பலவற்றைப் பல்லாண்டுகளாக —குழந்தைப் பருவத்திலிருந்தே— செய்து காண்பித்து, இந்தியாவின் பல பாகங்களிலும் ரசிகர்களின் வியப்பையும் பாராட்டுகளையும் பெற்ற மேதை, திரு. பாலசந்தர்.

அனுபவம் முதிர்ந்து, பல பெரிய வித்துவான்களின் இசை நுட்பங்களைக் கேட்டறிந்து சங்கீத விமர்சனங்களும், புத்தகங்களும் எழுதியுள்ள பிரபல எழுத்தாளர் திரு. எல்லார்வி அவர்கள், திரு. பாலசந்தரின் மேதா விலாஸத்தைப் பற்றி— எனது வேண்டுகோளுக் கிணங்கி — சில தினங்களுக்கு முன்பு அரிய உண்மைகளை எனக்கு அன்புடன் எழுதியனுப்பினுர்.

ஈடு இணையற்ற நடிகரான அவ்வை திரு. டி. கே. சண்முகம் அவர்களும் என்னுடன் ஒரு சமயம் திரு. பாலசந்தரின் அற்புதத் திறனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது 'வீணையிலே புகுந்து அவர் மெய் மறந்து ஆனந்தமாக விளையாடுகிருர்! என்னென்ன சப்த ஜாலங்களை எழுப்புகிருர்! என்ன நயம்! என்ன குழைவு! என்ன காம்பீர்யம்!" என்று வியந்து பாராட்டினுர்.

அவருடைய வாசிப்பில் நாம் சில சமயம் இடி முழக்கத்தையும் கேட்கலாம். சில சமயம் குயிலின் மிக மிருதுவான கூவலையும் அனுபவிக்கலாம். கமகப் பொழிவுகளை இனிக்கலாம். ஒப்பற்ற கார்வைகளைச் சுவைக்கலாம். விச்ராந்தியாகவும் வாசிப்பார்; அதி துரிதமாகவும் வாசிப்பார்.

வீணையை வாய்ப்பாட்டுப்போல் இசைப்பது வீணையோகி பாலசந்தரின் தனிப் பெருமை. தந்திகளை நன்கு இழுத்து, மிகச் சிறந்த முறையில், ஏற்ற இடங்களில் அழுத்தமான அசைவுகளையும், புல்லரிக்கும் கமகங்களையும் அளித்து வீணையிலிருந்து ஒரு சங்கீத பூபதி மஹாராஜபுரத்தின் குரலிலிருந்து வரும்—இன்னிசையைக் கிளப்பும் தனிப்பெருமும் ஆற்றல் இந்த வீணையோகியின் மதிப்பில்லாச் செல்வம்.

சாதாரணமாக வீணையின் பஞ்சம ஸ்தான மேட்டிலிருந்து கைசிக நிஷாதத்தைத் தந்தியை இழுத்துப் பிடிக்கவே மற்றவர்கள் தயங்குகிற நிலையில், சஞ்சாரக் கிரமத்தில் படிப்படியாகச் சென்று 'தாரஸ்தாயி சுத்த மத்திமம்' வரை அங்கங்கே நுணுக்கங்கள் பளிச்சிடப் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுபவர் மேதை பாலசந்தர்.

TOWARDS INTEGRATION ....

THE BOMBAY TAMIL SANGHAM has been the pioneer institution devoted to the Literary, Cultural, Social and Educaional needs.

This Sangham not only interprets the Tamil Culture but also spreads the glory of Tamil Nadu among the non-Tamil speaking people.

EASUN congratulates The Bombay Tamil Sangham on the occasion of Drama — Music Festival and wishes them all success in their promotional, integration actvities and services.

THE EASUN GROUP :

EASUN ENGINEERING COMPANY LIMITED.

HACKBRIDGE-HEWITTIC AND EASUN LIMITED.

ESWARAN & SONS ENGINEERS PRIVATE LIMITED.

EASUN PRODUCTS OF INDIA PRIVATE LMITED.

MADRAS-1.

மிகச் சிறந்ததான மந்திர ஸ்தாயி சஞ்சாரம் மறைந்து வருகிற இந்நாளில், நம் பாலசந்தர் அந்த ஸ்தாயி சஞ்சாரத்தின் சுகத்தை நன்கறிந்து அதற்குப் பிரதான்யம் அளித்து, அதில் உள்ள கடின உழைப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மேருவுக்கும் புருடைக்கும் இடையே தந்தி இறக்கத்தில் விரல்களின் அழுத்தத்தால் மட்டுமே கூடிய ஒரு உத்தியால் அதியற்புதமாக ஒரு சஞ்சாரத்தை அமைத்து ஒன்றரை ஸ்தாயி சஞ்சாரம் செய்து, தாம் மகிழ்ந்து, ரசிகர்களையும் மகிழ்விப்பது இவரது தனித் திறன் என்று அனுபவஸ்தர்கள் பாராட்டியுள்ளனர்.

பட்டங்களும் பரிசுகளும் பாராட்டுகளும் வந்து குவிகின்றன. ஆனால், அவர் மிகமிக விரும்புவது சாதகம்; மேலும் மேலும் சாதகம் செய்து, வீணை ஒலியில் உள்ள கலைமகளின் அருளுக்கு மேலும் மேலும் பாத்திரமாகி வீணையின் பெருமையை உலக மக்களுக்கு இன்னும் அதிகமாக உணர்த்தி, எங்கு பார்த்தாலும் எப்பொழுதும் வீணை கானம், வீணைக் கச்சேரிகள் நடந்துகொண்டிருக்க வேணும் என்பதே. ★

CALICO INDUSTRIAL ENGINEERS

Manufacturers of

TEXTILE WET PROCESSING MACHINERY

Continuocs Bleaching Plant.
Flash Bleach Range.
Continuous Dyeing Plant.
Chainless Mercerisers.
High speed Singeing Machine.
Polymerising Machine.
Bleachers Washing Machine.
Drying Ranges.
Kuster's Aquatroll Mangles.
Pneumatic Mangles.
Beam Dyeing
Beam Batching.
Thermosol Dyeing Plant.
Hot flue Drier.
Float air Drier.
Automatic Dye Jiggers.
Semi-automatic Dye Jiggers etc.

Chakla, Andheri, Bombay-69.

Phone — 574381-82-83   Grams : 'Wet Process', Bombay-58.

AGENTS :

ASSOCIATED TEXTILE ENGINEERS

43, Forbes Street, Bombay-1.

With the Best Compliments
of

SUPREME MOTORS (PVT.) LTD.

NEW DELHI.

Authorised Dealers of TATA DIESEL vehicles.

Head Office :

ASAF ALI ROAD,
NEW DELHI.

Service Centres :

1) HISSAR ROAD, ROHTAK.
2) DELHI ROAD, HISSAR.

DISAPPOINTMENTS CAN COME ONLY FOR THOSE WHO MAKE APPOINTMENTS WITH THE FUTURE. DO MAKE APPOINTMENTS — BUT ONLY WITH THE PRESENT. THEN DISAPPOINTMENTS CAN NEVER NEVER COME.

— SWAMI CHINMAYANANDA.

With Best Compliments
from

BAND BOX

BOMBAY.

Branches :

Wodehouse Road	Grant Road	Sion
Kemp's Corner	Kala Ghoda	Worli
Churchgate	Kalbadevi	Andheri
Mohamedali Road	Byculla	Bandra
Ghatkopar	V. P. Road	Dadar

தமிழில் நாடகம்

நாரண. துரைக்கண்ணன் *

ஒரு நாட்டின் உயர்வை - கலாசாரப் பண்பைக் கண்ணாடியாகக் காட்டக் கூடியவை கலை இலக்கியங்களேயாகும் இக்கலை இலக்கிய வளர்ச்சியைக் கொண்டே அந்நாட்டின் பெருமையைப் பிறநாட்டார் உணர்ந்து மதித்துப் போற்றுவர். ஏனென்றால் கலை இலக்கியங்களால்தான் நாட்டுப் பண்பாடு வெளிப்படும்; நாகரிகம் தென்படும்.

அறுபத்து நான்கு கலைகளில் சிறந்தது நாடகம். இந்நாடகக் கலை இலக்கிய அடிப்படையில் வளர்வதால் இதற்கு மற்றக் கலைகளுக்கு இல்லாத தனிச் சிறப்புண்டு.

இந்நாடகக் கலையில் 'வேற்றியல்' என்றும், 'பொதுவியல்' என்றும் இரு பிரிவுண்டு. இலக்கியம், கலை நாகரிகங்களில் மேம்பட்டவர்கள் கண்டு களிக்கிற நாடகங்கள் வேற்றியல் நாடகங்கள்' என்றும், நாட்டுமக்கள் அனைவரும் பொதுவாகப் பார்த்து மகிழ்கிற நாடகங்கள் 'பொதுவியல்' நாடகங்கள் என்றும் கூறப்படுகின்றன. முடியாட்சி மெல்ல மெல்ல ஒழிந்து குடியாட்சிக் காலம் புலரத் தொடங்கியதுமே, செல்வம், செல்வாக்குள்ளவர்கள், கலை நாகரிகத்தில் மேம்பட்டவர்கள் மட்டுமே கண்டு களித்து வந்த வேற்றியல் பிரிவு மறைந்து அதன் தன்மையுடன் பொதுவியல் நாடகங்கள் உருவாகி வளரலாயின.

பழைய தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் நாடகக்கலை குறித்துப் பல விவரங்கள் காணப்படுகின்றன. ரசம், பாவம் ஆகிய பகுதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. நாடகத்தை 'பண்ணை' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். காண்போர் உள்ளங்களில் குதூகல உணர்ச்சியை விளையாட்டாக உண்டாக்குவதால், நாடகத்துக்குத் தொல்காப்பியர் 'பண்ணை' எனப் பெயர் இட்டிருக்கலாம். சுவை குறித்துக் கூறுகிற பகுதியில், 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்' என முதல் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

மேலும் தொல்காப்பியர் நாடக வழக்கு என ஒரு வழக்கைக் கூறுகிறார். இதிலிருந்து பண்டைக்காலத்திலேயே 'உலகியல் வழக்கு' வேறு, 'நாடக வழக்கு' வேறு என வகுத்து வரையறை செய்திருந்தார்கள் என்று தெரிகிறது. உள்ளதை உள்ளவாறு விவரிப்பது உலகியல் வழக்கு என்றால், வாழ்க்கை நிலையைச் சிறிது மிகைப்படுத்திக் காட்டுவது நாடக வழக்கு ஆகும் என்று உணருகிறோம்.

LOW PHOSPHORUS LOW SULPHUR HIGH CARBON
FERROMANGANESE
MEDIUM & LOW CARBON FERROMANGANESE

and

SILICO MANGANESE
Manufactured by Electric Furnace
At our factory at Dandeli, Mysore State.
We also manufacture FERRO TITANIUM.

ELECTRO METALLURGICAL WORKS PVT. LTD.
20, Sir Phirozshah Mehta Road,
Fort, BOMBAY-1.

With Best Compliments

from

INDIA UNITED MFG. CO.
MANUFACTURERS OF GREY DHOTI & LONG CLOTH
154/56 Kalbadevi Road,
Bombay-2.
Telephone : 315164.

தொன்மை வாய்ந்த நாடகக்கலை முதலில் தமிழ்க் கூத்துக்கள் வாயிலாக வளர்ந்திருக்க வேண்டும். நாடகக்கலை செம்மையாக உருவாவதற்கு முன் வசைக்கூத்து புகழ்க் கூத்து, வேத்தியல் கூத்து, சாந்திக் கூத்து, ஆரியர் கூத்து, தமிழ்க் கூத்து, தேசியக் கூத்து, மார்க்கக் கூத்து, தெருக் கூத்து என்றெல்லாம் இருந்திருக்கின்றன.

நாடகக் கலையில் மெய்ப்பாட்டுச் சுவை மிகுந்திருக்கிறது. இம்மெய்ப்பாட்டுச் சுவைக்கு மேலும் சுவை சேர்ப்பவை இலக்கியமும், இன்னிசையுமாகும். இதனால் தான், முத்தமிழில் இயலையும் இசையையும் முன்னே தள்ளி முடிவாக நாடகம் இடம் பெற்றிருக்கிறது.

நம் நாட்டில் பண்டைக்காலத்திலிருந்து இன்று வரை உண்டாகியிருக்கும் நாடகங்கள் நடிப்பதற்காகவே இயற்றப்பட்டிருக்கின்றன. மேனாட்டினர் நடிப்பதற்காக மட்டுமல்லாமல், படிப்பதற்காகவும் நாடகங்களை இரு பிரிவாகப் பிரித்து எழுதி வருகின்றனர். இவர்களைப் பின்பற்றி நம்மவரும் சிறிது காலமாகப் படிப்பதற்காகவும் நாடகங்கள் ஆக்கி வருகின்றனர்.

பண்டைக் காலத்தில் நம் தமிழில் நாடகங்கள் இருந்தன என்பதற்கு 'சிலப்பதிகாரம்' அரங்கேற்றுக் காதை சிறந்த ஆதாரமாக இருக்கிறது. ஆடலரங்குகள் மக்களுடைய காட்சிக்கு எளிதாக இருக்கும்படியாக ஊரின் நடுவே அமைத்திருந்தன என்றும், கூத்த சாக்கையன் சாக்கைக் கூத்தாடினன், நடராஜப் பெருமானின் ஆட்டத்தைப் பாவத்துடன் ஆடிக் காட்டினன் என்றும் வருகிற குறிப்புகள் அந்த நாளில் நாடகத்துக்கு மக்களிடையே இருந்து வந்த செல்வாக்கைத் தெரிவிப்பனவாயிருக்கின்றன.

திருக்குறளில், 'கூத்தாட்டு அவைக் குழாத்து'என்றும், மணிமேகலையில் 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' என்றும், திருவாசகத்தில் 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்றும், 'நகலே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே' என்றும் வருஞ் சொற்றொடர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாடகங்கள் நடந்து கொண்டிருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன.

பதினேழாம் நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், யட்சகானம், தெருக்கூத்து விலாசம் முதலிய இசை நாடகங்கள் தோன்றலாயின. நாடகத்தோடு நடனமும் இணைந்து வளர்ந்தது இவற்றில் மோன நாடகம் என்றும், இசை விரவிய நடன நாடகமென்றும் இருவகை நடன நாடகங்கள் ஏற்பட்டன. சேர நாட்டில் (கேரளத்தில்) ஆடப்பட்டு வரும் 'கதகளி' நாடகங்கள் நடன நாடகங்களுக்குத் தக்க சான்றாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகமும் இராமச்சந்திர கவிராயர் எழுதிய பாரத விலாச நாடகமும், கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் கீர்த்தனை நாடகமும் வெளிவந்தன. இதைத் தொடர்ந்து புராண, இதிகாச, காவிய நாடகங்கள் பல தோன்றலாயின. கிறித்துவம், இஸ்லாம் சமய நாடகங்களும் நடந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டு நாடகப் பாணியைப் பின்பற்றித் தமிழில் ஏராளமாக நாடகங்கள் வெளிவரலாயின. சூரியநாராயண சாஸ்திரி, பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற பேரறிஞர்கள் புதுமை நாடகங்கள் பல வற்றைப் படைத்துத் தந்து, தமிழ் நாடகக் கலைக்குப் பெருமை தேடித் தந்தனர்.

அக்காலத்தில் நாடகம் என்பது கதை தழுவிவரும் கூத்தேயாகும். காளிதாசனின் சாகுந்தலம் நாடகம் போன்றதோ, ஷேக்ஸ்பியரின் ஹாம்லெத் போன்றதோ

With

Best

Compliments

STELMAC ENGINEERING PRIVATE LIMITED

Military Road, Marol,

Bombay-59.

Manufacturers and Suppliers of :

DISTRIBUTION BOXES, STREET LIGHT FIXTURES, EARTHING SETS, STAY SETS, CUT OUTS, KIT KAT FUSES ETC. TO THE ELECTRICITY BOARDS IN INDIA FOR THEIR RURAL ELECTRIFICATION AND LIFT IRRICATION PROJECTS.

Phone No : 576545 Cable : STELMAC

அல்ல. இந்தக் கதை தழுவிய கூத்துக்கள் கூட நூல் வடிவில் ஒன்றுங் கிடைக்கவில்லை. பெயர்கள் மட்டும் கிடைக்கின்றன. ஒரு சிலர் சொல்வதுபோல் தமிழில் நாடகங்களே தோன்ருமலிருந்திருந்தால் சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் நாடக அரங்க அமைப்பு, நடிக நடிகையர் லட்சணம் முதலியவை பற்றி இலக்கண விதிகள் ஏற்பட்டிருக்க முடியாது. சமண சமய ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்பட்டிருந்த காலத்தில் சமணத்துறவிகளால் நாடகம், நடனம், இசை முதலிய கலைகளின் வளர்ச்சி தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். இக்கவின் கலைகளுக்கான நூல்கள் போதியபடி கிடைக்காததற்கு இதுவே காரணமாயிருக்க வேண்டும்.

அப்படியும் கண்ணபிரான் பலதேவருடனும், நப்பின்னைப் பிராட்டியுடனும் ஆடிய கூத்துக்கள் 'பாலசரிதை' நாடகங்கள் என்ற பெயருடன் நடந்ததாக அறிகிரேம். இவற்றைப் பின்பற்றியே 'கீதகோவிந்தம்' இயற்றப் பட்டிருக்க வேண்டும்.

இடைக்காலத்தில் தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்தின் கல்வெட்டு ஒன்றில் தமிழில் இராசராசேசுவர நாடகம் என்ற ஒன்றை விசயராசேந்திர ஆசாரியனைத் தலைவனுக உடைய சில நடிகர்கள் வைகாசி விழாவில் ஆடியதாகக் குறிப்பு காணப்படுகிறது. திருவல்லீசுவரம், திருக்கழுக்குன்றம் முதலிய கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களைக் கொண்டும், இடைக்கால நாடகங்கள் உற்சவ காலங்களில் கோயில்களுக்குள்ளேயே நடத்தப்பட்ட விவரம் தெரிகிறது. இந் நாடகக் குழு தலைவரான ஆசிரியர் திருவாளன் எனச் சிறப்புப் பட்டத்துடன் அழைக்கப்பட்டார். இக் குறிப்புகளிலிருந்து இடைக்காலத்தில் கூட நாடகம் இழிவாகக் கருதப்படவில்லை எனத் தெரிகிறது.

ஐந்தாம் நூற்ருண்டில் மகாகவி காளிதாசன் பாரத இதிகாசத்திலுள்ள சில கிளைக் கதைகளைக் கொண்டு 'சாகுந்தலம்' முதலிய நாடகங்களை இயற்றியது போல் பன்னிரண்டாம் நூற்ருண்டில் விசாகதத்தர் 'முத்திரா ராட்சஸம்' என்ற அரசியல் நாடகமொன்றை எழுதினுர். கிருஷ்ணமிசிரர் என்பார் 'பிரபோத சந்திரோதயம்' என்ற அத்வைத நாடகத்தை இயற்றினுர். வேதாந்த தேசிகர் 'சங்கல்ப சூரியோதயம்' என்ற நாடகத்தை வரைந்தார்.

நாடகக் கலை இழிவாகக் கருதப்பட்ட காலம் 18, 19-ம் நூற்ருண்டுகளில் தான். இரணிய சம்மார நாடகம், புரூரவ சக்கரவர்த்தி நாடகம், உத்தர ராமாயண நாடகம், மார்க்கண்டேய நாடகம் முதலியவை பாடல்களுடன் வசனங்களும் கலந்து நடத்தப்பட்ட போதுதான் எப்படியோ யாராலோ நாடகக்கலை தரங்குறைந்தது என ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது.

1870-ம் ஆண்டில் தாழ்வுற்ற தமிழ் நாடகங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாச சுவாமிகள் போன்ருேர் தமிழ் நாடக உலகில் அடியெடுத்து வைத்தபின் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது எனலாம்.

உலக நாடக இலக்கியத்திலேயே கிரேக்க நாடகங்களுக்கு அடுத்த நிலையில் சமஸ்கிருத நாடகங்கள் தாம் சிறந்து நிற்கின்றன. சமஸ்கிருத மொழிக்குச் சமமான சிறந்த மொழி என மதிக்கப்பட்டு வரும் தமிழில் சமஸ்கிருதத்தில் உள்ளது போல் சிறந்த நாடகங்கள் எப்போது தோன்றும்? அசுவகோசன், பவபூதி, காளிதாசன், பாசன், சூத்திரகன் போன்ற சமஸ்கிருத நாடகாசிரியர்களைப்போல, தமிழ் நாடகாசிரியர்கள் தோன்றும் நாள் எந்நாளோ? ★

GRAMS :
CHIDIPIR

PHONE : 322027
320169
322943

With

the Best

Compliments

of

BOMBAY ANDHRA
TRANSPORT COMPANY

113, BHANDARI STREET,

CHAKLA, BOMBAY-3.

நாடக உருவம்



"வேணு"

ஒரு நாடகத்தின் வடிவம் (Form) எங்கோ ஒரு சூன்யத்திலிருந்து தோன்றுவது அல்லது நாடக ஆசிரியனின் அப்போதைய மன அவசத்தின் விளைவு என்பது விமர்சகர்கள் உட்பட பலருடைய எண்ணமாக இருக்கலாம். அதற்காக வடிவம் என்பது ஏதோ கடையில் சாமான்களைத் தேர்ந்தெடுப்பது போன்றது என்று ஒரேயடியாகக் கூற வரவில்லை. அது ஆசிரியனுக்குப் பளிச்சென்று தென்பட்டு, அவன் சொல்ல விழையும் விஷயத்திற்கு உருக்கொடுத்துவிடும். ஆனால் இந்த உருவம் ஏதோ சந்தர்ப்ப வசத்தால் கிடைக்கின்ற ஒன்று என்று எண்ணிவிடக்கூடாது வளர்ந்த குடும்பம், வாழும் சுற்றுச் சூழ்நிலை இவையே அந்த வடிவத்திற்கு நம்மையும் அறியாமல் முன் கூட்டியே வரைகோடு அமைத்து வைத்து விடுகின்றன.

'ரியாலிஸம்" என்ற யதார்த்த நாடகமாகட்டும் அல்லது அதற்கு நேர்மாறான இன்னொரு கோடி கவிதை நாடகம் எனும் கலைவடிவமாகட்டும்-இவை அத்துணையுமே குடும்பம், சமூகம் என்ற இரண்டிலும் தனி மனிதனுக்கு உண்டான சம்பந்தத்தைக் காட்ட முனைவதுதான்.

யதார்த்த நாடகம் என்பது நான்காவது சுவற்றை ஊடுருவி நம்மைப் பங்குபெற வைப்பதா அல்லது மற்ற வடிவத்தைப் போல் ஏதோ நம்மையும் தனித்த ஒன்றைக் காணுகின்றோம் என்ற புற உணர்வோடு சுவை காட்டுவதா என்பதெல்லாம் அறிவுக்குப் பொழுதுபோக்கான கேள்விகள்.

யதார்த்தம் என்பது ஒரு கலை முறை. அது பத்திரிகை நிருபர் வேலை போன்று நடந்ததை அப்படியே கூறுகின்ற ஒன்று அன்று. மேடை விளக்குகளின் ஒளியில் ஓர் அறை, அங்குள்ள பொருள்கள், மனிதர்கள், அவர்கள் ஒரே விஷயத்தை இரண்டோ அல்லது மூன்று மணி நேரமோ பேசித் தீர்ப்பது - இதுவா யதார்த்தம்?

Phones : 573383
571282

Cable : SAIFYRAIL
Bombay-59.

With Best Compliments

from

SAIFY RAILING WORKS

MILITARY ROAD, MAROL,

BOMBAY-59.

Manufacturers & Suppliers of Electrical transmission line materials like :

1. L. T. Distribution Boxes to control the L.T. side of transformers.
2. Main & Sub-main cable feeder pillars for underground electrical cables.
3. Cable distribution cabinets for underground telephone cables.
4. Pipe type street light fixtures.
5. Pipe type earthing sets for transmission towers.
6. L. T. & H. T. Stay sets.
7. Rewireable and HRC Switches and switch fuse units.
8. I.C. Cut outs and Kit Kat fuses,

and all types of electrical equipment for rural electrification Schemes.

Regular suppliers to :

1. Madhya Pradesh Electricity Board, Jabalpur.
2. Maharashtra State Electricity Board, Bombay.
3. Gujarat Electricity Board, Baroda.
4. Mysore Sate Electricity Board.
5. Kerala State Electricity Board, Trivandrum.
6. Various other government and semi-government departments.

இருக்கவே முடியாது. இதுவும் 'எக்ஸ்பிரஷனிஸம்'; 'சிம்பாலிஸம்'; அதாவது பதியவைக்கின்ற, அடையாளம் காட்டுகின்ற மற்ற வடிவங்களைப் போல் முழு பிரக்ஞையோடு உருவாக்கும் ஓர் அமைப்புதான். இது கலைத்திறத்திலே மற்றவற்றிற்கு எவ்விதத்திலும் குறைந்தது இல்லை; ஆனாலும் இந்த உத்தியைப் பேனுபிடிக்கத் தெரிந்தவன் எவனும் கையாண்டு எழுதிவிடலாம் என்ற பிரமையை ஏற்படுத்தி விடுகிறது.

உருவங்கள் பலவாயினும் லட்சியம் ஒன்றாகத் தான் இருக்க முடியும். தான் காணுகின்ற ஒன்றினைத் தன் அக உணர்வும் தன் தனிப்பார்வையும் கொண்டு மற்றவர்களையும் காணச் செய்வதுதான் ஆசிரியனின் கலை. அவனுடைய அந்த அனுபவத்தில் மறைவாய்க் கிடக்கும் சிறப்பை நாடகத்தின் மையக் கருத்தாக்கி அதனை அவன் சுழியிட்டுச் சுட்டிக்காட்ட முயலும் போதுதான், அன்றாடம் பழகிய ஒன்று அபூர்வமான கலை வடிவம் பெற்றுத் திகழ்ந்து விடுகின்றது.

நூதனமான மேடை அமைப்பு, புதுமையான இசைப் பின்னணி, திறம் வாய்ந்த ஒளி வீச்சு இவை இருந்தும் நவீன நாடகங்கள் பழையகால நாடகங்களைப் போல் பெருவாரியான மக்களைக் கவரமுடியாதது ஏன்?

நாடக வடிவம் என்பது நாம் நினைப்பதைப்போல் இல்லாமல் சற்று ஆழமாக சிந்திக்கவேண்டி இருப்பது தான் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது.

மனிதன், குடும்பம், சமூகம் — இந்த மூன்றும் வெறும் சொற்கள் மட்டுமல்ல. இவற்றின் அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றோடொன்று இணைந்து நிகழ்ச்சிகள் வளர்ந்து விரியும்போதுதான் ஓர் அற்புதமான கலை வடிவம் பிறக்கின்றது. மனிதன், குடும்பம் என்ற ஒரு சிறு வட்டத்துக்குள் மட்டுமே சுழன்று ஓய்வதை அது காட்டி அமையாது, அவன், தான் அந்த வட்டத்துக்கு வெளியே உள்ள சமுதாயத்தையும் தழுவிச் செயல்படும்பொழுதுதான் நாடகத்தின் உருவம் சிறக்கும் என்பது உறுதி. சமுதாயம் நாடகத்தில் களனாகி வரும் பொழுது மட்டிலுமே அதன் பிரதிநிதியாக வந்து காணுகின்ற ரசிகன், தன்னை அவையிலே மறந்து அரங்கிலே உணர்கின்றான். நாடகமும் யதார்த்தம் என்பதற்கு முழுப் பொருளையும் நிறைவையும் கண்டுவிடுகின்றது.

நாடகத்தை ஆசிரியனோ ரசிகனோ ஒரு பொதுவான வாழ்க்கை அனுபவத்திற்கு உள்ளாகிக் காட்டுபவனாகவும், காண்பவனாகவும் ஆகிறான். அவன் அந்த அனுபவத்தை நாடக நேரத்தில், பாம்பு தோலை உரிப்பது போல் கழற்றி வைத்துவிடுவதற்கில்லை. நமக்கு எல்லோருக்கும் ஒரு வேடம் உண்டு· பிள்ளை, பெண், அண்ணன், தம்பி இவற்றில் எந்த வேஷத்தையும் சட்டென்று கலைத்துவிட முடியாது

ஆனால், இவை யாவுமே நமக்கு நினைவு தெரிவதற்கு முன் நம்மோடு ஒட்டிப் பிறந்தவை. நண்பன், விரோதி, ஆசிரியன், மாணவன், தொழிலாளி, முதலாளி - இன்னும் இதுபோன்று எத்தனையோ - பின்னர் சுய உணர்வு ஏற்பட்டதும் தோன்றியவை இவை யாவும் நமக்குப் புறம்பான தொடர்புகள். எனவே குடும்பம் என்பது ஓர் உணர்வு; சமுதாயம் என்பது ஓர் அறிவு முந்தையது இயல்பான ஒன்று; பிந்தையது சார்பானது, சந்தர்ப்பவசமானது. இவை இரண்டும் இணைய வேண்டும். அப்பொழுது தான் நமக்கு முன் உள்ள பிரச்சினைகள் தெளிவாகப் புலப்படும்.

இந்த நியதிக்குப் புறம்பான ஒரு சமுதாயத்தை எந்த நாடக ஆசிரியனும் படைத்துவிட முடியாது. அப்படி முயன்றால் நாடகப் பாத்திரங்கள் ஓர் ஒழுங்கு முறையோடு இயங்க வேண்டி, அவன் நிர்மாணிக்கும் கட்டுக்கோப்பு சிறு காற்றில் சிதறிவிடக் கூடிய மணல் வீடாகத்தான் இருக்கும்.

With Best Compliments

from

P. S. JAIN MOTOR CO.

Grand Trunk Road,

Jullunder City.

Authorised Dealers for

TATA DIESEL VEHICLES

THE ROSE NEED NOT DECLARE 'I am fragrant'.
Fragrance is its very nature.

A GOD — REALISED MAN-DOES NOT, AND CANNOT SAY,
'I have realised God'.

HE CAN ONLY JUST BE —

— *SWAMY CHINMAYANANDA.*

WITH BEST COMPLIMENTS FROM

CRAVATEX LIMITED

BOMBAY.

அது இறுதியில் மனத்தத்துவப் போராட்டச் சிக்கல்களில் சுழன்று நடைமுறை வாழ்க்கையின் அப்பட்டமான எதிர்ப்புகளையும் போட்டிகளையும் நேருக்கு நேர் நின்று எதிர்க்க முடியாமல் ஒய்ந்துவிடக்கூடும். மனித ஜாதி, சமுதாயச் சூழலில் இருந்து விலகித் தனித்து நிற்க முடியாதபோது, இந்த அடிப்படை உண்மையை அலட்சியப் படுத்துவது அறிவீனம்.

மரம் இல்லாமல் கனி உண்டா என்ன? உலகம் இல்லாமல் தனிக் குடும்பம் இயங்க முடியுமா ?

நாடகத்தின் கட்டுக்கோப்பு அதன் மையக் கருத்தைச் சுழியிட்டுக் காட்டுவதின் மூலம்தான் தெளிவாகும். கலைவடிவம் என்பதும் மிகப் பெரிய சவால்களை ஏற்றுக் கொள்ளும்பொழுதுதான் வலுப்பெற்று உருப்பெறும். உணர்ச்சி என்பது ஒரு நாடகத்திற்குத் தேவையானதாக இருக்கலாம். ஆனால், அதற்குப் போராடுவதற்குரிய வலு இல்லை. ஏன், போராட்டத்திற்குப் பக்கத்திலே கூட அதற்குச் செல்ல திறன் கிடையாது.

பின்னர், ஒரு நாடகத்தின் குறிக்கோள் எதுவாக இருக்க முடியும்? மனிதன் உலகத்து இரகசியங்களை எல்லாம் புரிந்து கொள்ள விஞ்ஞானத்தின் துணை கொண்டு முயலுகின்றான். ஆனால், இம்முயற்சிகள் யாவும் ஓரளவுக்குத்தான் புதைந்து கிடக்கும் அந்த இரகசியங்களின் இயல்பை ஊமைக் கனவுபோல் காண்பிக்க முடியும்

நாடக அரங்கம் இந்த இரகசியத்தின் மேலுறையைக் கிழித்துப் பிளந்து 'இது இப்படித்தான் இருக்கு'மென்று சொல்லி விடும்.

ஆகவே, நாடக மேடையின் பணி சுவைத் திறம் பற்றியது மட்டும் அன்று. அது, மக்கள் சமூகத்திற்கு, இறந்த, வருங் காலங்களைப் பற்றி மட்டும் அல்லாமல், இன்றைக்குள்ள இந்த கணத்தைப் பற்றியும் நம்மை நோக்கி நேர் நின்று பயமுறுத்தி நம்மைப் பலவீனப்படுத்துகின்ற நிகழ் காலத்தை-தெள்ளத் தெளிய இனம் காட்டி விடுவது தான்.

நாடகத்தின் வடிவம் இதை - இதைத் தான்-முயல வேண்டும். இல்லாவிட்டால், அது மக்கி அழிந்துவிடும். இன்றைக்கு வாழும் நம்மை உணர்த்தி, வளருகின்ற உலகத்தோடு நம்மை வாழச் செய்வதுதான் அதன் தலையாய கடமை.

கலைகாணும் புதுமை இதுதான்.

நாகரிகப்படுத்துவதுதான் நாடகத்தின் வேலை.

அவ்வாறு பண்பு பெறுவதற்குத் தயாராக இருப்பதுதான் நாடகக் கலைக்குப் படைப்பவன், பார்ப்பவன் இருவருமே செய்யக்கூடிய பெருந்தொண்டு.

ஒழுங்கு என்பது நம் ஆன்ம விடுதலைக்குத் தவிர்க்க முடியாத தேவை. குடும்பம், சமுதாயம் என்ற இருவேறு நிலைகளையும் சமன் செய்து காட்டி, அவை கொண்டுள்ள ஆசைகளையும் அவை எழுப்பும் கேள்விகளையும் தொடர்புபடுத்தி இயங்குவது தான் நாடகத்தின் பொலிவு உருவம். கூடியிருப்பவர்களுக்கு மத்தியில் தன்னுடைய குடும்ப வாழ்வையும், அந்த சமுதாயக் கூட்டத்தைத் தனி மனிதன் எப்படி ஓர் குடும்பமாகவே கொள்ளவேண்டும் என்பதையும் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஆராய்ந்து விளக்குவது தான் வளரும் இக்கலைக்கு வாழ்வு தரவல்லது. ★

With

Best

Compliments

from

MOTOR SALES

Opp. Railway Station,

Char Baug,

Lucknow.

Authorised Dealers for

TATA DIESEL VEHICLES

We build
FLOATING ROOF TANKS
PRESSURE VESSELS
to exacting standards

We built for

GUJARAT REFINERY □ MADRAS REFINERY □ ESSO REFINERY □ LUBE INDIA □ GAUHATI REFINERY □ BARAUNI REF
□ SHELL REFINERY □ IOC LUBE BLENDING MADRAS □ OIL & NATURAL GAS COMMISSION □ COCHIN FERTIL.
□ MADRAS FERTILISERS □ GUJARAT STATE FERTILISERS □ FCI TROMBAY □ NOCIL, & others

We are now building for

HALDIA REFINERY □ COCHIN REFINERY □ PLASTIC RESINS & CHEMICALS □ NAGPAL AMBADI PETROCHEM REFI
□ HEAVY ELECTRICALS, & others

VIJAY TANKS & VESSELS PRIVATE LIMITED

Regd. Office: HAJI ADAM MANSION. HOMJI STREET, BOMBAY-1.
Factory: AGRA ROAD, MU UND, BOMBAY-80

Published by V. Nagarajan (Vena), for The Bombay Tamil Sangham, Bombay-22 and printed by R. Murugiah, at Sevak Press, 4 & 5, Shalimar Industrial Estate, Bombay-10. Phone :